மஞ்சரி

JULY '48

RECEIVED
22 AUG 194

கவர்னர் ஜெனரல் பதவி

★

கனிகான் கடிதம்

★

முகலாயர் காதல்

★

பெண்களின் முன்னணி

★

தேவ கன்னிகை

★

ரஜாக்கர்கள்

★

ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

-6-
அணா

வர்ண விசித்திரம்

வானவில்லிலே ஏழு வர்ணங்கள் பொலிந்து நம் கண்ணுக்கு விருந்தாகின்றன. சித்திரகாரரும் பல வர்ண விசித்திரங்களைத் தம் ஓவியங்களிலே காட்டி, நம் கண்ணையும் மனத்தையும் வசீகரிக்கிறார். அதேபோலப் பலவிதப் பொருள்களைத் தாங்கிய வானவில் 'மஞ்சரி'.

இதுவரையில் இருந்ததுபோல அல்ல ராஜாஜியின் 'கவர்னர் ஜெனரல் பதவி' (பக். 1); 'தாய்ப்பால்' குடிப்பது (பக். 57) குழந்தைக்கு உலக வாழ்க்கையின் முதல் பயிற்சியாகும்; 'தமிழ்ப் பொது ஜனம்' (பக். 23) பற்றித் தமிழர்களே ஆராய்கிறார்கள்; ஹைதராபாது 'ரஜாக்கர்கள்' (பக். 69) வரலாறு ஒரு விசித்திரம்—இவை போன்ற பல பொருள்களும் விசேஷ அம்சங்களும் இந்த இதழில் நிறைந்திருக்கின்றன.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்
நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. குமாரஸ்வாமி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
மோ. ஸ்ரீ. செல்லம்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
குமுதினி
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
டி. வி. பரமேசுவரன்
ச. கு. கணபதி ஐயர்

ஓவியர்கள்: **ஸாமி; சங்கர்; மகான்.**

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை, 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 8 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை "ஸர்க்குலேஷன் மானேஜர்" என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

கவர்னர் ஜெனரல் பதவி

முதலில் பிரிட்டிஷார் நாடு பிடிப்பதற்காக இந்தியாவுக்கு வரவில்லை. வர்த்தகர்களாக வியாபாரம் செய்யவே வந்தார்கள். வந்து கல்கத்தாவில் போர்ட் வில்லியம் என்ற கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள். சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிக்கொண்டார்கள். வங்காளம், பிஹார், ஒரிஸ்ஸா, சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களில் பல இடங்களைப் பல விதமாகக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த வர்த்தகர்களின் தலைமைக் காரியாலயம் பிரிட்டனில் இருந்தது. இதற்குத்தான் கிழக்கிந்தியக் கம்பெனி என்று பெயர். இந்தக் கம்பெனியார் இந்தியாவில் அநேக வழிகளாலும் சில சண்டைகளாலும் சம்பாதித்த ராஜ்யத்தைத்தான் பின்னால் பிரிட்டிஷ் அரசாங்கம் மெல்ல மெல்ல நேரே தன் ஆதிக்கத்துக்குள் சேர்த்துக்கொண்டது.

1773-ஆம் ௵ ரெகுலேடிங் ஆக்ட் என்று ஒரு சட்டத்தைப் பிரிட்டிஷ் சர்க்கார் இயற்றியது. அந்தச் சட்டத்தின் கீழ் வாரென் ஹேஸ்டிங்ஸ் என்பவர் 1774-ஆம் ௵ முதல்முதலில் வங்காள கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்றார். இந்தக் கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை சொல்ல நான்கு கவுன்ஸிலர்கள் உண்டு. ஆலோசனைச் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல், வங்காளம், பிஹார், ஒரிஸ்ஸா முதலிய இடங்களை நிர்வாகம் செய்தார். அதோடு சென்னை, பம்பாய் இரண்டு ராஜதானிகளின் நிர்வாகத்தையும் மேற்பார்வை பார்த்துக்கொண்டார். மாகாண கவர்னர்களை நியமிக்கவும் தள்ளவும் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு.

ஆதாரம் :

டாட்வெல் எழுதிய இந்திய சரித்திரம்.

ராலின்ஸன் எழுதிய இந்திய சரித்திரம்.

எட்டி, நாட்டன் இருவரும் 1935-ஆம் வருஷ இந்திய சர்க்கார் சட்டம்பற்றி எழுதிய புத்தகம்.

இந்தியன் பார்லிமெண்டு ஏப்ரல் '48 இதழ்.

ஜகப்பிரவேச சந்திரர் தொகுத்த 'இந்தியா முன்னேறுகிறது' என்ற புத்தகம்.

சமீப நிகழ்ச்சிகள் பற்றிய பத்திரிகைச் செய்திகள்.

பின்னால் இன்னும் ஐந்தாறு கவர்னர் ஜெனரல்கள் வந்தார்கள். மேலும் பல இடங்களைப் பிடித்தார்கள். 1807-ஆம் ஆண்டு வந்த முதல் மிண்டோ பிரபு முதல் முதலாக இந்தியாவுக்கே கவர்னர் ஜெனரல் ஆகிவிட்டார். அப்போதெல்லாம் கம்பெனியார்தாம் கவர்னர் ஜெனரலையும் அவருடைய கவுன்ஸிலர்களையும் நியமிப்பார்கள். ஆனால், இந்த நியமனங்கள் பிரிட்டிஷ் சர்க்காரின் அங்கீகாரத்துக்கு உட்பட்டவை. சில சமயம் கம்பெனியார் விரும்பும் பெயர்களைச் சர்க்கார் ஆட்சேபிப்பதுண்டு. அதனால் தகராறுகள் ஏற்படுவதும் உண்டு. மேலும், தம் கவுன்ஸிலர்களின் முடிவுப்படியே கவர்னர் ஜெனரல் நடந்துகொள்ள வேண்டும்; தாமாக ஒன்றும் செய்ய முடியாது. இதனாலும் சில தகராறுகள் நேரிட்டதுண்டு. சிறிது சிறிது மாறுதலுடன், 1858-ஆம் ஆண்டு வரைக்கும் நிலைமை ஏறக்குறைய இப்படியேதான் இருந்தது. கவர்னர் ஜெனரலை நியமிப்பதிலும் தள்ளுவதிலும் கம்பெனியாருக்கு அதுவரையில் ஒருவாறு அதிகாரம் இருந்தது; என்றாலும் அது நலிந்து கொண்டேதான் வந்தது.

இந்த நிலையில் 1857-ஆம் ஆண்டு 'சிப்பாய்க் கலகம்' என்று பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள் சொல்லும் முதல் இந்திய சுதந்தர யுத்தம் நடந்தது. அதில் பிரிட்டிஷார் வெற்றி பெற்று விட்டார்கள். இதோடு கிழக்கிந்தியக் கம்பெனியின் சகாப்தம் முடிந்தது. 1858-ஆம் ஆண்டு அதனிடமிருந்து இந்திய அரசாங்க நிர்வாகத்தை முற்றும் பிரிட்டிஷ் சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட்டது. அந்தச் சமயத்தில் விக்டோரியா மகாராணி வெளியிட்ட பிரகடனம் பிரசித்தமானது.

இந்தக் காலத்தில் தன் பட்டத்தில் இந்திய சக்கரவர்த்தினி என்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விக்டோரியா மகாராணி ஆசை கொண்டாளாம். அப்போது பிரிட்டிஷ் முதல் மந்திரியாக இருந்த பெஞ்சமின் டிஸ்ராலி என்ற பிரபலஸ்தருக்கும் இதில் சம்மதந்தான். ஆனால், மற்றவருக்கெல்லாம் இது பிடிக்கவில்லை. "ராணி ராணியாக இருப்பதை விட்டு, எதற்காகச் சக்கரவர்த்தினியாகவேண்டும்? சக்கரவர்த்தினி என்றால், வெற்றி, ஹிம்சை, ஒழுக்கக் கேடு ஆகிய அர்த்தமெல்லாம் அல்லவா தொனிக்கும்!" என்று பிரிட்டிஷ் மக்கள் பேசிக் கொண்டார்கள். டிஸ்ராலியே இதற்கு மூல புருஷர் என்று நினைத்து, அவரையும் கேலி செய்யக் கிளம்பினார்கள்: "சின்னக் கடைக்காரன் பென் 'ராணி ஹோட்டல்' என்று ஒரு ஹோட்டல் வைத்தான். அதன் பெயரை இன்று அவன் சக்கரவர்த்தினி ஹோட்டல் லிமிடெட் என்று மாற்றிவிட்டான்" என்றும், "டிஸ்லி-பென்-டில்லி, பாக்தாத் அநாதை" என்றும் பலவிதக் கேலிக் கதைகள் கட்டினார்கள். பிரிட்டனில் இருந்த பிரெஞ்சு ஸ்தானிகரும் கூட டிஸ்ராலியை ஓர் அற்பன் என்று குறிப்பிட்டு, "ராணியும் சக்கரவர்த்தினியும் பிறவியிலே பிறக்க வேண்டும். ஒருவர் இந்தப் பட்டங்களைச் சூடிக்கொள்வது அபாயமாகும்" என்று எழுதி, ராணியையும் தூஷித்தார்.

ராணிக்குச் சக்கரவர்த்தினிப் பட்டம் சூட்ட இது சமயமல்ல என்று, டிஸ்ராலி இந்தச் சமயத்தில் சும்மா

இருந்துவிட்டார். ஆனால், கவர்னர் ஜெனரலுக்கு மாத்திரம் முதல் முதலாக வைஸிராய் (ராஜப்பிரதிநிதி) என்ற பட்டத்தைச் சேர்த்து விட்டார்கள். இப்படி முதல் வைஸிராயும் கவர்னர் ஜெனரலுமாக இந்தியாவில் பதவி வகித்தவர் லார்டு கானிங் பிரபு.

ஆனால், சக்கரவர்த்தினிப் பட்டம் பெற ராணி இன்னும் கொஞ்சகாலம் காத்திருக்க வேண்டியதாயிற்று. 1876-ஆம் வருஷத்திலேதான் விக்டோரியா மகாராணிக்குக் 'கேஸர்-இ-ஹிந்த்' (இந்தியாவின் சக்கரவர்த்தினி) என்ற பட்டத்தைச் சூட்டுவதென்று டிஸ்ராவி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இதற்கு அவர் பலவிதச் சமாதானங்கள் சொன்னார்: 'சக்கரவர்த்தினிப் பட்டத்தில் என்ன தவறு? ஆண்டொனைன்ஸ் என்ற ரோம சக்கரவர்த்திகளின் ஆட்சி சொர்க்கத்துக்கு இணையாக இருந்ததல்லவா? என்றாலும், ராணி என்ற பட்டத்தையே இங்கிலாந்திலும் ஐரோப்பா சம்பந்தப்பட்ட சகல தஸ்தாவேஜிகளிலும் வைத்துக் கொள்ளப் போகிறோம். இந்தியா சம்பந்தப்பட்ட சட்டங்களிலும் நியமனங்களிலும் மட்டுமே சக்கரவர்த்தினி என்ற பட்டத்தைச் சேர்த்துக் கொள்ளப் போகிறோம்' - இப்படியெல்லாம் டிஸ்ராவி சமாதானம் சொன்னார்.

தன் சக்கரவர்த்தினிப் பட்டத்துக்கு வந்த எதிர்ப்பைக் கண்டு ராணிக்கு மகா வருத்தம் உண்டாயிற்று. அதவும் தான் கொண்ட விருப்பத்துக்காகத் தன் அருமைப் பிரதம மந்திரி டிஸ்ராவியை எல்லாரும் தாக்கியது ராணியின் வருத்தத்தை அதிகரித்தது. கடைசியாக 1877-ஆம் ஆண்டு முதல்முதலாக ராணியின் சார்பாக டில்லி தர்பார் ஒன்று நடத்தி, அதிலே சக்கரவர்த்தினி என்ற பட்டத்தை ராணி சூடிக்கொண்டதாகப் பிரகடனமும் செய்தார்கள்.

தனக்குச் சக்கரவர்த்தினிப் பட்டம் சித்தித்ததும் விக்டோரியா ராணிக்குப் பரமானந்தம். டிஸ்ராவிக்கு வந்தனம் செலுத்தி ஒரு கடிதம் எழுதினாள். அதிலே "விக்டோரியா, ரெஜினா எட் இம்பெராட்ரிக்ஸ் (சக்கரவர்த்தினி)" என்று குழந்தையின் குதூகலத்துடன் கையெழுத்திட்டு அனுப்பினாள். பிறகு, இந்தப் புதிய சக்கரவர்த்தினி ஒரு விருந்து நடத்தினாள். தன் வழக்கத்துக்கு விரோதமாகக் கீழ்நாட்டு ஆபரணங்களை யெல்லாம் ஆடம்பரமாக அணிந்துகொண்டு அந்த விருந்தில் சக்கரவர்த்தினி பிரசன்னமானாள். அவளுக்கு இந்திய ராஜாக்கள் பரிசளித்தவை அந்த ஆபரணங்கள். விருந்து முடிந்தது. சம்பிரதாய மரியாதைகளை மீறி, டிஸ்ராவி எழுந்து, ராணிக்கு வாழ்த்துக் கூறி, ஒரு சிறு பிரசங்கம் புரிந்தார். பாரசீகக் கவிகள் தோற்றுப்போகும் படி அலங்கார வர்ணனைகளைப் பொழிந்து ராணியைப் பாராட்டினார். ராணி துளியும் கூச்சப்படவில்லை. அதற்கு மாறாக, புன்சிரிப்புடன் மரியாதை செலுத்துவதுபோல் தலையசைத்தாள்.

இதற்கிடையிலே இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். 1858-ஆம் வருஷத்திலிருந்துதான், பிரிட்டிஷ் சர்க்காரில் இந்தியா மந்திரி ஏற்பட்டார். சட்டப்படி இந்திய வைஸிராய் உள்பட இந்திய சர்க்கார் முழுவதும் இந்தியா மந்திரிக்குச்

கட்டுப்பட்டவர்களே. இதனால் சில சமயங்களில் இந்தியா மந்திரிக்கும் வைஸிராய்க்கும் தகராறு வந்தது உண்டு. லார்டு எல்ஜின் பிரபு இந்திய வைஸிராயாக இருந்த போது, அவருடைய நிர்வாக சபை கொண்ட அபிப்பிராயத்துக்கு விரோதமாக இந்தியா மந்திரி ஸர் ஹென்ரி பௌலர் ஏதோ ஒரு முடிவு செய்தார். அதை இந்திய வைஸிராயின் நிர்வாக சபை ஆட்சேபித்தது. உடனே இந்தியா மந்திரி வெகு கண்டிப்பாக இந்திய சர்க்காரை எச்சரித்துவிட்டார். "பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு முடிவைச் செய்யும் முன்பு வைஸிராயின் நிர்வாக சபையினர் எந்த அபிப்பிராயத்தையும் சொல்லலாம். அவர்கள் ஒரு முடிவு செய்த பின்போ, இவர்கள் வாய் பேசாமல், அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்; அல்லது ராஜீநாமாச் செய்ய வேண்டும்" என்பதாக அவர் எழுதிவிட்டார்.

சுருங்கச் சொன்னால், சட்டப்படியும் சம்பிரதாயப்படியும் இந்திய கவர்னர் ஜெனரல் இதுவரையிலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரத்துக்கும் பிரிட்டிஷ் சர்க்காரின் கண்காணிப்புக்கும் பெரும்பாலும் கட்டுப்பட்டிருந்தார். இது முதலே இந்தியா மந்திரிக்கு ஜவாப் சொல்லவேண்டியவரானார். என்றாலும், இந்தியா மந்திரிகளும் கவர்னர் ஜெனரல்களும் அநேகமாக எப்போதும் ஒற்றுமையாகவே வேலை செய்து வந்தார்கள். ஸ்தலத்தில் உள்ள மனிதர் கவர்னர் ஜெனரல். ஆகவே, இந்தியாவின் உள்நிர்வாக விஷயங்களில் இந்தியா மந்திரி தலையிடமாட்டார். பெரும்படியான கொள்கைகளை உருவாக்குவதிலும் இந்திய சர்க்காரின் தீர்வைக் கொள்கைகளிலும் மட்டிலும் அவர் தலையிடுவார்.

பின்னால் 1909-ஆம் ஆண்டு மின்டோ-மார்லி சீர்திருத்தமும், 1919-ஆம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தமும் வந்தன. மத்தியச் சட்டசபைகளும் மாகாணச் சட்டசபைகளும் மாகாணங்களில் இரட்டையாட்சி மந்திரிகளும் ஏற்பட்டார்கள். இவற்றால், சட்டப்படி கவர்னர் ஜெனரலின் சர்வாதிகாரத்திலோ அவர் இந்தியா மந்திரிக்கு ஜவாப் சொல்ல வேண்டியவர் என்ற கட்டுப்பாட்டிலோ எவ்வித மாறுதலும் இல்லை. 1935-ஆம் வருஷத்திய சட்டப்படி மாகாணச் சுயஆட்சியும் காங்கிரஸ் சர்க்கார்களும் ஏற்பட்டபோதும் சட்டப்படி இந்த நிலைமை மாறவில்லை. ஆனால், மாகாணங்களின் பொது நிர்வாகத்தில் மந்திரி சபையின் நடவடிக்கைகளில் கவர்னர்கள் தலையிடமாட்டார்கள் என்று பிரிட்டிஷ் சர்க்கார் வாக்குக் கொடுத்தது. யுத்தகாலத்தில் இந்தச் சம்பிரதாயமும் பங்கமடைந்தது.

1946-ஆம் ஆண்டு செப்டம்பர் மீ 2-ஆம் தேதி வைஸிராய் வேவல் அழைத்ததன்மேல் பண்டித ஜவாஹர்லால் நேரு, இந்திய இடைக்கால மந்திரி சபையை அமைத்தார். இந்திய அரசியலமைப்புச் சட்ட நிலைமையிலே எவ்வித மாறுதலும் இல்லை. ஆனாலும், இந்தியருக்குப் பிரிட்டிஷார் தாங்கள் ஆட்சி அதிகாரத்தை முற்றும் மாற்றிக் கொடுப்பதற்கு முன் இடைக்கால ஏற்பாடாகவே இந்த மந்திரிசபை அமைந்தது. ஜவாஹரின் மந்திரிசபை கூட்டுப் பொறுப்புள்ளது. இந்தியச் சட்டசபைக்கே ஜவாப் சொல்ல வேண்டியது. பூரண சுதந்தரமுடையது. ராணுவம் உள்படச் சகல

இலாகாக்களும் இந்தியரின் கைக்கு வந்தன. இந்தியாவின் பிரதம சேனாதிபதிக்கு இந்திய தேசிய மந்திரி சபையில் ஸ்தானம் இல்லை. "நான் தங்களுக்குக்கீழே சந்தோஷமாக வேலை செய்கிறேன்" என்று, ராணுவ மந்திரி பலதேவ சிங்குக்குப் பிரதம சேனாதிபதி பீல்டு மார்ஷல் ஆக்கின்லெக் உறுதி கூறினார். வைஸிராய்க்குக் காட்டாமல் தம் சகாக்களுக்கு மட்டுமே தம் பிரசங்க வாசகத்தைக் காட்டிவிட்டு, ஜவாஹர் தமது ரேடியோப் பிரசங்கத்தைச் செய்தார். இந்த மந்திரிசபையின் நிர்வாகத்தில் வைஸிராயோ, பிரிட்டிஷ் சர்க்காரோ தலையிடுவதில்லை என்று உறுதி கூறினார்கள். இதை 'ரத்தம் சிந்தாத புரட்சி' என்றே எல்லாரும் பாராட்டினார்கள். சட்ட நிலைமையில் எவ்வித மாறுதலும் இல்லாவிட்டாலும், இந்திய மந்திரி சபையின் ஆலோசனைப்படியே வைஸிராய் நடந்துகொள்ளவேண்டும் என்ற சம்பிரதாயம் எற்பட்டது.

1947-ஆம் ௵ பிப்ரவரி ௴ வேவல் ஊருக்குத் திரும்பினார். அவர் ஸ்தானத்துக்கு லார்டு மவுண்ட்பாட்டன் வந்தார். ஜூலை ௴ இந்திய சுதந்தரச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைப் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நிறைவேற்றியது. அது முதல் சட்ட ரீதியாக 'டொமினியன்' அந்தஸ்தை இந்தியா பெற்றது. பிரிட்டிஷ் இந்தியாவின்மீது மட்டுமல்ல, இந்தியச் சுதேச சம்ஸ்தானங்களின் மீது தனக்கு இருந்த சகல அதிகாரங்களையும் உடன்படிக்கை உரிமைகளையும் பிரிட்டிஷ் சர்க்கார் விட்டுவிட்டது. இந்தியா மந்திரி காரியாலயமும் எடுபட்டது.

கவர்னர் ஜெனரலும் வைஸிராயும் ஒருவராகவே இருந்தாலும் கவர்னர் ஜெனரலைப் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியாகவும் வைஸிராயைப் பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதியாகவும் பாவிப்பது சம்பிரதாயம். 1935-ஆம் வருஷத்திய அரசியல் சட்டம் இந்த இரண்டு பதவிகளையும் பிரித்து, "கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் இந்தியாவின் விவகாரங்களைக் கவனிக்கவேண்டும்; வைஸிராய் சுதேச சம்ஸ்தானங்களுடன் உள்ள உறவுகளைக் கவனிக்கவேண்டும். தம் கடமைகளை நிறைவேற்ற வைஸிராய்க்கு ராணுவ உதவி வேண்டுமானால், அவருக்கு அதைக் கொடுத்து உதவுவது கவர்னர் ஜெனரலின் கடமை. ஆனால், இரண்டு பதவிகளுக்கும் ஒரே மனிதரையே பிரிட்டிஷ் மன்னர் நியமித்தால் தவறில்லை" என்று விதித்தது. இப்போது இந்திய சம்ஸ்தானங்களே பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபட்டு விட்டன. ஹைதராபாதையும் பாகிஸ்தானில் சேர்ந்த ஒன்றிரண்டையும் தவிர மற்றவையெல்லாம் இந்திய யூனியனில் சேர்ந்துவிட்டன. ஆகவே கடைசிப் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலான லார்டு லூயி மவுண்ட்பாட்டனுடன் வைஸிராய் பட்டமும் போய்விட்டது. குழந்தை போல் ஆனந்தத்துடன் விக்டோரியா மகாராணி சூடிக்கொண்ட 'சக்கரவர்த்தினி'ப் பட்டத்தையும் இன்று ஆரும் ஜார்ஜ் மன்னர் கைவிட்டுவிட்டார். சக்கரவர்த்தி ஜார்ஜ் இப்போது வெறும் ஜார்ஜ் ஆகிவிட்டார்.

இந்த ஜூன் ௴ 21 உ இந்திய கவர்னர் ஜெனரல் பதவியை எற்றுக்கொண்ட நம் தலைவர் ராஜாஜி, பிரிட்டிஷ் மகுடத்தின் நேர் எஜெண்ட் என்று தொனிக்கும்

'வைஸிராய்' அல்ல. அரசியல் சட்ட வரம்புக்கு உட்பட்ட கவர்னர் ஜெனரல்; அவ்வளவுதான். அவரே இன்று நம் நாட்டின் 'ஜனாதிபதி'. அவர்மீது எந்த அந்நிய சர்க்காரும் அதிகாரம் செலுத்த முடியாது. இந்திய மந்திரி சபையின் ஆலோசனைப்படியே அவர் நடக்கவேண்டும் என்பது உண்மை. ஆனால், ஒரு குடியரசின் ஜனாதிபதிக்குள்ள உரிமைகளும் கடமைகளும் அதிகாரங்களும் அவருக்கு உண்டு. "கோயில் விக்கிரகம் போன்றவர் கவர்னர்" என்று சமீபத்தில் குறிப்பிட்ட ராஜாஜி, இன்று தாமே இந்திய சுதந்தரக் கோயிலின் விக்கிரகமாய் விளங்குகிறார் என்று சொல்லலாம்.

பிரிட்டிஷாரின் முடக்குவாதம்

ரோம் சாம்ராஜ்ய சக்கரவர்த்தியான ஸீஸர் முதல் முதலாகப் பிரிட்டனில் வந்து இறங்கியபோது, அந்த நாட்டு மக்கள் முடக்குவாதத்தினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார்கள். ஸீஸர் அங்கு வருவதற்கு முன்னாலேயே, மிகப் பழமையான சரித்திர காலத்தின் ஆரம்பத்திலேயே. பிரிட்டிஷ் தீவுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முடக்குவாதத்தினால் நொண்டிக்கொண்டும் தவழ்ந்துகொண்டும் இருந்தார்கள். மனிதனை நோஞ்சலாக்கும் நோய்களிலே, இன்று முடக்குவாதம் நாலாவது வியாதியாக இருக்கிறது.

—ஒரு வைத்திய நிருபர், (மெயில்: 25-6-'48)

கிணறும் குழாயும்

கேள்வி: ஒரு மிராசுதார் தமது நிலத்தில் ஒரு கிணறு வெட்டினார். 35 அடி வெட்டிய பிறகுதான் தண்ணீர் தட்டுப்பட்டது. ஒரு சாதாரணப் பம்பு அமைத்தார். அடிவரையில் குழாயைத் தொங்கவிட்டார். பம்பை அடித்துப் பார்த்தார். ஒரு சொட்டுத் தண்ணீர் வரவில்லை. பம்பை விற்ற கடைக்காரரிடம் போனார். பழுதடைந்த பம்பு என்று வாதித்தார். கடைக்காரர் இதை ஒப்புக்கொள்ளவில்லை. யார் கட்சி சரி?

விடை: கடைக்காரர் கட்சிதான் சரி. 34 அடி உயரத்துக்கு மேல் ஒரு குழாயில் தண்ணீரைப் பம்பு அடித்து எழுப்ப முடியாது. 34 அடிக்கு மேல் ஆழமான கிணறுகளில் பம்பின் வால்வைத் தண்ணீருக்கு 34 அடி தூரத்துக்கு உள்ளாகவே வைப்பார்கள். இதனால் இரண்டு அஞ்சலில் தண்ணீர் நமக்கு எட்டுகிறது.

—ஹ்யூகோ ஹார்ட்டிக், (ஸயின்ஸ் டைஜெஸ்ட்)

பொருந்தும் சொல்

(88-ஆம் பக்கத்தில் உள்ள கேள்விக்கு விடை)

1. ச			11. ர
2. ங	5. ஞ	8. த	12. ய
3. க	6. ந	9. ம	13. வ
4. ட	7. ண	10. ப	14. ல

அவரவரும் நிலைக்கண்ணுடியிலே தங்களைப் பார்த்துக் கொண்டால் உண்மைச் சொரூபம் தெரியும்; தர்மம் எது, அதர்மம் எது என்பதும் தெரியும்.

சொல்லியா தெரியும்?

அரவிந்த படேல்

ரமணலாலுக்குச் சமூகத்தின்மேல் பிரமாதமான கோபம் வந்தது. ஐந்து வருஷங்களாக அவன் தன் பெண்ணுக்கு வரன் தேடிக்கொண்டிருக்கிறான். ஆனால் எந்த இடத்தில் பார்த்தாலும் ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. இத்தனைக்கும் அந்த ஜில்லாவிலே அவனைத் தெரியாதவர் யாரும் இல்லை; கல்யாண விஷயத்தில் முகங்கொடுத்துப் பேசாத அத்தனை பேரும் அவனுடைய தொண்டைப் புகழ்ந்து பேசுகிறார்கள்.

ரமணன் தேசீயக் கலாசாலையில் பட்டம் பெற்றதும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் கிராம முன்னேற்றத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறான். ஊரிலே நடக்கும் அத்தனை கல்விக் கழகங்களுக்கும் அவன்தான் பொறுப்பாளி என்பதை எல்லாருமே ஒப்புக்கொள்கிறார்கள். அவனுடைய புகழ் சர்வவியாபகமாக இருக்கிறது.

இவ்வளவும் இருந்து என்ன உபயோகம்? அவனுடைய பெண்ணுக்கு 23 வயது ஆகிறது. ஐந்து வருஷமாகச் சல்லடை போட்டுத் தேடியும் வரன் கிடைப்பதாயில்லை. 'பாவம்! வாழ்க்கை முழுவதும் தொண்டு செய்திருக்கிறான். அவனிடம் பணம் எங்கே இருக்கப் போகிறது? பெண்ணுக்கு அவன் சீர்வரிசைகள் என்னத்தைச் செய்யப்போகிறான்?' என்றுதான் ஊர்க்காரர்களும் பிள்ளை வீட்டுக்காரர்களும் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அவனுடைய தொண்டைப் போற்றுவதிலே மட்டும் குறைவில்லை.

கடைசியில் ரமணன் வேறு வழியின்றி, 38 வயதான இரண்டாந் தாரக்காரனுக்குத் தன் புதல்வியை மணஞ் செய்விக்க நிச்சயிக்கிறான். மாப்பிள்ளை நாலு பிள்ளைகளுக்குத் தகப்பன்; பம்பாயிலே வியாபாரி. இருபத்துமூன்று வயதுப் பெண் என்றால் அவள் என்ன, ஒன்றும் அறியாதவளா? இந்தக் கல்யாணத்தை அவள் எதிர்க்கிறாள். "நான் என்ன செய்வது? வேறு எந்த இடத்திலும் உனக்கு வரன் கிடைப்பதாகவே இல்லையே!" என்று ரமணன் தன் பெண்ணை அதட்டுகிறான்.

ரமணன அறிவிலி அல்ல! ஆனால் அவனுடைய கடமையை அவனுக்கு யார் தெரிவிப்பது?

2

துவாரகையிலிருந்து திரும்பும் வண்டியில் யாத்திரிகர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். "நாங்கள் வருஷந் தவறாமல் வழக்கமாகத் துவாரகைக்குப் போய்வருகிறோம். ஐந்து பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்விப்போம்; கோயில் உண்டியில் பதினொரு ரூபாய் போடுவோம். இந்தத் தடவை பசுமடத்துக்குக்

காப்பிரைட்: பகினீ (குஜராத்தி: மே '48), பாரதி ஸாகித்திய ஸங்க் லிமிடெட, அகமதாபாத்.

கூட ஏழு ரூபாய் கொடுத்தோம்..'' என்று ஓர் அம்மாள் சொன்னாள்.

அவள் பேச்சு முடிவதற்குள்ளே டிக்கெட் பரிசோதகர் வந்துவிட்டார். அவளுடைய கணவன் இரண்டு டிககெட்டுகளை எடுத்துக் காட்டினான். அம்மாளின் பக்கத்தில் இருந்த பையனைக் குறிப்பிட்டு, "இவனுடைய டிக்கெட் எங்கே?'' என்று கேட்டார் பரிசோதகர்.

கணவன் பதில் சொல்வதற்கு முன்பே அந்த அம்மாள், "இந்தக் குழந்தைக்கு டிக்கெட் என்ன? இவனுக்கு இன்னும்.....'' என்று ஆரம்பித்தாள்.

"......ஐந்து வயதுகூட ஆகவில்லை'' என்று முடித்தான் கணவன்.

"இவனுக்கா ஐந்து வயது! யார் சொன்னது? வளர்த்தியாக இருப்பதால் பார்ப்பதற்கு இப்படி இருக்கிறான். இந்த ஆவணிக்கு மூன்று நிரம்பி நாலாவது வயது ஆரம்பிக்கிறது!'' என்றாள் மனைவி.

எப்படியும் வயது பொய் என்பது தெரிந்து போயிற்று. டிக்கெட் பரிசோதகரிடம் சார்ஜைச் செலுத்திவிட்டான் கணவன்.

துவாரகைக்குப் போகாமலிருந்தாலோ, தர்மச்செலவு செய்யாமலிருந்தாலோ அது அதர்மமல்ல; டிக்கெட் வாங்காமல் யாத்திரை செய்வதுதான் அதர்மம்'' என்று இந்தத் தம்பதிகளிடம் யார் சொல்லுவது!

3

பல வருஷங்களாகத் துணியே வாங்காமல் காலம் தள்ளி வந்த ராமலால் ஜவுளி ரேஷன் நீங்கியவுடனே துணி வாங்கப் போனான். தன் குடும்பம் முழுவதுக்கும் முந்நூறு ரூபாய்க்குத் துணிமணிகள் வாங்கினான்.

துணி வியாபாரி ஏற்கனவே ராமலாலுக்குப் பழக்கமானவன்; பழைய வாடிக்கைக்காரர்களின் முகங் கோணாமல் நடந்துகொள்பவன். அவன் இந்தப் பழைய தொடர்பை ராமலாலுக்குத் தெரிவித்து, "பில் போடலாமா?'' என்று கேட்டான்.

அவனுடைய கேள்வியின் கருத்தை அறிந்துகொண்ட ராமலால், "வேண்டாம் வேண்டாம், சர்க்காருக்குத் தண்டத்துக்கு வரி கொடுப்பானேன்?'' என்றான்.

வியாபாரி இன்முறுவலோடு, "சர்க்கார் இப்பொழுது நம்முடையதாகிவிட்டது. ஒழுங்காக வரி செலுத்தாவிட்டால் ராஜாங்கம் எப்படி நடக்கும்?'' என்றான்.

"இந்த விற்பனை வரி கொடுக்காததனாலே ஒன்றும் முழுகிப் போய்விடாது. இதற்கு மேலே நாலு மடங்கு வரியொன்றைக் கொடுத்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்.''

"அது என்ன வரி?''

"ஊரிலே வந்திருக்கும் அகதிகளுக்கு நிதி திரட்டுகிறார்களாம். அதற்கு இருபது ரூபாய் கொடுக்க வேண்டி வந்துவிட்டது. அகதி வரி என்றே அதை வைத்துக்கொள்ளுங்களேன்!''

விற்பனை வரியைத் தவிர்ப்பதற்காக, ராமலால் பில் வாங்காமலே துணியை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போனான். "அகதிகளுக்கு உதவி செய்ய வேண்டியதுதான்; ஆனால் அதைச் செய்யாமலிருப்பது அதர்மமல்ல. விற்பனைவரி கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றுவதுதான் அதர்மம்'' என்று ராமலாலுக்கு யார் சொல்வது!

எல்லைக் காந்தி கபார் கானின் மகன்

கனிகான் கடிதம்

★

இந்திய அசெம்பிளியில் அங்கத்தினராயிருந்த கனிகான் மிகவும் நகைச் சுவையோடு பேசுவார். இப்போது பாகிஸ்தான் பிரஜையாகிவிட்டார். அவர் பம்பாயில் வந்து தங்கியிருந்தார். அவரைக் கட்டுரை எழுதக் கேட்டார், 'இந்தியா' ஆசிரியர். கனிகான் மறுத்துவிட்டார். அப்படி மறுத்த கடிதமே மிகவும் ரசமாக இருக்கிறது. கபார் கான் சிறைப் பட்டிருக்கும் இப்போது, அந்தக் கடிதம் மேலும் ரசமாயிருக்கும்.

பிரீச் காண்டி ஹவுஸ்
வார்டென் ரோட்

அன்பார்ந்த குஸும்,

பாகிஸ்தானைப்பற்றித் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் எழுதிவரக் கேட்டிருக்கிறீர்கள். இந்த அருமையான அழைப்புக்கு வந்தனம். ஆனால், உங்கள் அழைப்பை நான் மறுக்கவேண்டியிருக்கிறது. என் நிலைமை மிகவும் சங்கடமானது. இரண்டு டொமினியன்களும் பொறுமை கொண்டு, விசித்திரமான மனநிலையில் இருக்கின்றன. உண்மையில், ஒரு காதலியையும் ஒரு மனைவியையும் பெற்ற மனிதனைப்போல் நான் இருக்கிறேன். இந்திய வாசகர்களுக்குப் பாகிஸ்தானைப் பற்றி நான் எழுதுவது, மனைவியைப் பற்றிக் காதலியுடன் பேசுவது போலாகும். காதலியைப் புகழ்வதானால், மனைவியைத் தூஷித்தாக வேண்டும். அதற்கு நான் தயாராக இல்லை.

உங்களுக்கு ஒரு கதை தெரியுமா? ஒரு கிராமததில் ஒரு வாலிபன் இருந்தான். அவன் தாய ஒரு கைம் பெண். வாலிபன் ஒவ்வொரு நாளும் வெளியே போய்விட்டு வீட்டுக்குத் திரும்பும்போது, அவன் உடையெல்லாம் கிழிந்திருக்கும்; உடம்பெல்லாம் காயம் பட்டிருக்கும்.

"ஊரார் ஏன் உன்னை எப்போது பார்த்தாலும் அடிக்கிறார்கள்?" என்று தாய் ஒரு நாள் மாலையில் கேட்டாள்.

"ஏனென்றால், நான் எப்போதும் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அதுதான் காரணம்" என்றான் வாலிபன்.

"என்ன அக்கிரமம்! நீ உண்மையைச் சொல்வதற்காக உன்னை ஏன் அவர்கள் அடிக்க வேண்டும்?" என்று கேட்டாள் தாய்.

"அம்மா, உண்மையைச் சொன்னால் நீ கூடத்தான் என்னை அடிப்பாய்" என்றான் புத்திசாலி வாலிபன்.

காப்பிரைட்: இந்தியா (ஆங்கிலம் : 4-4-'48),
துல்லோச் ரோட், கொலாபா, பம்பாய் 1.

"என்ன இப்படிச் சொல்கிறாய்! உண்மையே பேசு என்று எப்போதும் உனக்கு நான் போதித்து வரவில்லையா?" என்று தாய் கோபத்தோடு சொன்னாள்.

"அது சரிதான், அம்மா. அப்பா செத்துப்போய் இரண்டு வருஷமாகிறது. இன்னமும் நீ உன் உதட்டுக்கும் கன்னத்துக்கும் ஒவ்வொரு நாள் மாலையிலும் சிவப்பு வர்ணம் பூசி அழகு செய்துகொள்கிறாயே, ஏன்?" என்று கேட்டான் வாலிபன்.

"அட காலிப்பயலே!" என்று சொல்லி வாலிபனை வீட்டை விட்டே துரத்திவிட்டாள் தாய்.

பம்பாயை விட்டு என்னை யாரும் துரத்தும்படி நேரக்கூடாது. அதில் எனக்கு விருப்பமில்லை. பம்பாய்க் கடற்கரையின் அலையோசை எனக்குப் பிரியமாக இருக்கிறது.

தவிர, பாகிஸ்தான் பெரியார்களைப்பற்றி நான் எப்படித்தான் எழுதுவேன்? எல்லைப்புறக் குற்ற ரெகுலேஷனின் 40-ஆவது பிரிவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? காஷ்மீரி வகுப்பினரான எங்கள் பிரதம மந்திரி எழுதியுள்ள 'பட்டாணிய எல்லையில் பொன்னும் துப்பாக்கியும்' என்ற புத்தகத்தைப் படித்திருக்கிறீர்களா? அவர் பழைய காங்கிரஸ்காரர்தாம். ஆனால், உத்தியோக வேட்டைக்காரர். ஆகையால் இந்தக் கட்டுரைகளை நான் எழுத மாட்டேன். எழுதினால், 'இந்தச் சுதந்தரத்துக்கா 25 - வருஷமாக நாம் போராடினோம்? இதைப் பார்க்கும் போது, ஆங்கில ஆட்சி சொர்க்கம் அல்லவா?' என்று தோன்றக் கூடிய விஷயங்களை உங்களுக்கு நான் தெரிவிக்க நேரும்.

ராஜா கஸன்பர் அலி கான் தமது நீலத் தலைப்பாகையை அணிந்து கொண்டு எவ்வளவு விகாரமாய்க் காட்சியளிக்கிறார் என்பதை உங்களுக்கு எப்படிச் சொல்லுவேன்?

"நீலம் குரூரத்தின் சின்னம்" என்று ஜாமினி ராய் எனக்குச் சொல்லியிருக்கிறார். எனக்காக அவர் செங்கிஸ்கானின் படம் ஒன்றை வரைந்தார். நீளமான நீல நிறத் தலையும் சீன மீசையும் அராபிய தாடியும் கொண்டவராகச் செங்கிஸ் தானை அவர் சித்திரித்தார். "படத்தில் குரூரத்தைக் காணோமே!" என்று நான் சொன்னேன். "நீல நிறமே குரூரத்தைக் காட்டுகிறது" என்று ராய் பதில் அளித்தார். 'நீல நிறக் கிருஷ்ணன் இல்லையா? அவர் கொடுமையானவரா? அல்லவே!' என்று நான் நினைத்தேன். ஆனாலும், வாய்பேசவில்லை. அவர் ஓவியர்; வயதில் முதிர்ந்தவர். கலைஞரின் மயக்கங்களை நாம் கெடுக்கக் கூடாது. கெடுத்தால் அவர்களால் வேலை செய்ய முடியாது.

ஆனால் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் கிழக் கஸன்பர் அலியைப் பார்த்தபோது, கல்கத்தாவில் பல வருஷங்களுக்கு முன்னே ராய் சொன்ன இந்த விஷயம் எனக்கு ஞாபகம் வந்தது.

தலைவர்களைப் பெற்றிருக்கும் விஷயத்தில் பஞ்சாப் பெரிதும் துரதிருஷ்டசாலி. பாவம், சீக்கியர்களுக்குத் தலைவராகத் தாராசிங் வாய்த்திருக்கிறார். முஸ்லிம்களுக்குக் கஸன்பர் வாய்த்திருக்கிறார். பஞ்சாப் முஸல்மான் என்றாலே பாகிஸ்தான் முழுவதும் வெறுக்கும்படி செய்துவிட்டது அவருடைய கும்பல். ஆனால், இதையெல்லாம் உங்கள் பத்திரிகையிலே நான் எழுத முடியாது.

பஞ்சாபின் தனிப்பெரும் சின்னமாக விளங்குகிறார் கஸன்பர். பஞ்சாபி அகம்பாவம் மிகுந்தவன்; வலிமை வாய்ந்தவன்; துடுக்கானவன்; சிற்றின்பப் பிரியன். அளவுக்கு மேல் உடை அணிவான். பாகிஸ்தான் எங்கும் பரவி விட்டான். அவனைக் கண்டு வங்காளி எரிச்சல் கொள்ளுகிறான்; ஸிந்தி நடுங்குகிறான். ஹிந்துவைக் கண்டு முஸ்லிம் லீகர் எப்படி அஞ்சினரோ அப்படி அஞ்சுகிறார்கள் பஞ்சாபியைக் கண்டு வங்காளியும் ஸிந்தியும். "பஞ்சாபிகள் எங்களை வந்து சூழ்ந்துகொண்டு அமுக்கிவிட்டார்கள்" என்ற ஓலம் ஸிந்துவிலும் வங்காளத்திலும் கேட்கிறது. கஸன்பரின் நீலத் தலைப்பாகையும் துடுக்கும் இந்த அபாயம் எவ்வளவு உண்மை என்பதை நிரூபிக்கின்றன. என்னதான் சொன்னாலும், கஸன்பர் மந்திரிப் பதவி வகிக்கும் பாகிஸ்தானிலேயே ஓர் எளிய பிரஜையாக நான் வாழ வேண்டும்.

பாகிஸ்தானின் பிரதம மந்திரியைப் பற்றி நான் வாய் திறக்க முடியுமா? இந்திய மத்திய அசெம்பிளியில் என் தோழ அங்கத்தினராக இருந்தவர் நவாப்ஜாதா. அங்கே அவர் சாந்தமாகவும் அடக்கமாகவும் இருந்தார். அவர் தந்திரசாலி. அவருடைய பிரசங்கங்கள் பிரமாதமாக இல்லாவிட்டாலும், நறுக்குத் தறித்தாற் போலிருக்கும். அப்படிப்பட்டவர் இவ்வளவு சீக்கிரத்திலே இப்படி மாறுவார் என்று நான் நினைக்கவேயில்லை. எல்லையற்ற அதிகாரம் ஒரு மனிதனை எப்படி மாற்றிவிடுகிறது!

அதிகாரமும் பணத்தைப் போன்றதுதான். ஒரு மனிதனிடம் உள்ள நல்ல குணங்களையும் சரி, கெட்ட குணங்களையும் சரி, ஒன்றுக்குப் பல மடங்காக அவை பெருக்கி விடுகின்றன.

சுஹ்ரீத் சுஹ்ராவர்த்தி ஒரு பிரசங்கம் செய்தார். சரித்திரத்தில் இடம்பெறத் தக்க பிரசங்கம். என் தந்தை கொண்டுவந்த ஒரு வெட்டுப் பிரேரணையின் மீதுதான் அவர் பேசினார். நேர்த்தியான பிரசங்கம்; ஒளிவு மறைவில்லாத பிரசங்கம். அதைக் கேட்ட கல்லும் கரைந்திருக்கும். ஆனால், அந்தப் பெரிய மனிதர்கள் சிறிதும் அசையவில்லை. அவருக்குப் பதில் சொல்ல எழுந்தார் எங்கள் பிரதம மந்திரி. வெறும் திட்டு, ஒரே திட்டு மயந்தான். காறி உமிழாத குறை; மற்றப்படி ஏக வசைமாரி பொழிந்துவிட்டார். இந்தியாவின் இடைக்கால சர்க்காரில் இருந்த போது, சோஷலிஸ்டு பட்ஜெட் தயாரித்த நவாப்ஜாதா ஏதோ கனவு காணும் ஒரு பெரிய லட்சியவாதியாக எனக்குத் தோன்றினார். அவர் இப்போது இப்படி நடந்து கொண்டது கண்டு நான் திடுக்கிட்டுப் போனேன். பிரதம மந்திரி இந்த விவாதத்திலே வெற்றி பெற்றார்; நான் அவரைப்பற்றிக் கொண்டிருந்த மயக்கத்தை இழந்தேன். இந்த விஷயங்களையெல்லாம் நான் எப்படி எழுதுவேன்? காஷ்மீர் தேசத்தைச் சேர்ந்த எங்கள் பிரதம மந்திரியும், எல்லைப்புற ரெகுலேஷனின் 40-ஆவது பிரிவும் கொஞ்சம் ஞாபகம் இருக்கட்டும். நான் சிறைக்குப் போக விரும்பவில்லை; ஏனென்றால் எண்ணெய் வர்ணப்படம் வரையும் கலையைக் கற்பதற்காக இந்தக் கோடையில் நான் பாரிஸ் நகரம் செல்ல எண்ணியிருக்கிறேன்.

ஆகையால், நான் பாகிஸ்தானைப் பற்றி உங்களுக்குக் கட்டுரைகள்

எழுத இயலாது. சிரியா தேசத்து மகான் கலீல் கிப்ரான் என்பவர் உலகத்து மகான்களில் இரண்டாவது ஸ்தானம் வகிப்பவர் (முதல் ஸ்தானம் ஏசு கிறிஸ்துவுக்கு.) மகான் கிப்ரான் இவ்வாறு சொல்லுகிறார்: "அநேக சமயங்களில் உன் ஆத்மா ஒரு போர்க்களமாக இருக்கிறது. அதிலே உன் அறிவும் ஆசையும் ஒன்றோடு ஒன்று போரிடுகின்றன. அப்போது, உன் ஆத்மாவிலே சமாதானம் உண்டாக்க என்னை நினை. நான் உன் அறிவையும் ஆசையையும் இசைத்து அமைதி பொழிவேன்." அந்த நாள் வரும் போது, உங்கள் அழைப்பை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். இப்போது பாகிஸ்தானைப் பற்றி நான் எழுத மாட்டேன். உங்கள் காதலியின் முன்னே உங்கள் மனைவியைத் தூஷிப்பது அபாயமாகும். அந்தக் சைப்பெண்ணின் மகன் அடைந்த கதியை நான் அடைய வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்கள்? பயங்கொள்ளித்தனமாய் எழுதவும் எனக்குப் பிடிக்கவில்லை.

உங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) கனிகான்

15-3-'48

பிழை செய்பவன் யார்?

காலரிகளிலே உட்கார்ந்திருக்கும் அத்தனை பேரும் பிரமாதமாக விமர்சனம் செய்கிறார்கள். அவர்கள் பந்தாடவில்லை; குஸ்தி போடவில்லை. அவர்கள் பிழையே செய்யவில்லை. ஏனென்றால், அவர்கள் எதைச் செய்யவுமே முயலவில்லை. கீழே அரங்கத்திலோ செயல் புரிவோர் இருக்கிறார்கள். அவர்கள் பிழை செய்கிறார்கள்; ஏனென்றால், பல செயல்களைப் புரிய அவர்கள் முயல்கிறார்கள்.

போர்டு தவறுதலாகத் தமது முதல் மோட்டாருக்கு ரிவர்ஸ் கியரைப் போட்டுவிட்டார். எடிஸன் 20,00,000 டாலர் செலவழித்து, ஒரு புதிய யந்திரத்தைக் கண்டுபிடித்தார். அது ஒரு பயனுமில்லாமல் போயிற்று.

பிழையே செய்யாத மனிதனுக்குத் தீரமில்லை; புதிய புதிய காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்ற உணர்ச்சி இல்லை, அவன் எந்த முயற்சியிலும் ஈடுபடமாட்டான். முன்னேற்றச் சக்கரத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டை அவன்.

ஆனால் பிழையே செய்யாதவன்தான் உண்மையிலே மிகப் பெரும் பிழை செய்பவன். தான் ஒன்றையும் முயலாமல், ஏதுமே செய்யாமல், செயல் புரியும் பிறரையெல்லாம் குறை கூறியவண்ணம் இருப்பதுதான் அவனுடைய பெரும் பிழை.

—பிட்ஸில்வேனியா ஸ்டார்.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கேள்வி: கலைக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு என்ன?

பதில்: இயற்கையைக் காப்பியடிப்பது கலை. இயற்கை, கடவுளின் கலை; கலை இயற்கையைப்பற்றி மனிதன் கொண்ட கற்பனை.

*　*

கே: அசட்டுக் கேள்விக்கு நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்?

ப: அசட்டுப் பதில்தான். அசட்டுத்தனம் கேள்வி கேட்பவரின் ஏகபோக உரிமையா? அவரோடு எனக்கும் சம உரிமை உண்டு.

*　*

கே: உங்கள் ஜேபி நிறைந்திருக்கும்போது என்ன செய்வீர்கள்?

ப: செலவழிப்பேன்; ஆனால், அது அபூர்வ சம்பவம்.

*　*

கே: 'மனிதன் ஒரு விலங்கு' என்கிறார்களே; இது உண்மையா?

ப: அல்ல, அவன் தனியாக இருக்கிற வரையில் அல்ல.

*　*

கே: உலகத்திலே இப்போது ஏக சக்ராதிபத்தியம் செலுத்தும் பெண்ராணி எவளும் இல்லையா?

ப: இருக்கிறாளே! உலகெங்கும் இருக்கிறாள் - வீட்டுக்கு வீடு.

*　*

கே: அரசியலிலே தர்மோபதேசம் வந்து நுழையும்போது என்ன நடக்கிறது?

ப: நம்மைக் கொல்லும் துப்பாக்கிக் குண்டுக்கு நாமே பணம் கொடுக்கிறோம்.

*　*

கே: பெண் எப்போது கிழவியாகிறாள்?

ப: ஆண் அவளிடம் சிரத்தை இழந்துவிடும்போது.

*　*

கே: பெரும்பாலான இந்திய சினிமாப் படங்களில் கதாநாயகி கதாநாயகனை மணந்துவிடுகிறாளே, அது ஏன்?

ப: பின்னே யாரை மணப்பது? படம் பார்க்க வரும் உம்மையா மணப்பாள்?

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஜூன்'48), பம்பாய்.

கே: உலகத்திலே ஏழைகள் இல்லாவிட்டால், பணக்காரரும் இருக்கமாட்டார்கள். அப்போது யார் இருப்பார்கள்?

ப: கம்யூனிஸ்டுகள்.

* *

கே: உங்களைப் பார்க்க எனக்கு ஆசையாயிருக்கிறது. என்னைப் பார்க்க உங்களுக்கு ஆசையா?

ப: இல்லை; துளிகூட இல்லை. பார்ப்பதையெல்லாம் நான் நம்பி விடுகிறேன். நம்பியதெல்லாம் என்னை மோசம் செய்திருக்கிறது. நான் நம்பக்கூடாத எதையும் பார்க்க எனக்கு இஷ்டமில்லை.

* *

கே: இந்திய ராணுவத்தை இந்தியமயமாக்க இந்திய யூனியன் தீர்மானித்தது. ஆனால், இப்போது சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களைத் தன் ராணுவத்தில் வைத்துக் கொள்ள அது விரும்புகிறதே! ஏன்?

ப: நமக்குத் துப்பாக்கி சுடத் தெரிய வேண்டாமையா; தூக்கவாவது தெரிய வேண்டாமா? இதைச் சொல்லிக் கொடுக்கத்தான்.

கே: (ஒரு வாலிபர் கேட்பது) என் சிநேகிதிப் பெண் அநாவசியமான விஷயங்களுக்கெல்லாம் அடிக்கடி என்னோடு சண்டை போடுகிறாள். நான் என்ன செய்வது?

ப: அவளுக்குக் கல்யாணம் நெருங்கிவிட்டது. செய்துகொள்ளும்.

* *

கே: (ஒரு வாலிபப் பெண் கேட்பது) ஆணின் நிழலே பெண். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: நான் அப்படி நினைக்கவில்லை. அவள் ஆணின் நிழல் அல்ல; அதைவிடப் பெரிய வேறு என்னவோ அவள். தன் நிழலைக் கண்டே மனிதன் பயந்தோடுவானே?

* *

கே: நீங்கள் எப்போது கோபம் கொள்கிறீர்கள்?

ப: என் கோபத்துக்கு நாள் நட்சத்திரமெல்லாம் கிடையாது. அது எந்த வேளையிலும் வரும்; எதைப்பற்றியும் வரும். என் கோபமே எனது பெரிய துர்க்குணம்.

பால்யக் கனவு

கோபாலன்: என்ன பிரதர் கோவிந்தன், உங்கள் பால்ய வயதில் நீங்கள் கொண்டிருந்த ஆசைக் கனவு ஏதாவது உங்களுக்கு நிறைவேறியதுண்டா?

கோவிந்தன்: உம். ஒரே ஒரு கனவு நிறைவேறிவிட்டது. எங்கள் அம்மா என் தலைமயிரை வாரி விடும்போதெல்லாம் அது இல்லாமலே போய்விடக்கூடாதா என்று நான் ஓயாமல் ஆசை கொள்வது வழக்கம்.

இன்ஷ்யூரென்ஸ் ஜாக்கிரதை

மேற்கண்ட தலைப்புடன் 'மஞ்சரி' நவம்பர் '47 இதழில் வெளியான கட்டுரை, வழக்கில் சம்பந்தப் பட்டவர்களுக்கு எவ்விதத்திலும் வருத்தம் உண்டாக்கும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை என்று உறுதி கூறுகிறோம்; எனினும் அதனால் அவர்களுக்கு மனவருத்தம் ஏற்பட்டதற்கு வருந்துகிறோம்.

—ஆசிரியர்.

மனித உடம்பைப் போர்த்திருக்கும் இயற்கைக் கவசம் சருமம்; அதுதான் என்ன அற்புத அலுவல்களைப் புரிகிறது!

உடம்பின் கவசம்

எஸ். தம்பையா

நம் மேனியைக் காத்து நல்ல நிலையில் வைத்துக்கொள்வது எப்படி என்று தெரிந்துகொள்வதற்கு முன், சருமத்தின் அமைப்பைப் பற்றி அறிந்துகொள்வது அவசியம். உடம்பிலே சருமத்தின் வெளிப்பரப்பு 20 சதுர அடி. அது உடம்பு முழுவதையும் மூடிக்கொண்டிருக்கிறது. ஆனால் பார்சலுக்கு மேலே மூடிக் கட்டும் காகிதம் போன்றது என்று அதை நினைத்துவிடக்கூடாது. உடம்புக்கு அவசியமான பல வேலைகளை அது செய்கிறது. சருமம் முழுவதும் நரம்புகள் நிறைந்திருக்கின்றன. வலி, சூடு, குளிர், அழுத்தம், ஸ்பர்சம் முதலிய பலவகை உணர்ச்சிகளையும் சருமத்திலுள்ள நரம்புகளே அறிந்து மூளைக்குத் தெரிவிக்கின்றன. இந்தச் செய்தியை ஆதாரமாகக் கொண்டுதான், மூளை தன் வேலையை ஒழுங்காகச் செய்கிறது. ஏராளமான ரத்தம் சருமத்தில் பாய்ந்து ஓடியவண்ணம் இருக்கிறது. உடம்பின் உஷ்ணம் ஒரே நிலையில் இருப்பதற்கு இந்த ரத்த ஓட்டம் ஒரு முக்கியமான காரணம். இந்த ரத்த ஓட்டம் சருமத்துக்கு வேண்டிய போஷணையைக் கொடுப்பதோடு, வேர்வைக் கோளத்தையும் எண்ணெய்க் கோளத்தையும் போஷிக்கிறது. மயிர் வளர்ச்சிக்கும் இந்த ரத்த ஓட்டமே காரணம். உடம்பில் ஓடும் ரத்தத்தில் ஆறில் ஒரு பங்கு சருமத்திலேயே ஓடுகிறது. இல்லாவிட்டால் ரத்தச் சுமை தாங்காமல் இருதயம் நின்றுவிடக்கூடிய அபாயம் நேரலாம். வேர்வைக் கோளமும் எண்ணெய்க் கோளமும் சரியாகத் தங்கள் வேலையைச் செய்தால், மேனி தளதளவென்றிருக்கும்; வறண்டு போகாது. சருமத்தில் சுமார் 30 லட்சம் வேர்வைக் கோளங்களும் 30 லட்சம் எண்ணெய்க் கோளங்களும் இருக்கின்றன. சருமம் தன் வேலையைச் சரியாகச் செய்யவேண்டுமானால், அது நல்ல ஆரோக்கிய நிலையில் இருக்க வேண்டியது அவசியம். சரும ஆரோக்கியம் வேண்டுமானால் உடல் ஆரோக்கியம் வேண்டும். சத்துள்ள ஆகாரம், வேண்டிய அளவு வேலை, ஓய்வு இவற்றால் உடல் ஆரோக்கியத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். கவலை புகாமல் மனத்தைக் காப்பாற்ற வேண்டும். தக்க ஆடை உடுத்த வேண்டும். மேனியைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தற்கால நாகரிகம் நம் கவலைகளைப் பெருக்கியிருக்கிறது; உடம்பின் பெரிய தசை நார்களுக்கு வேலை இல்லாமல் செய்திருக்கிறது. ஆனால், உணவுப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கவும் வசதி

காப்பிரைட்: பீப்பிள்ஸ் ஹெல்த் (ஆங்கிலம்: மே '48)
லாயிட் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

செய்திருக்கிறது. நன்றாகத் தூங்கும் பழக்கம் தேக ஆரோக்கியத்துக்கு மிக அவசியம். கவலைகளையெல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு, குறிப்பிட்ட வேளையில் படுக்கப் போவது நல்ல தூக்கத்துக்கு வழி.

எல்லோருடைய மேனியும் ஒரே மாதிரி இருப்பதில்லை. நிறம், அமைப்பு, கனம், எண்ணெய் அளவு முதலியவற்றில் ஒன்றுக்கொன்று மாறுபடுகிறது. இதனால் ஒவ்வொருவர் சருமப் பாதுகாப்பும் இந்த மாறுபாடுகளுக்கு ஏற்றபடி வித்தியாசப்படும். சோப்புகளில் எவ்வளவோ வகைகள் இருக்கின்றன. ஒருவர் உபயோகிக்கும் சோப் அவருடைய மேனிக்கு ஏற்றதாக இல்லாவிட்டால் அசௌகரியம் ஏற்படுவதோடு ஏற்கனவே சருமத்தில் மறைந்திருக்கும் வியாதிகளையும் கிளப்பிவிடும். சிவந்த மெல்லிய உடம்புக்கு ஸோடா மிகுந்த சோப் கூடாது. கறுத்துத் தடித்து எண்ணெய்ப் பசை மிகுந்த உடம்புக்கு ஸோடா மிகுந்த சோப் ஒரு கெடுதியும் செய்யாது. எண்ணெய்ப் பசை இல்லாமல் வறண்டும் மேகப்படை படர்ந்தும் இருக்கும் உடம்புக்குச் சோப்பே கூடாது; சோப் உபயோகித்தால் உடம்பில் வெடிப்பு ஏற்படும். கொழுப்புச் சத்து மிகுந்த சோப் எவ்வித உடம்புக்கும் நல்லது; வறண்டு தடித்த உடம்புக்குத்தான் ஆகாது.

இளைஞர்கள் சோப் தேய்த்துக் கொள்வது நல்லது. இதனால் அவர்கள் மேனி பளபளப்படையும்; பரு, மறு முதலியவையும் தோன்ற மாட்டா. உணவிலும் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். சத்தில்லாத உணவினால் உடம்பு வறண்டு, சுருங்கிவிடும். ஆகாரத்தில் கலோரி சிறிது அதிகமாக இருந்தால், அது கொழுப்பாக மாறிச் சதைக்கடியில் தங்கிவிடும். இதனால் மேனிக்கு யௌவன மினுமினுப்பு ஏற்படுகிறது. ஆகாரத்தில் 'ஏ' வைடமின் குறைந்தால் உடம்பு வறண்டு போகும்; தவளைத் தோல்போல் சுரசுரப்பாக மாறிவிடும். 'பி' வைடமின் குறைந்தால், தடிப்பு முதலிய பல சரும வியாதிகள் தோன்றும். உணவில் 'நிகோடினிக் ஆஸிட்' குறைந்தால் உடம்பு வறண்டு போவதோடு, குடல் கோளாறும் மனக் கோளாறும் தோன்ற இடமுண்டு.

சருமத்தின் வேலை உடலுக்குக் கவசமாக நிற்பது. அந்த வேலையை அது சரிவரச் செய்யவேண்டுமானால், அதன்மேல் அழுக்குச் சேரவிடக்கூடாது. அது இருதயத்தின் வேலைக்கு உதவி செய்வதோடு அழுக்கை வெளியே தள்ளும் சாதனங்களில் ஒன்றாகவும் வேலை செய்கிறது. சருமம் சுத்தமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தால்தான் உடம்பில் நல்ல சுரணை இருக்கும். சருமத்தின் வெளிப்பக்கம் மெல்ல மெல்ல வறண்டுபோய் உயிரற்ற செதிளாக மாறிவிடுகிறது. இந்தச் செதிளை அடிக்கடி போக்காவிட்டால் உடம்பிலுள்ள வேர்வைக் கோளங்களும், எண்ணெய்க் கோளங்களும் சரியானபடி வேலை செய்ய முடியாது. வேர்வை முதலிய பல அழுக்குகளை வேர்வைக் கோளங்கள் வெளியே தள்ளுகின்றன. அந்த அழுக்குகள் சருமத்தின்மேல் படிந்துவிடுகின்றன. எண்ணெய்க் கோளங்கள் எண்ணெயோடு சில அழுக்குகளையும் வெளியே தள்ளுகின்றன. இவையும் சருமத்தின்மேல் படிந்து

விடுகின்றன. இதனால் கோளத்துவாரங்கள் அடைபட்டு விடுகின்றன.

நாம் வேலை செய்யும் போதும் வெளியே செல்லும்போதும் வெளி அழுக்குகள் வேறு நம் மேனியில் படிந்துவிடுகின்றன. இந்த வெளி அழுக்கு, வேர்வை அழுக்கு, எண்ணெய் அழுக்கு எல்லாம் ஒன்று சேர்ந்தால், அது பல வியாதிகளுக்குக் காரணமாகிவிடும். வேர்வையை உறிஞ்சுவதற்குத் தக்க ஆடை இல்லாவிட்டாலும், உஷ்ணநிலைக்கு ஏற்ற ஆடை இல்லாவிட்டாலும், இறுக்கமான ஆடை அணிந்தாலும் சருமம் சரியாக வேலை செய்யாது.

உடம்பில் படியும் எல்லா அழுக்கும் போகும்படி தேய்த்துக் குளிக்க வேண்டும். துண்டைப் போட்டுத் துடைப்பதால் இந்த அழுக்கில் ஒரு பகுதிதான் நீங்கும். சோப்போ சீக்காயோ போட்டு உடம்பை நன்றாகத் தேய்த்துக் குளிப்பதே எல்லா அழுக்கையும் போக்கிக் கோளங்கள் நன்றாக வேலை செய்ய உதவும். இப்படிச் சுத்தமாகக் குளிப்பதால் உடம்பு மொர மொரப்பாகும்; மனசுக்கும் ரம்யமாக இருக்கும்.

கங்கையும் விகடகவியும்

கோயில்களிலே சுத்தத்தைக் காணோம். அழகான ஏரியின் கரையையும் மலையின் உச்சியையும் கண்டால், அங்கே கோயிலைக் கட்டுகிறோம். அமெரிக்கரோ இப்படிப்பட்ட அழகான இடங்களில் ஹோட்டல்களைக் கட்டிவிடுவார்கள். நாம் கோயிலைக் கட்டினாலும், சாமியைச் சகதியிலே புரள விடுகிறோம். நம் காலையும்விட அழுக்கான குளத்தில் காலைக் கழுவி விட்டுத்தான் நாம் கோயிலுக்குள் நுழைய வேண்டும்.

இங்கே எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. பிரசித்தி பெற்ற அமெரிக்க விகட ஆசிரியர் மார்க் ட்வெயின் ஒரு முறை இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசங்கங்கள் புரிந்தார். அப்போது காசியில் சில ஹிந்து நண்பர்களுடன் அவர் கங்கைத் துறைக்குப் போனார்; தண்ணீரைப் பார்த்தார். தம் தாடியை உருவிக்கொண்டே ஒரு ஹிந்து நண்பரை நோக்கி, "இந்தத் தண்ணீரிலா குளிப்பது? இது மிகவும் அழுக்காயிருக்கிறதே!" என்று கேட்டார்.

"மிஸ்டர் ட்வெயின், நீங்கள் இப்படிக் கேட்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் நாட்டு விஞ்ஞான சாஸ்திரிகளே இந்தக் கங்கைத் தண்ணீரை ஆராய்ச்சி செய்துவிட்டு, இதிலே எந்த நோய்க் கிருமியும் வாழாது என்று சொல்லியிருக்கிறார்கள். இது தெரியாதா உங்களுக்கு?" என்று கேட்டார் ஹிந்து நண்பர். (கங்கைத் தண்ணீருக்குமேலே இரண்டு மூன்று அங்குல உயரத்துக்கு ஒரு விசித்திரமான புகைப்படலம் கிளம்பிக் கிருமிகளையெல்லாம் கொன்றுவிடுகிறதாம். இது உண்மை.)

அமெரிக்க ஆசிரியர் தமது மீசையைச் சுளித்துக்கொண்டார். கண்களைச் சிமிட்டினார். "உண்மை, உண்மை. நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். சுயமதிப்புள்ள எந்தக் கிருமியும் இதில் வாழச் சம்மதிக்காது" என்றார்.

—டாக்டர் கிருஷ்ணலால் ஸ்ரீதரானி (காரவான்)

காளிதாஸனுக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கும்—

மகாகவி பாரவி

டாக்டர் வே. ராகவன்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சம்ஸ்கிருத கவிஞர்களில் உன்னத ஸ்தானம் வகிக்கும் மகாகவி பாரவியைப் பற்றிச் 'சிந்தனை' (சென்னை) யில் நண்பர் ராகவன் நீண்டதொரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் சில பகுதிகளின் சாரம் இது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

ஸம்ஸ்க்ருத மொழியில் 'பஞ்ச மகா காவியங்கள்' என்று சொல்லப்படும் ஐம்பெருங்காப்பியங்களை இயற்றிய கவிஞரில் காளிதாஸனுக்கு அடுத்த ஸ்தானம் வகிப்பவர் மகாகவி பாரவி. கி. பி. 600-ஆம் வருஷத்தில் பாரவியின் பெருமை உச்ச நிலையை அடைந்திருந்தது. புளகேசியின் சகோதரனும், வேங்கி இளவரசனும், கிழக்குச் சாளுக்கிய வம்சத்தின் மூலபுருஷனுமான குப்ஜவிஷ்ணுவர்த்தன ராஜனுக்குப் பாரவி மிகவும் நெருங்கிய தோழர். அரசனுடைய வேட்டையில் அவனோடு இவரும் காட்டுக்குச் சென்று வருவார்.

இப்படிப்பட்ட வேட்டை ஒன்றில் பாரவி ஒரு சுலோகம் இயற்றினார். அதாவது: "திடீரென்று ஒரு காரியத்தைச் செய்யலாகாது; பகுத்தறிவை இழப்பது பேராபத்துக்கு இடம். எதையும் ஆராய்ந்து செய்வோனை, நற்குணங்களில் பேராசைவைத்த ஐசுவரியங்கள் தாமாகத் தேடிவருகின்றன." அரசன் இதை மிகவும் பாராட்டித் தங்கத்தகட்டில் செதுக்கி, தன் பள்ளியறையில் படுக்கைக்கு மேல் மாட்டியிருந்தான். ஒரு நாள் வேட்டையிலிருந்து வேகமாய் வந்து தன் அறைக்குள் புகுந்த அரசன், படுக்கையில் தன் மனைவி குழந்தையோடு படுத்திருப்பதைத் தவறாக நினைத்து வெட்டப்போக, "திடீரென்று ஒரு காரியத்தைச் செய்யலாகாது" என்று கண்முன் தொங்கும் சுலோகம் அரசனைத் தடுத்து, மனைவியையும் மகனையும் காப்பாற்றியது.

மகாகவி பாரவி எழுதியதாக நமக்கு இன்று கிடைத்திருக்கும் நூல் 'கிராதார்ஜுனீயம்' என்ற மகாகாவியம் ஒன்றே. மகாபலிபுரத்தில் 'அர்ஜுனன் தவம்' என்ற அற்புதமான சிற்பத்துக்கு ஆதாரமாக இருந்தது பாரவியின் இந்தக் காவியமே. கங்க வம்சத்தரசனான துர்விநீதன் பாரவியிடம் தனக்கு இருந்த நட்பினாலும் மதிப்பினாலும், தானாகவே இந்தக் காவியத்துக்கு ஓர் உரை எழுதினான்.

'பாரவியின் வாக்குப் பொருள் செறிந்தது' என்பது ரஸிகர்களுக்குள் வழங்கும் மொழி.

கிராதார்ஜுனீயத்தின் பதினெட்டுச் சருக்கங்களிலும் கவியின் ஆழ்ந்த கருத்துக்கள் விரவிக்கிடக்கின்றன.

அவர் காவியத்தில் ஒரு காட்சி

தர்மன் தீர்மானம்

மகாகவி பாரதி

மனைவி திரௌபதியோடும் தம்பிமார்களோடும் துவைத வனத்தில் தர்மர் வாசம் செய்து கொண்டிருந்தார். அப்போது துர்யோதனன் தனக்கே ராஜ்யம் நிலைக்கவேண்டும் என்று கருதிப் பல சதியாலோசனைகள் செய்து வந்தான். ஒற்றன் வந்து இதைத் தர்மரிடம் சொன்னான். அதை அவர் ஆத்திரப்படாமல் நிதானமாகப் பீமனிடம் தெரிவித்தார். அப்போது கூட இருந்த திரௌபதி அடக்க முடியாத வருத்தங் கொண்டு, தர்மரின் ஆத்திரத்தைத் தூண்டிச் செயலாற்றும்படி செய்யும் இந்தச் சொற்களைச் சொல்லத் தொடங்கினாள் :

"தங்களைப் போன்றவர்களுக்குப் பெண்கள் உபதேசிப்பது தகுமா? என்றாலும், என் மன வருத்தத்தால் தான், பெண்களின் வரம்பையும் மீறி நான் பேசுகிறேன். இந்த ராஜ்யத்தை உங்கள் முன்னோர்கள் வெகு காலமாகத் தங்கள் தோள் வலியினால் காப்பாற்றி வரவில்லையா? மதயானையின் கையில் கொடுத்த மலர்மாலையைப் போல் இதைத் தாங்கள் ஒரு நொடியில் உதறி எறிந்துவிட்டீர்களே! இது சரியா? ஒன்றுமட்டும் நான் தீர்மானமாகக் கூறுவேன். மாயாவிகளிடம் தாங்களும் மாயாவிகளாகவே நடந்து கொள்ளாத மூடர்கள் தோல்வியடைவது நிச்சயம். போரில் கவசம் தரியாத போர் வீரனைப் பரிசுத்தன் என்று மதித்து அம்புகள் விட்டுவிடுமா? எவனுடைய கோபம் வீணாகாதோ அவ

பாண்டவர் வனவாசத்தில் சிவபெருமானிடம் அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற வேண்டும் அவன் தவம் செய்யப் போகிறான். அதற்குப் பூர்வாங்கமான கட்டத்தைக் கவிஞர் சித்திரிக்கிறார்.

னுக்கு மற்றவர்கள் தாமாக வசப்படுவார்கள். ரோசமில்லாத மனிதனுடன் சண்டையிட்டால் என்ன, நட்புரிமை பாராட்டினால் என்ன? இரண்டும் ஒன்றுதான்.

"ரத்த நிறமான சந்தனம் பூசி மகா ரதத்திலேறிச் சென்றுவந்த இந்தப் பீமன் புழுதி புரள இந்த மலைப் பாதையில் நடந்து செல்கிறாரே, இது சத்தியசந்தராகிய உங்கள் மனத்தை ஏன் உறுத்தவில்லை? உத்தரகுரு தேசம் முழுவதையும் ஜயித்து ஏராளமான செல்வத்தைத் தங்களிடம் சொரிந்த இந்த அர்ஜுனன் உங்களுக்கு மர உரியைத் தூக்கிக்கொண்டு வருகிறாரே, இதைக் கண்டு உங்கள் மனம் கொதிக்கவில்லையா? கரடுமுரடான காட்டிலே படுத்துப் படுத்து நகுல சகதேவர்களின் உடம்பு காட்டானையின் உடம்புபோல் தடித்துத் தழும்பு விழுந்துவிட்டதே! இதைக் கண்டுங்கூடப் பகைவருக்குத் துளியும் கேடு செய்ய உங்களுக்கு மனம் வரவில்லையே, என்?

"உங்கள் மனப்போக்கு எனக்குப் புரியவில்லை. மனிதர்களின் மனப் போக்கிலே எத்தனையோ விசித்திர மான வகைகள் உண்டு. ஆனால், உங்கள் ஆபத்தைக் காண்பவரெல் லாம் மனம் கலங்கும்போது, நீங் கள் அசையாமல் உட்கார்ந்திருக்கி றீர்களே, இதுதான் ஆச்சரியம்! சாந்தத்தை விட்டுத் தொலையுங்கள். பகைவர்களோடு போர் செய்யத் துணியுங்கள். முனிவர்கள் தாம் எதி லும் பற்றை விட்டு அடக்கத்தினால் வெற்றிமாலை சூடிக்கொள்வார்கள்; அரசர்கள் அல்ல. பராக்கிரமத்தை விட்டுப் பொறுமையையே என் றென்றும் இன்பசாதனமாகக் கொள்வதாயிருந்தால், அரசருக்கு உரிய இந்த வில் உங்களுக்கு எதற்கு? இதை எறிந்துவிட்டுக் காட்டிலே நீ வளர்த்துக்கொண் டிருக்கலாமே!"

பாஞ்சாலியின் இந்தப் பேச்சைப் பீமன் ஆமோதித்தான். அவன் தர்மரிடம் சொல்லலானான்:

"அறிவுக் கண்களிலே அன்பு ததும்ப, க்ஷத்திரியப்பெண் பாஞ் சாலி கூறிய வார்த்தைகளை வாக்குக்கு அதிபதியான பிருஹஸ் பதிகூடப் பேசியிருக்க முடியாது. நீதிசாஸ்திரம் கடினமாயிருந் தாலும் வியாக்கியானங்களின் உதவியால் அதை யாரும் அறிந்து கொள்வார்கள். குளம் ஆழமாயிருந் தாலும் படிக்கட்டு இருந்தால் எல்லோருமே அதில் இறங்கமாட் டார்களா? திரௌபதி சொன்ன சொற்கள் மிகவும் சொற்பமே. ஆனால் அவற்றின் குணம் அபாரம்; அது முடிவில்தான் தெரியும். மன வலிமையை இழந்தவர்களுக்கு அவை கஷ்டமாகவே தோன் றும். அதற்காக அவற்றைப் புறக் கணிப்பது சரியல்ல. சிறிதளவு சாப்பிட்டாலும் நாளடைவில் மிகுந்த குணம் காட்டத் தக்க வீரிய முள்ள மருந்தைச் சாப்பிட ருசி யாக இல்லை என்று புறக்கணிப்பது நியாயமா? அழகான பொருள் கொண்ட இவள் சொற்களை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். புத்தி மான்கள் சொல்லின் குணத்தைக் கவனிப்பார்களேயல்லாமல், சொல் லுகிறவர் யாரென்று பார்ப்ப தில்லை.

"அரசே, தாங்கள் ராஜ நீதியை நன்றாகக் கற்றவர்கள். அப் படிப்பட்ட உங்கள் அறிவு, சேற்றில் உழன்று தவிக்கும் யானைபோல் ஏன் தவிக்கவேண்டும்? பகைவன் ஏறிக்கொண்டே போகிறான்; நாமோ தாழ்ந்துகொண்டே இருக் கிறோம். புத்திமான் தானவது தாழாமல் நிலைபெற முயலுவான்; அல்லது பகைவனின் முன்னேற் றத்தையாவது தடுப்பான். பகை வரை அலட்சியம் செய்து தன் சக்தியை இழந்த அரசர்களிட மிருந்து திருமகள் தானாகவே நழுவிவிடுவாள். இல்லாவிட்டால் உலகத்தோர் அவளை அன்றோ இகழ்வார்கள்?

"பராக்கிரமம் இல்லாதவனை ஆபத்து அடிமை கொள்ளும். ஆபத் தில் சிக்குண்டவனுக்கு வருங்கால நன்மை இராது. வருங்கால நன்மை இல்லாதவனிடம் மக்களுக்கு மதிப்பு இராது. மதிப்பில்லாதவன் அரசாட்சிக்கு எப்படி உரித் தாவான்? ஆகவே, முயற்சி இல்லா மல் வருத்தமுற்றிருக்க வேண்டாம். வருத்தத்தோடு செல்வம் சேர்ந்து வாழாது.

"மதம் பிடித்த யானைகளைத் தானே சிங்கம் அடித்துத் தின்னும்? தோள்வலி உள்ளவன் தன் கௌர வத்தை இழந்து பிறரிடம் கையேக்

திப் பிழைக்கமாட்டான். மானமுள்ளவன் நிலையில்லாத உயிரைத் துறந்து அழியாப் புகழ் தேடுவான். மின்னல் கொடிபோல் நொடிப் பொழுதில் மறையும் செல்வம் அவனுக்கு இடையிலே வரும் ஒரு பயனாகும். அதுவே அவனுடைய முக்கிய நோக்கமல்ல; புகழ்தான் அவனுக்கு முக்கியம். சாம்பலை மிதித்துக்கொண்டு மக்கள் போவார்கள். ஆனால், கொழுந்துவிட்டு எரியும் தீயை அவர்கள் அணுகுவார்களா? தோள்வலி போனால் ஜனங்கள் மதிக்கமாட்டார்கள் என்று பயந்து மானிகள் அதற்கு முன்பே உயிரை விட்டுவிடுகிறார்கள். இடி இடித்தால் சிங்கம் ஏன் அதற்கு நேராகப் பாய்கிறது? தம்மைப் பிறர் அலட்சியம் செய்து முன்னேறுவதைப் பெரியோர் பொறுக்கமாட்டார்கள்.

"ஆகவே, உங்கள் சோம்பலை ஒழித்துத் தோள்வலியைக் காட்டுங்கள். எங்கள் மனத்தில் பகைவர் மூட்டிய நெருப்பை அவர்களுடைய மனைவிமார்களின் கண்ணீர் அணைக்கட்டும்!"

இதைக் கேட்டுத் தர்மர் பின்வருமாறு சொன்னார்:

"பீமா, தெளிவாயிருக்கிறது உன் பேச்சு. அதில் யுக்தி இருக்கிறது. ஆனால், அது சாஸ்திரத்தைப் பாதிக்கவில்லை. இத்தகைய பேச்சை உன்னைத் தவிர வேறு யார் பேசியிருக்க முடியும்? இருந்தாலும் என் உள்ளம் உன் பேச்சில் திருப்தியுறவில்லை. எதையும் யோசித்துத்தான் செய்யவேண்டும். யோசியாமல் செய்யும் காரியம் ஆபத்துக்கு இடம்.

"கோபம் என்ற இருள் மனத்தைச் சூழ்ந்து கிடந்தால், செய்ய வேண்டிய காரியத்தை மனிதன் உணர மாட்டான். அப்போது சாஸ்திரம் என்ற விளக்குத்தான் விவேகிகளுக்கு வெளிச்சம் காட்டும். அந்த வெளிச்சத்தைப் பின்பற்றிச் செல்லுபவன் தாழ்வுற்றாலும் அது அவனுக்கு மேன்மையே. ஆகவே, கோபம் என்ற இருளைப் புத்தியால் விலக்கித்தான் காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும். இரவின் இருளை விலக்காமல் சூரியன் உதிப்பதுண்டா? கோபத்தை அடக்காதவன் பலவானாக இருந்தாலும், கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனைப் போல் தேய்ந்துபோய்விடுவான். நாம் நம் வெளிப் பகைவர்களை அடக்குவதற்குமுன் உள் பகைவர்களான காமக்குரோதங்களை அடக்கவேண்டும். இல்லாவிட்டால் அபகீர்த்திக்கு ஆளாகிவிடுவோம். வணங்காமுடிப் பகைவர்களின் முன்னேற்றத்தைப் புத்திமான்கள் பொருட்படுத்த மாட்டார்கள். ஏனென்றால், அவர்களுடைய செல்வம் நிலைக்காது. அவர்கள் எதிலாவது சிக்கிக்கொள்வது நிச்சயம். அப்போது அவர்களைச் சுலபமாக ஜயித்துவிடலாம்."

தர்மர் இப்படிக் கூறி முடித்ததும், அவருடைய கொள்கையே வெற்றி யுருக்கொண்டதுபோல வியாச பகவான் அங்கே வந்து தோன்றினார்.

எத்தனைதான் இயக்கங்கள் நடந்தாலும் இன்னமும் பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறார்கள். இந்த நிலை மாற என்ன வழி?

பெண்களின் முன்னணி

ஸரலா பாடண்கர்

"ஏண்டி சக்கு, நீ எம். ஏ. தானே?"

"ஆமாம், பட்டம் வாங்கி மூன்று வருஷமாச்சே!"

"இப்போது என்ன செய்கிறாய்?"

"என்னத்தைச் செய்வதம்மா! அருவும் ஸூமாவும் போடும் சச்சரவைத் தீர்ப்பதற்கே பொழுது சரியாக இருக்கிறது."

* * *

"என்ன விபா, 1942- இயக்கத்தில் உன்னால் நான்கூட வீரனாகி விட்டேன். இப்போது உங்கள் ஊரிலேயே இவ்வளவு அடக்குமுறை நடக்கும்போது நீ கம்மென்று குந்தியிருக்கிறாயே?"

"அது உனக்குப் புரியாது, அண்ணா! அரசியல் இயக்கம் கிடக்கிறது; கல்விப் பிரசாரம் போன்ற தொந்தரவில்லாத வேலையைக்கூட இப்போது என்னால் செய்ய முடியவில்லை. கூட்டங்களுக்குப் போகவோ, எழுதப் படிக்கவோ, நாலு பேரோடு பழகவோ முடிவதேயில்லை."

"ஏன், வசந்தன் உன்னை வேண்டாமென்று தடுக்கிறாரோ?"



"இதில் எல்லாம் தலையிட்டுக்கொள்ள யாருக்குப் போது இருக்கு?" என்கிறாள் ஒரு பெண்மணி.

"அதில்லை அண்ணா, வீட்டு வேலைகளைச் செய்து முடிப்பதற்கே பொழுது இருப்பதில்லை."

* * *

"பாட்டுக் கச்சேரிக்கு வருகிறாயா, விமலா?"

"நான் வர முடியாதுடீ, கமலா! வீடுகொண்ட வேலை அப்படியே போட்டுக் கிடக்கிறது. ஆச்சு, அவர் ஆபீசிலிருந்து வந்துவிடுவார். நினைத்தபடி வெளியே போவதும் வருவதுமாயிருந்தால் குடித்தனம் எப்படி நடக்கும்?"

* * *

"சம்சாரத்தைக் கவனிப்பதைவிட நமக்கு வேறு என்ன வேலை? ஒருவேளை கல்யாணமே ஆகாதிருந்தால், நானும் நாவல்கள் படிப்பேன்; லேடீஸ் கிளப்புக்குப் போவேன். இப்போது இதிலெல்லாம் தலையிட்டுக்கொள்ள இங்கே யாருக்குப் பொழுது இருக்கிறது?"

* *

இம்மாதிரியான சம்பாஷணைகள் அடிக்கடி நம் காதிலே விழுகின்றன. சில முதலாளிகள் வீட்டுப் பெண்களையும்,

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி: ஜூன் '48), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா.



பெண்கள் புராணவாதிகளாகவும்...

கொழுத்த சம்பளம் வாங்கும் அதிகாரிகள் வீட்டுப் பெண்களையும் தவிர்த்து மற்றபடி எங்கே பார்த்தாலும் பெண்களிடையே இந்தக் குறை தென்படுகிறது. வீட்டு வேலைகளுக்கே பொழுது காணாத பெண்ணின் அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது. வேகமாக இயங்கும் சமூக வாழ்க்கையிலே, அறிவு வளர்ச்சி இல்லாதவர் எவரும் தோற்றுப் பின்னடைய வேண்டியதுதான். ஆண்கள் வெளியுலகத்திலே வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதனால், அவர்களுடைய அறிவு மேல்மேலும் வளர்ந்து வருகிறது. ஆண்கள் சீர்திருத்தவாதிகளாகவும், அறிவாளிகளாகவும், முற்போக்காளராகவும் இருக்கப் பெண்கள் புராணவாதிகளாகவும், குருட்டு நம்பிக்கை கொண்டவர்களாகவும், பிற்போக்காளராகவும் இருக்கிறார்கள்.

பெரும்பாலான பெண்கள் இன்று விஞ்ஞானம், கலை, பண்பாடு முதலிய அறிவுச் சாதனங்களோடு தொடர்பில்லாமலே வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். பெண் விடுதலை இயக்கத்தை இன்று வரைக்கும் தவறான வழியிலேயே நடத்தி வந்திருக்கிறார்கள். முன் காலத்தில், "பெண்கள் அபலைகள்; ஆண்களைச் சார்ந்தே அவர்கள் வாழ வேண்டும்" என்று சொன்னார்கள். பிறகு முதலாளி யுகத்திலே பெண்ணை வீட்டுக்குள்ளேயே தெய்வமாக்கி, ராணியாக்கி, தலைவியாக்கி வைத்தார்கள். வீட்டுக்குள்ளே முழு ராஜ்யமும் அவளுக்குத்தானாம்! 'தொட்டிலை ஆட்டும் கயிறு எவளிடம் இருக்கிறதோ, அவள்தான் உலகத்தைக் கடைத்தேற்றுகிறாள்' என்பது சூத்திரம். இந்தத் தத்துவத்திலுள்ள வண்டவாளமெல்லாம் சீக்கிரமே அம்பலமாகி விட்டது. இந்த ஏமாற்றத்திலிருந்து விடுபட விரும்பிய பெண்கள் இரண்டு வழிகளில் சென்றார்கள்.

குடும்பத்திலே இருந்துங்கூட அதற்குக் கட்டுப்படாமல் சமூகத் தொண்டிலே ஈடுபட முயன்றவர்



"அது உனக்குப் புரியாது, அண்ணா!" என்கிறாள் விபா.



"நான் பாட்டுக் கச்சேரிக்கு வர முடியாதுடீ, கமலா" என்கிறாள் விமலா.

கள் சிலர். இவர்களால் தங்களுக்கும் சுகம் இல்லை; குடும்பத்துக்கும் சுகம் இல்லை. எனவே இது ஆபத்தான வழியாயிற்று.

மற்றும் சிலர் ஆண்களுக்கு அடிமையாகாமலே வாழ முனைந்து, மணம் செய்துகொள்ளாமலே சமூகத் தொண்டில் ஈடுபட்டார்கள்; அபரிமிதமான தியாகங்கள் செய்தார்கள். இயற்கைக்கு மாருன இந்த வழியும் வெற்றி பெறவில்லை.

மொத்தத்தில் இன்று பெண்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்தரம், தொழிலாளிகளுக்குக் கிடைத்திருக்கும் சுதந்தரத்தைப் போலச் சட்டத்திலும் பேச்சிலுந்தான் இருக்கிறது. பெண்விடுதலை இயக்கம் வலுப் பெற்று வெற்றியடைய வேண்டுமானல், அந்த இயக்கம் இரண்டு முன்னணிகளை வகுத்துக் கொள்ளவேண்டும்.

ஒன்று—குடியானவப் பெண்கள் வயல் வேலைகளோடு வீட்டுவேலைகளையும் செய்கிருர்கள். தொழிலாளிப் பெண்கள் ஆலைகளிலும் தொழிற் சாலைகளிலும் வேலை செய்துவிட்டுக் குடும்பப் பொறுப்புகளையும் நிறைவேற்றுகிருர்கள். ஏழையான நடுத்தர வகுப்புப் பெண்கள் நர்ஸிங், உபாத்திமை, தையல் முதலிய தொழில்களோடு வீட்டு வேலைகள் செய்கிருர்கள். இவர்கள் எல்லோரும் டிரேட் யூனியன் போன்ற ஒரு சங்கத்தை நிறுவிக்கொள்ள வேண்டும். தொழிலாளர் கட்சியோடு கலந்தும், தனியாகவும் இந்தச் சங்கம் பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட வேண்டும்.

இரண்டாவது— வெளியே உழைத்துப் பாடுபடுவதோடு குடும்பப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதால் இந்தப் பெண்கள் மிகவும் துன்பப் படவேண்டியிருக்கிறது. துன்பத்தைக் குறைப்பதற்காகச் சர்க்கார் செலவில் குழந்தை வளர்ப்புக் கழகங்களும், கல்விச் சாலைகளும், கிராமாந்தரங்களில் மின்சார வசதியும், ஹோட்டல் ஆஸ்பத்திரி முதலிய வாழ்க்கை வசதிகளும் ஏற்பட வேண்டும். சர்க்காரிடம் இவற்றைக் கோருவது இரண்டாவது முன்னணியாகும்.

இப்படிக் கட்டுப்பாடான முறையிலே போராடுவதனல், சில்லறைச் சச்சரவுகள் ஒய்ந்து, நாட்டின் செயல் திறமை முழுவதும் முன்னேற்றத்துக்குப் பயன்படும். முதலாளித்துவம் தோற்றுப் போய் உண்மையான பொதுநலச் சமுதாயம் ஏற்படும். மனிதவர்க்கத்தில் அநாதிகாலமாக வீட்டுக்குள்ளே அடைபட்டிருக்கும் ஒரு பெரும் பகுதி விடுதலை பெறும்.

இது என்ன பயம்?

இன்று நம் அனைவரையும் பயமே அரித்துக்கொண்டிருக்கிறது. வருங்காலம் எப்படி இருக்குமோ என்ற பயம்; யுத்த பயம்; நமக்குப் பிடிக்காத அல்லது நம்மைப் பிடிக்காத மக்களிடமும் தேசத்திடமும் பயம். அந்தப் பயம் நியாயமான தாக இருக்கலாம். ஆனல், பயம் அற்ப உணர்ச்சிகளை எழுப்புகிறது; அற்ப உணர்ச்சிகள் குருட்டுப் போராட்டத்தை மூட்டி விடுகின்றன.

—பண்டித ஜவாஹர் (ரேடியோ பேச்சு)

படிப்புக்காக உத்தியோகம்

நாலாங்கல் கிருஷ்ணப் பிள்ளை

அமெரிக்காவில் உயர்தரக் கல்லூரிகளில் படிக்கும் மாணுக்கர்கள், தாங்களே பணம் சம்பாதித்துத் தங்கள் படிப்புச் செலவைச் செய்துகொள்ளுகிருர்கள். அந்த நாட்டில் உயர்தரக் கல்வி தொடங்கிய காலம் முதற்கொண்டே இந்த வழக்கம் அங்கே இருந்து வருகிறது. ஒவ்வொரு வருஷமும் சர்வகலாசாலைகளிலோ கல்லூரிகளிலோ சேரும் பல்லாயிரக் கணக்கான மாணுக்கர்கள் இவ்வாறு தாங்கள் படிப்புச் செலவுக்காகப் பணம் சம்பாதிக்க விரும்புகிருர்கள்.

புகழ்பெற்ற பல அமெரிக்கர்கள் இப்படித் தங்கள் படிப்புக் காலத்தில் பல ஊழியங்கள் புரிந்திருக்கிருர்கள். ரூஸ்வெல்ட்டுக்கு முன் அமெரிக்க ஜனுதிபதியாக இருந்த ஹெர்பர்ட் ஹூவர் என்பவர் எஞ்சினீரிங் கல்லூரியில் படிக்கும்போது, தினசரிப் பத்திரிகைகளை விற்றும் துணி வெளுத்தும் பணம் சம்பாதித்தார். அமெரிக்க சுப்ரீம் கோர்ட் பிரதம ஜட்ஜியாக இருந்த ப்ரெட் எம். வில்ஸன் என்பவர் தமது படிப்புச் செலவுக்காக ஓர் ஆரம்பக் கலாசாலையிலும் ஒரு புஸ்தக சாலையிலும் வேலை பார்த்துவந்தார். பிலிப்பைன் தீவில் அமெரிக்காவின் பிரதிநிதியாக இருந்த பால் மக்னுட் என்பவர் தம் படிப்புச் செலவுக்காக ஒரு பத்திரிகாலயத்தில் நிருபர் வேலை பார்த்தார். மார்க்கரட் புக்வைட் என்பவர் உயிர்நூல் கல்வி கற்பதற்காகக் கர்னல் சர்வகலாசாலையில் சேர்ந்தார். அவர் தமது படிப்புச் செலவுக்காகப் படம் பிடிக்கும் வேலையில் ஈடுபட்டார். முடிவில் இந்தப் படம் பிடிக்கும் தொழிலிலேயே அவர் மனம் லயித்துவிட்டதால், இதையே தம் ஜீவனத் தொழிலாகக் கைக்கொண்டுவிட்டார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

"ஐயாயிரம் செலவழித்துப் படிக்க வைத்தேன்; ஆருயிரம் செலவழித்துப் படிக்க வைத்தேன். பையனுக்கு முப்பது ரூபாயில் ஓர் உத்தியோகம் கிடைக்கமாட்டேன் என்கிறது" என்று பிரலாபிப்போர் நம் நாட்டில் உண்டு; இந்தப் படிப்புச் செலவுக்குப் பயந்தே தம் குழந்தைகளைப் படிக்க வைக்காது விடுவோரும் உண்டு. அமெரிக்காவிலோ பிரபு வீட்டுக் குழந்தைகள் முதற் கொண்டு, பல சிறுவர்கள் ஈனம் என்று எதையும் தள்ளாமல் அகப்பட்ட தொழில் புரிந்து பணம் சம்பாதித்து, அதைக் கொண்டே படித்துவிடுகிருர்கள்!

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சகல அமெரிக்கச் சர்வகலாசாலைகளிலும் படிக்கும் மாணுக்கர்களுடைய மொத்த எண்ணிக்கை இந்த நூற்ருண்டின் ஆரம்பத்தில் இருந்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 6-6-'48), கள்ளிக்கோட்டை.

தைவிட இப்போது ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது. 1900 ஆம்ஞு 2,50,000 அமெரிக்க மாணுக்கரே சர்வகலாசாலேகளில் படித்தார்கள். 1941-ஆம் வருஷத்திலோ 15,00,000 மாணுக்கர் அவற்றில் படித்தார்கள். 1937 - 38-ஆம் வருஷம் படித்த மாணுக்கர்களில் 100-க்கு 33-பேர் சுயமாகப் பணம் சம்பாதித்தார்கள். சில சர்வகலா சாலேகளில் 100-க்கு 75 மாணுக்கர் கூடத் தாமே சம்பாதித்துச் செலவு செய்துகொண்டார்கள்.

வகுப்பில் படிப்பதோடு வேறு வேலேயும் செய்வதற்குச் சௌகரிய மாகப் பல தொழில் வசதிகளேயும் 'ஷிப்டு' முறையையும் அமெரிக்கக் கல்லூரிகளில் ஏற்படுத்தியிருக்கி ருர்கள். பகலில்தான் போதிப்பது என்ற பிடிவாதத்தை விட்டு இரவி லும் 7மணி முதல் 10 மணி வரை யில் வகுப்புகளே நடத்துகிருர்கள். கல்லூரி அதிகாரிகள் வர்த்தகச் சங் கத்தின் உதவியைப் பெற்று ஹோட்டல்கள், ரெஸ்டாரெண்டுகள், விவசாயப் பண்ணேகள், பிற தொழிற்கூடங்கள் ஆகியவற்றிலெல் லாம் மாணுக்கர்களுக்கு வேலே வாங்கிக் கொடுக்கிருர்கள்.

கோடைக்காலத்தில் முழு நேர ஊழியம் புரிந்து பல மாணுக்கர்கள் தம் கல்விச் செலவுக்கு வேண்டிய பணத்தில் பெரும் பகுதியையும் சம்பாதித்துவிடுகிருர்கள். மக்களின் சுகவாச ஸ்தலங்களுக்குச் சென்று ஹோட்டலில் வேலே செய்தும், தலேச் சுமை சுமந்தும், சமையல் செய்தும், பாட்டுப் பாடியும் பல மாணுக்கர்கள் தங்கள் விடுமுறை நாட்களில் சம்பாதிக்கிருர்கள்.

சமீபகாலத்தில் சில வருஷங்க ளாக மாணுக்கர்களின் மேற்பார்வை யில் பல கலாசாலேகள் 'மாணுக் கர்களின் தொழில் ஏஜென்ஸி' களே நடத்திவருகின்றன. சலவைக் கம் பெனி நிர்வாகம், மாதப்பத்திரிகைப் பிரசுரம், ஸ்டேஷனரி சாமான்கள் விற்பனே, சோடா விற்பனே முதலிய பல தொழில்களே இந்த ஏஜென்ஸிகளே நடத்துகின்றன. ஏயில் சர்வகலாசாலேயில் 400 மாணுக்கர்கள் இத்தகைய தொழில் களே நடத்தி வருஷம் ஒன்றுக்கு 45,000 டாலர் வரையில் சம்பாதிக் கிருர்கள். ஏஜென்ஸிகள் முதல் வருஷ மாணுக்கர்களுக்கு மிகவும் எளிய வேலேகளேக் கொடுக்கும். பிறகு அவர்களுடைய படிப்பு உயர உயர அதற்கேற்ற பொறுப்புள்ள பெரிய வேலேகளேக் கொடுக்கும். இதோடு நிற்காமல், பல தொழில் துறைகளிலும் தேர்ச்சி பெற்ற அநேக மேதாவிகளேத் தயாரிப்பதற் காக ஓர் ஆராய்ச்சிச் சாலேயையும் இந்த ஏஜென்ஸிகள் நிறுவியிருக் கின்றன.

சுமார் 30 அமெரிக்கக் கலாசாலே களில் 'கூட்டுறவு' முறையைக் கைக் கொண்டு கல்வி கற்பித்துவருகிருர் கள். இந்தக் கலாசாலேகளில் ஒவ் வொன்றும் கட்டாயம் ஒரு தொழிற் சாலேயுடன் தொடர்பு கொண்டிருக் கிறது. இவற்றில் மாணுக்கர்கள் பாதி நேரம் படிக்கிருர்கள்; பாதி நேரம் வேலே செய்கிருர்கள். பெரும்பாலும் ஒரு வேலேயில் இரண்டு மாணுக்கர்கள் ஈடுபடுவார் கள். அவர்களில் ஒருவன் படிக்கும் போது மற்றவன் அந்த வேலேயைச் செய்வான். ஆகவே, முதலாளிக்கு நஷ்டம் ஏற்படாமல் அவர்கள் நடந்துகொள்ள முடிகிறது. பொதுவாக நான்கு வருஷங்களில் முடியும் படிப்பு, இந்த முறையில் படிப்பவர்களுக்கு ஐந்து வருஷங் களில் முடியும்.

பொது நன்மையில் விருப்பங் கொண்ட பல ஆண்களும், பெண் களும், பொது ஸ்தாபனங்களும் மாணுக்கர்களுக்குச் சம்பளம் கொடுத்து உதவுவதும் உண்டு. வெகு நாட்களாக 'ஹார்மன் பௌண்டேஷன்ஸ்' என்ற ஸ்தாப னம் மாணுக்கர்களின் படிப்புச் செலவுக்குக் கடன் கொடுத்து உதவிவருகிறது. கடன் வாங்கும் மாணுக்கர்களும் மோசம் செய்யாமல் அநேகமாய் அதை அடைத்துவிடு கிருர்கள். நூற்றில் இரண்டு அல் லது மூன்று பேருக்குக் கொடுக் கும் கடன் மட்டுமே நஷ்ட மாகிறது.

முழு நேரமும் கலாசாலையில் படிக்கும் மாணுக்கர்களும் பலர் உண்டு. அவர்களைப் போலவே முழு நேரமும் வேலை செய்யும் இளைஞரும் பெண்களும் பலர் உண்டு. அவர் களுக்கு இராப் பள்ளிக்கூடங்களி லும் தபாலின் மூலமாகவும் கல்வி கற்பிக்கிருர்கள்; பல தொழிற் பயிற்சிகளும் அளிக்கிருர்கள். நியூ யார்க் நகர மேயரான ஓடயர் போர்ட் என்பவர் ஹாம் என்ற சர்வகலாசாலையில் இரவில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டே பகலில் போலீஸ் உத்தி யோகம் பார்த்து வந்தார். பெரிய நகரங்களிலுள்ள பல சர்வகலா சாலைகள் தங்கள் இராப்பள்ளிக் கூடங்களைப் பற்றிப் பெருமையும் பாராட்டிக் கொள்ளுகின்றன. 'ஜார்ஜ் வாஷிங்டன்' சர்வகலாசாலை யில் நூற்றுக்குப் பத்து மாணுக்கர் கள் அதன் இராப் பள்ளிக்கூடங் களிலேயே படிக்கிருர்களாம்.

இராப்பள்ளிக்கூடம் நடத்தும் சர்வகலாசாலைகளும் பள்ளிக்கூடங் களும் பகல் பள்ளிக்கூடங்களுக்குச் சமமாகத் தங்கள் இராப்பள்ளிக் கூடங்களை நடத்த முயலுகின்றன. இராப் பள்ளிக்கூடங்களில் மிகவும் முக்கியமாக 'அக்கௌண்டன்ஸி', 'ரேடியோ', 'எஞ்சினீரிங்', கலைகள் முதலியவற்றைப் போதிக்க வேண்டும் என்று பலர் கருதுகி ருர்கள்.

சாஸ்திரியார் பதில்

ஒரு புது வைஸிராய்க்கு விருந்து நடந்தது. அங்கே சீனம். சீனிவாச சாஸ்திரியார் மிக்க லாகவமாக இங்கிலீஷ் பேசி யதைக் கேட்டு வைஸிராய் மகிழ்ந்து போனுர். "இங்கிலீஷ் உங்கள் தாய்ப் பாஷையில்லையே; அப்படி யிருந்தும், அதை இவ்வளவு அற்புதமாய்ப் பேசுகிறீர்களே! இதெப்படி? எங்கள் இங்கிலீஷ்காரர்களில் சிலர் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய சர்வகலாசாலைகளுக்கெல்லாம் போகிருர்கள். அவர்கள்கூட இவ்வளவு அழகாக இங்கிலீஷ் பேசவில்லையே!" என்று சாஸ்திரியாரைக் கேட்டார். சாஸ்திரியார் சிறிது தயங்கிக் கொண்டே, "இதன் காரணம் என்னவோ, எனக்குத் தெரியாது. இரண்டாயிரம் வருஷமாய் நிலவி வரும் ஒரு கலைப்பண்பாட்டிலே பிறந்தவன் அல்லவா நான்; அதுவே ஒருவேளை காரணமாயிருக்கலாம்" என்ருர்.

"ஓஹோ; ஆமாம்; ஆமாம்" என்று சொல்லி, அதோடு நின்றுவிட்டார் வைஸிராய்.

—(மினிமாக்)

கட்டுரைப் போட்டி முடிவு

தமிழ்நாட்டுப் பொதுஜனம்

'மஞ்சரி' முதல் இதழில் வெளியிட்டிருந்த கட்டுரைப் போட்டிக்கு வந்த கட்டுரைகளில் எதுவும் முழுப் பரிசுக்கு உரியதல்ல என்பது ஆசிரியர்கள் முடிவு. ஆனால், போட்டிக்கு வந்த ஐந்து கட்டுரைகளில் உள்ள சில வாசகங்கள் மட்டும் ரசமாயிருக்கின்றன. அவற்றைத் தொகுத்துக் கீழே வெளியிட்டிருக்கிறோம். அந்த ஐந்து கட்டுரையாளர்களுக்கும் பரிசுத் தொகையைச் சமமாகப் பகிர்ந்து, ஆளுக்கு ஐந்து ரூபாய் விகிதம் சம்மானம் அனுப்ப முடிவு செய்துள்ளோம். —ஆசிரியர்.

போது: காபி என்றால் தமிழர்களுக்கு உயிர். உண்ண உணவுகூட வேண்டாம். குடிக்கக் காபி கட்டாயம் வேண்டும்... தமிழர்கள் சிறந்த அறிவாளிகள்; நிர்வாகத்தில் நிபுணர்கள். பாங்கிகளும் பத்திரிகைகளும் நடத்துவதில் பலே கெட்டிக்காரர்கள் ... தமிழர்களின் செல்வம் பாங்கியிலும் பெண்ணின் கழுத்திலும் உறங்குமே யொழிய, வியாபாரத்தில் புரளாது...1000-க்கு 999 பேர் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். எஞ்சியவர்களிலும் அநேகர் தெய்வத்தை வாயார நிந்தித்தாலும் மனமார வணங்குவார்கள்.

—எஸ். ஆறுமுகம், சேரமான் புதூர் தெரு, செங்கோட்டை.

விவாகந்தான் தமிழர்கள் காதலின் முதல் கட்டம்.

—ஜி. ஏ. வடிவேலு, பஜார் தெரு, தர்மபுரி.

100-இல் 95- பேருக்குத் தெய்வ நம்பிக்கை உண்டு...காதல் மணம் அருமையிலும் அருமை. ஜாதகம் சரியாக இருந்தால், பிள்ளையைக் கொண்டு பெண்ணைப் பார்க்கச் சொல்லுகிறார்கள். இருவரும் மனப் பொருத்தம் தெரிவித்தால் மணம் நடக்கிறது. அதுவும் பணப் பொருத்தம் இல்லாவிட்டால் தட்டி விடுகிறது.

— எஸ். கிருஷ்ணமூர்த்தி, 21/396, தெலங்க் ரோடு, மாட்டுங்கா.

உடுக்கு, மகுடி, கச்சேரி மூன்றையும் ரசிக்கும் ஒரே கோஷ்டி.

100 - இல் 90 பேருக்கு ஆத்ம ஞானத்தைப்பற்றித்தான் கவலை..., 100-இல் 90 பேர் புராணப் படங்களை அதிகமாக விரும்புகிறார்கள்.

—எஸ். எம். பத்மநாபன், 11, கர்ணம் வீதி, போளூர்.

100-க்கு 100-பேர் பரம ரசிகர்கள். பிரபல சங்கீத வித்வான் கச்சேரியிலிருந்து, பாம்பாட்டியின் மகுடி வாசிப்பு உள்பட, மாரியம்மனுக்கு முருகப் பூசாரி உடுக்கடித்துப் பாடும் காத்தவராயன் கதை வரையிலும் ரசிப்பார்கள்... விருந்தளிப்பது தமிழர்களின் பிறவிக்குணம்.

குருவி வாலாக இருப்பது சவுரி உதவியுடன் நீளுகிறது.

ஆனால், அது இப்போது ரேஷன் காரணமாக மிகவும் மங்கியிருக்கிறது.

—எஸ். கன்னியப்பன், 15, சிங்காரி நாயக்கன் தெரு, மந்தைவெளி, மயிலாப்பூர்.

ஆண்: 100 - இல் 90 - பேர் கறுப்பு. ஆனால், அவர்களில் முக்கால்வாசிப்பேர் சிவப்புப் பெண்களையே வாழ்க்கைத் துணைவிகளாகப் பெற விரும்புகிறார்கள்... 100-இல் ஒருவர் சந்நியாசியாக விரும்புகிறார்.

—எஸ். எம். பத்மநாபன்



தபாலாபீசுக்கும் பத்திரிகாலயத்துக்கும் நடக்கும் கட்டுரையாளர்.

சராசரித் தமிழன் 5½ அடி உயரம். 10-இல் 8 பேர் சிவப்பான பெண்களை விரும்புகிறார்கள். சிலர் பாடத் தெரிந்த பெண்களை விரும்புகிறார்கள்... பெரும்பாலான ஆண்கள் பெண்களின் முன்னேற்றத்தில் கவலை எடுத்துக்கொள்வதில்லை; ஆனால் அதைத் தடைசெய்வதும் இல்லை ... மணமானவர்களில் அநேகர் பிரம்மசாரிகளே மகிழ்ச்சியுடன் இருப்பதாக எண்ணுகிறார்கள்.

—எஸ். ஆறுமுகம்

ஒவ்வோர் ஆடவனும் காதலித்தே ஒரு பெண்ணை மணக்க விரும்புகிறான். அநேகமாக யாருக்கும் அந்தப் பாக்கியம் கிடைப்பதில்லை...

வாசனை இருந்தாலும் இல்லாவிட்டாலும் கொண்டை நிறையப் பூ!

படித்த தமிழர்கள் கதையோ, கட்டுரையோ எழுதி, அவை பிரசுரமாக வேண்டும் என்பதற்காகத் தபாலாபீசுக்கும் பத்திரிகாலயங்களுக்கும் நடந்து நடந்து தம் தீவிரத்தைக் காட்டிவருகிறார்கள்.

—எஸ். கன்னியப்பன்

பெண்: உரிமைகள் குறைந்தவள். கற்பைக் காப்பாற்றிக் கொள்வதில் ஆர்வம் உள்ளவள்.

—ஜி. ஏ. வடிவேலு

வாசனை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மலர்களை ஏராளமாகத் தலையில் சூடிக்கொள்வாள்.

—எஸ். எம். பத்மநாபன்

அழகான ஆடைகள் அணிவதிலும் நகைகள் பூணுவதிலும் தமிழ்ப் பெண்ணுக்கு அடங்காத ஆசை.. ஒரு குடும்பம் என்றால் குறைந்த பட்சம் 'ஆசைக்கு ஓர் ஆணும் போய்வர ஒரு பெண்ணு'மாவது மக்கட்பேறு வேண்டுமென்று விரும்புவாள்.

—எஸ். ஆறுமுகம்

சராசரி உயரம் 5 அடி... 10-க்கு 2-பேருடைய கூந்தல் வெகு நீளம் நீண்டு தொடையைத் தொடும். 5 பேருடைய கூந்தல் நடுத்தரம். மற்றவர்களுடைய கூந்தல் 'குருவி வால்' போல் ஒரு சாண் நீளம் இருக்கும்; இவர்கள் சவுரி மயிரை வைத்து முடிந்து கூந்தலை அழகாகவும் பார்வையாகவும் இருக்கும்படி செய்து கொள்ளுவார்கள்... நகை அணியும் வழக்கம் உண்டு. சுமக்க முடியாத நகைகளைப் போட்டுக்கொண்டு அலங்காரப் பொம்மைகள்போல் பணக்காரப் பெண்கள் காட்சியளிப்பார்கள்... விவாகரத்து முதலிய உரிமை வேண்டுவோர் சிலர்; 'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்று எண்ணிக் குடும்ப பாரத்தை ஏற்றிருப்பவர் மற்றவர்.

—எஸ். கன்னியப்பன்

எல்லாப் பெண்களும் விசேஷ நாட்களில் கோயிலுக்குச் செல்லுகிறார்கள்.

—எஸ். கிருஷ்ணமூர்த்தி

குடும்பங்கள்: பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு விரைவில் மணம் செய்து வைக்கவும் அவர்களைக் குழந்தைகளோடு காணவும் விரும்புகிறார்கள்.

—ஜி. ஏ. வடிவேலு

கணவன் அவன் தாயிடம் அதிகப் பற்றுள்ளவனாயிருக்கிறான் என்று மனைவி எண்ணுகிறாள். மகன் அவன் மனைவி ஆட்டிவைக்கிறபடி ஆடுகிறான் என்று தாய் எண்ணுகிறாள். மாமி மருமகள் பகை மூளுகிறது. ஆசாமி எந்தப் பக்கம் சாய்வது என்று புரியாமல் விழிக்கிறான்.

— எஸ். ஆறுமுகம்

100-க்கு 5- விகிதம் தம்பதிகள் கணவனுக்கு மனைவி அடங்கி நடப்பதா, மனைவிக்குக் கணவன் அடங்கி நடப்பதா என்ற பிரச்னையிலே வாழ்நாளைக் கழிக்கிறார்கள்

— எஸ். எம். பத்மநாபன்

குணமும் நம்பிக்கையும்: தமிழர்கள் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைபவர்கள்...வாழ்வு சூழல் வாய்ந்ததாக இருந்தாலும் மறுமையிலாவது சுகம் அடைவோம் என்ற நம்பிக்கை கொண்டவர்கள்.

— எஸ். எம். பத்மநாபன்

நகைச்சுவை மன்னருக்கும் வேண்டும். முன்கால ராஜசபை களில் அதற்காகவே விகடகவிகள் இருந்தார்கள்.

பாதுஷாவின் விகடகவி

முத்தா விசுவநாதம்

அக்பர் பாதுஷா எந்த நேரமும் பேச்சினுல் பீர்பலை அடக்கவேண்டுமென்ற நினைவி லேயே இருப்பார்.

அக்பரின் படுக்கையறையில் எப் போதும் அபூர்வமான பழவகை கள் நிறைந்திருக்கும். எப்போ தாவது விருப்பம் வந்தால், அக்பர் ஏதாவது ஒரு வகைப் பழத்தைத் தின்பார். காலியான இடத்தில் உடனே ஒரு புதுப் பழத்தை வைத்துவிடுவார்கள்.

ஒரு காலத்தில் அறையில் வைத்த பழங்கள் குறைந்துகொண்டே வந் தன. அக்பர் இந்தப் பழத் திரு டனைக் கண்டுபிடிக்கும்படி ஊழியர் களுக்கு உத்தரவிட்டிருந்தார். அவர்களும் எச்சரிக்கையாகக் கவ னித்துக்கொண் டிருந்தார்கள். உளவு கிடைக்கவில்லை. கடைசி யில் ஓர் இருப்புக் கம்பிக் கூண்டில் பழத்தை வைத்தார்கள். பழத்தை யாராவது தொட்டால் டக்கென்று எலிப்பொறி மூடிக்கொள்வதுபோல மூடிக்கொண்டு விடும்படி கூண்டை அமைத்திருந்தார்கள்.

ஒரு நாள் கூண்டு இப்படி மூடிக் கொள்ளும் சப்தம் கேட்டது. அக் பர் வந்து பார்த்தார். கூண்டில் பீர் பலின் கை அகப்பட்டுக்கொண் டிருந்தது. "பீர்பல், உனக்குப் பழம் வேண்டுமென்ருல் நீ இவ் வளவு சிரமப்படுவானேன்?" என்று கேலியாகக் கேட்டார். "இந்தப் புதிய யந்திரம் எப்படி வேலை செய் கிறதென்று பார்த்தேன்; வேறென்றுமில்லை" என்று பதி லளித்தார் பீர்பல். இந்தச் சங்கதி மூன்ரும் மனிதருக்குத் தெரியாது. பாதுஷா சமயம் கிடைத்த போதெல்லாம், 'கூண்டில் பழம்' என்று ஜாடை சொல்லுவார். இதற் குச் சரியானபடி பதில் செய்ய வேண்டுமென்று பீர்பல் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். கடைசி யில் ஒரு வழி கண்டுபிடித்தார்.

தம் மனம் சரியாக இல்லையென் றும், ஒரு முறை தீர்த்த யாத்திரை போய்விட்டு வரவேண்டுமென்றும் அவர் அக்பரிடம் அநுமதி கேட் டார். அக்பர், "ஆஹா, அப்படியே செய்" என்று சொல்லி அதற்குத் தேவையான பணத்தையும் கொடுத் துப் பீர்பலை அனுப்பிவிட்டார்.

பீர்பல் போனபின்பு, அக் பருக்குத் தனிமை பிடிக்கவில்லை. வேட்டைக்காவது போய்வரலா மென்று ஏற்பாடு செய்தார். வேட்டை கொஞ்சநேரம் நடந்த பின்பு அவர் களைத்துவிட்டார். பரி வாரங்கள் பின்னே தங்கிவிட்டன. ஒரு துளித் தண்ணீர்கூட எங்கும் கிடைக்கவில்லை. சிறிது தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அக்பர் அங்கே போய், "தாகமாயிருக்கிறது. குடிதண்ணீர் வேண்டும்" என்று கேட்டார்.

காப்பிரைட்: ஆனந்தவாணி (தெலுங்கு: 11-4-'48), 12, தம்புசெட்டி தெரு, சென்னை.

உள்ளேயிருந்து விகார உருவ முள்ள ஒரு பிசாசு வெளிப்பட்டுப் பாதுஷாவின்மேலே விழ வந்தது. பாதுஷா பயந்துபோய், "காப்பாற்று! காப்பாற்று!" என்று வேண்டினர்.

"சரி, காப்பாற்றுகிறேன். என் பாதரட்சையைச் சிறிது பார்த்துக்கொள்" என்றது சைத்தான். வேறு வழியில்லாததால் அப்படியே செய்தார் பாதுஷா.

சில நாட்களுக்கெல்லாம் யாத்திரை முடிந்து பீர்பல் வந்துவிட்டார். பீர்பல் அக்பரைப் போய்ப் பார்த்தார். அக்பர் வழக்கம்போல் "கூண்டில் பழம்" என்று சொல்லிக்கொண்டே க்ஷேமம் விசாரித்தார். உடனே "காட்டில் பாதரட்சை" என்ற சொல்லம்பை வீசினர் பீர்பல். அந்த வாக்கியம் அக்பரின் இருதயத்தில் ஊடுருவிச் சென்றது. ஆனல், பிசாசுப் பீதி போய்விட்டது. அன்று முதல் அக்பர் "கூண்டில் பழம்" என்ற கேலியை அடியோடு விட்டுவிட்டார்.

* * *

ஒரு நாள் அக்பரும் பீர்பலும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே மாம்பழம் தின்றுகொண் டிருந்தார்கள். பாதுஷா தாம் தின்ற ஒவ்வொரு பழக் கொட்டையையும் பீர்பலைக் கிண்டல் செய்யும் உத்தேசத்துடன் அவர் பக்கமாகத் தள்ளினர். பழம் தின்றாகிவிட்டது.

அக்பர் கண்களில் குறும்பு தவழப் பீர்பலை நோக்கி, "பீர்பல், நீ பலே பேர்வழி. எத்தனை பழங்களைத் தின்றுவிட்டாய்!" என்று பரிகசித்தார்.

பீர்பல் கொஞ்சங்கூடத் தயங்காமல், "ஆமாம், பாதுஷா! நான் பழங்களை நிறையத் தின்றது உண்மைதான். ஆனல், நான் கொட்டைகளையாவது மிச்சம் வைத்தேன். தாங்கள் கொட்டைகளைக்கூட விடாமல் தின்றுவிட்டீர்களே!" என்றார்.

* * *

ஒரு நாள் அக்பர் அத்தர் புட்டியை எடுத்து அத்தரில் சில துளிகளைத் தம் கைக்குட்டையில் தெளித்துக்கொண்டார். அப்போது தவறிப்போய் ஒரு சொட்டு அத்தர் நிலத்தில் விழுந்துவிட்டது. அக்பர் அதை விரலால் ஒத்தித் தம் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டார்.

தம் செய்கையை யாராவது பார்த்திருப்பார்களோ என்ற பயம் அக்பருக்கு உண்டாகிவிட்டது. அதனுல் தம் உதார குணத்தை வெளிப்படுத்த எண்ணி, மறுநாள் ஒரு வண்டி நிறைய அத்தர்ப் புட்டிகளையும் பன்னீர்ப் புட்டிகளையும் வைத்து ஊரில் உள்ள பெரிய மனிதர்களுக்கெல்லாம் இனமாகக் கொடுக்கச் செய்தார்.

ஏராளமான பணத்தைச் செலவழித்து இந்தக் காரியத்தைச் செய்தபோதிலும், பாதுஷாவின் மனம் வேதனைப்பட்டுக்கொண்டு தான் இருந்தது. பொறுக்கமுடியாமல் தனி அறைக்குப் பீர்பலை அழைத்துத் தம் உதாரகுணத்தைப் பற்றி உலகம் என்ன சொல்லுகிறது என்று பரபரப்புடன் விசாரித்தார். "என்ன இருந்தாலும், பிரபுவே, ஒரு துளியில் போனது வண்டி கொடுத்தாலும் வருமா?" என்று தடுமாருமல் நிதானமாகப் பதில் சொன்னர் பீர்பல்.

உடம்பிலே சிக்கல் சேர்ந்தால், வியாதியின் பெயரைத் தேடுவார்கள் பல வைத்தியர்கள். ஆனால், ஹோமியோபதி வைத்தியர்கள் செய்வதோ—

சிக்கலுக்கு வைத்தியம்

டாக்டர் சுந்தர ராவ்

சத்தியத்தைக் கடைப்பிடிப்பதையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர்கள் அமரர். அவர்களே உலகுக்கு வழி காண்பிப்பார்கள். தங்கள் வாழ்க்கையில் குறுக்கிடும் இடர்களை எதிர்க்கும் சக்தியும் அவர்களிடத்தில் இருக்கும். கண்ணை மூடிக்கொண்டு சம்பிரதாயங்களை அநுசரிப்பதால் பெரிய அனர்த்தங்கள் விளைந்திருக்கின்றன. வைத்தியத் தொழிலின் குருட்டுப் பழக்கங்களை டாக்டர் ஹனிமன் என்பவர் எதிர்த்து நின்று, ஹோமியோபதி முறையைக் கண்டுபிடித்தார். அதற்காகப் பல கஷ்டங்களை அநுபவித்தார். ஆனால், சத்தியம், கடமை இவற்றின்முன், அஞ்ஞானம், சுயநலம் இவை எம்மாத்திரம்?

டாக்டர் ஹனிமனின் பிற்கால வாழ்க்கையில், பெரிய பெரிய பிரபுக்கள் எல்லோரும் அவரிடம் சிகிச்சை பெற்றார்கள். ஏராளமான ஐசுவரியம் உண்டானதால் வாழ்க்கை சௌகரியமாய் அமைந்தது. அந்தக் காலத்தில் ஒரு நாள், அவர் மனைவி அவரிடம் இவ்வாறு சொன்னாள்: "ஜனங்களுடைய வியாதியை நீக்க உங்களைப்போல் யாரும் முயலவில்லை. உங்கள் கடைசிக் காலத்தில் நீங்கள் இம்சைப்படாமல் இருக்கும்படி கடவுள் அருள் செய்ய வேண்டும்."

அதற்கு டாக்டர் ஹனிமன் சொன்ன பதில் இதுதான்: "ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தோன்றியமட்டில், தன் சக்திக்குத் தகுந்தபடி உழைக்கிறான். கடவுள் எனக்கு அறிவைக் கொடுத்துப் பெரிய உபகாரம் செய்திருக்கிறார். நான் கடவுளுக்கென்று என்ன செய்திருக்கிறேன்? அவருக்கு நன்றி செலுத்துவதே என் கடமை!"

ஹோமியோபதி முறையின் மூலம் மிகக் குறைந்த செலவில் அரும்பெரும் காரியங்களை நாம் சாதித்துவிடலாம். நம் ஜனங்களுக்கும் தேசத்துக்கும் எத்தனையோ சேவை செய்யலாம். ஹோமியோபதி முறை வெறும் உடம்பைப் பற்றிய நோய்களை மட்டும் போக்குவதாக எண்ணவேண்டாம். மனத்தைப்பற்றிய வியாதிகளையுங்கூட அது குணப்படுத்திவிடுகிறது. என்னுடைய சொந்த அநுபவங்கள் சிலவற்றை இங்கே எழுதுகிறேன்.

ஒரு பையனுக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். அவன் நல்ல சூடிகையானவன். அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தான். பெற்றோருக்கு அவன் ஒரே ஆண் பிள்ளை. தகப்பனுருக்கு மாதம் இருநூற்றைம்பது அல்லது முந்நூறு ரூபாய் வருமானம். தாய்

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: 30-5-'48), பெங்களூர்.

தந்தையர் கௌரவமானவர். ஒழுங்கான குடும்பம். பையனோ, வீட்டுக்கு வந்தவர்களுடைய ஜேபியிலிருந்த வஸ்துக்களைத் திருட ஆரம்பித்தான். வேறு யார் வீட்டுக்காவது இவன் போனாலும் இதே வேலை செய்வான். ஒரு முறை பையன் என் டிஸ்பென்ஸரிக்கு வந்திருந்தான். என் ஜேபியிலிருந்தே ஐந்து ரூபாயை எடுத்துவிட்டான்! ரூபாய் போனதற்கு நான் வருந்தவில்லை. பையனுடைய தாய் எப்படி வருந்துவாள் என்று என் மனம் எண்ணமிட்டது. அந்த அம்மாள் இந்தப் பிள்ளையின் துர்க்குணத்தைப் பற்றி எத்தனையோ முறை என்னிடம் சொல்லி அழுதாள்.

இதன்பின் அந்தப் பையனுடைய நடவடிக்கைகளை நான் கவனித்து வந்தேன். அவனுடைய மனோவியாதியின் சின்னங்களுக்குத் தகுந்த ஹோமியோபதி மருந்துகளை அவனுக்குக் கொடுத்தேன். ஒன்றிரண்டு மாதங்களில் அவனுடைய நடத்தை மாறியதைக் கண்டேன். சென்ற இரண்டு வருஷங்களாக அவன்மேல் எத்தகைய புகாரும் வரவில்லை. முதல் வருஷம் அவன் பரீட்சையில் தேறவில்லை. பின்னால் தேறிவிட்டான்; சரியாக நடந்துகொண்டான். இந்தப் பையனை ஒரு மாதத்துக்கு முன்பு பார்த்தேன். வேடிக்கையாக, "இப்போது டைம் டேபிளில் இல்லாத வேலைகளைச் செய்கிறாயா?" என்று கேட்டேன். அவன், "இல்லை, ஸார். இப்போது அப்படியெல்லாம் செய்ய எனக்கு மனம் வருவதில்லை" என்றான். சிறு குழந்தைகளுடைய மனோவியாதிகளை ஹோமியோபதி முறையால் குணப்படுத்திவிடலாம். திருடச் சொல்லும் இந்த மாதிரி மனோ வியாதிக்கு 'க்லெப்டொமேனியா' என்று பெயர்.

இன்னொருத்தி நான்கு வயதுப் பெண்குழந்தை. அவளுக்கு அடிக்கடி இருமலும் இழுப்பும் வந்துவிடும். அவை போதாததற்குத் திடீர்திடீரென்று அசாத்தியக் கோபமும் வந்துவிடும். தன் அம்மாவின் தலையில் படாரென்று சண்ட கண்ட வஸ்துவால் மோதுவாள். மருந்து புகட்ட முடியாமல் வாயை இறுக மூடிக்கொள்ளுவாள். இடுக்கி போன்ற ஆயுதத்தால் பல்லை நெம்பிக்கொண்டுதான் அவளுக்கு மருந்து புகட்டவேண்டும். அவள் கீழே விழுந்துபுரண்டு தலையைத் தரையில் முட்டிக்கொள்ளுவாள். குழந்தைக்குத் தொண்டையின் உள்ளே ஒரு கட்டி புறப்பட்டிருந்ததுதான் இதற்கெல்லாம் காரணம். 'டோஸ் டியூபர்க்யூலினம்' என்னும் மருந்தால் வியாதி குணப்பட்டது. ஆபரேஷன் இல்லாமலே டான்ஸில்ஸ் போய்விட்டது. அந்தக் குழந்தைக்கு இப்போது கோபதாபமே இல்லை.

எந்த வியாதியும் உடம்பில் பரவும் முன்பே மனத்தில் பரவுகிறது. உடலைப்பற்றிய வியாதிக்கு மருந்து கொடுக்கும்போது மனநிலையைப் பரிசோதித்துத்தான் ஹோமியோபதி மருந்தைக் கொடுக்க வேண்டும். ஆகவே, ஹோமியோபதி வைத்தியர்கள், நோயாளிகளுடைய இயற்கை, கோபதாபம், விருப்பு வெறுப்பு எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வந்தபின்பே மருந்தை நிர்ணயிக்கிறார்கள். இம்மாதிரி வைத்தியம் செய்வதே ஒரு கலை.

ஆரோக்கிய நிலையில் இருக்கும் மனிதன் தெளிவாக யோசனை செய்வான். ஆனால், உடம்பின் ஆரோக்கியம் மட்டும் ஆரோக்கியமாகாது.

அங்கே சோம்பேறிக்கு இடமில்லை. பெண்களெல்லாரும் சுதந்தரமாக வாழ்கிறார்கள். சிவனுக்குக் குடுமி உண்டு. விநோதமான இந்தப் பாலித் தீவு—

பணத்தை அறியாத நாடு

ரகுவீர்

பாலி என்பது ஜாவாவுக்கு அருகில் கிழக்கே உள்ள சிறு தீவு. இது விசித்திரமான நாடு. இங்கே யாருக்கும் அவசர வேலை இல்லை. எங்கும் அமைதிதான். பணம் என்ற பேச்சு இல்லாமலே ஜனங்கள் ஆனந்தமாக வாழ்கிறார்கள். இங்கே வெகு சுலபமாக வீடு கிடைக்கிறது. வயிறார உண்ணக் கனிகள் கிடைக்கின்றன. எளிய வாழ்வுக்கு வேண்டியவை அனைத்தும் கிடைக்கின்றன.

லட்சக்கணக்கான மக்கள் இந்தத் தீவின் கிழக்குப் பாதியிலே வசிக்கிறார்கள். மற்றொரு பாதி உள்ளே புகமுடியாதபடி காடும் மலையுமாக இருக்கிறது. இன்னமும் அங்கே புலிகள் ஏராளமாக இருக்கின்றன.

இந்தத் தீவிலே எல்லாச் சாதியாரும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். எவனும் மற்றவனைத் தாழ்ந்தவனாக எண்ணுவதில்லை. பாலி மக்கள் ஸம்ஸ்கிருத பாஷையை மறந்துவிட்டபோதிலும் அந்த எழுத்திலேதான் எழுதுகிறார்கள். சுலோகங்களையும் மந்திரங்களையும் உருப் போடுகிறார்கள். இன்றும் அவர்கள் யஜுர்வேதம் முதலிய நூல்களைப் படித்து வருகிறார்கள்.

பாலித்தீவு பெண்களின் நாடு; ஏனென்றால் ஜனத்தொகையிலே நூற்றுக்கு எழுபது பேர் பெண்கள். வேசிகள் தங்கள் மார்பை மூடிக் கொள்கிறார்கள். மற்றப் பெண்களுடைய பருத்த தோள்களிலும் மார்பிலும் சூரியவெளிச்சம் தாராளமாக விழுகிறது. அவர்கள் காடுகளிலும் கிராமாந்தரங்களிலும் திரிகிறார்கள்; சிவப்புச் சேலை கட்டுகிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மத்திய இந்தியாவிலும் இந்தப் பழக்கம் இருந்தது. விருந்துகளில் அவர்கள் வாழையிலையில் சோறும் கறிகாயும் பரிமாறுவார்கள். ஆண்கள் தலையில் பூச் செருகிக்கொள்வார்கள்.

பாலிப் பெண்ணின் முதல் கடமை தன் கணவனுக்கு ஒரு புதல்வனைப் பெற்று அளிப்பதுதான். ஊர் முழுவதையும் அழைத்துக் கர்ப்பாதானத்தைச் சடங்காகக் கொண்டாடுவார்கள்.

பாலி மக்களுக்குள்ளே கட்டுப்பாடு அதிகம். சம்பாப் பயிர் முற்றியதும் அக்கம்பக்கத்தவர்கள் யாவரும் வந்து அறுவடைக்கு உதவி செய்வார்கள். இங்கே பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் இல்லை; பிச்சைக்காரனே கிடையாது.

காப்பிரைட்: நவயுக் (ஹிந்தி: 16-5-'48), டில்லி.

ஏதாவது ஒரு காரணத்தினால் ஒருவன் தன் நிலத்தை உழுது பயிரிடாவிட்டால், அயல்வீட்டார் அவன் நிலத்தைப் பயிரிட்டுக் கொடுப்பார்கள். அடுத்த வருஷமும் அவன் வேலை செய்யாமற்போனால் அவனுடைய நிலத்தை அவர்கள் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்வார்கள்.

அவர்கள் அன்றாடம் குளிக்கிறார்கள். ஸ்நானம் செய்வதென்றால் அவர்களுக்கு வெகு குதூகலம். கிராமந்தோறும் அதற்குத் தேவையான குளங்கள் இருக்கின்றன.

பாலி மக்கள் தண்ணீர் குடிக்கும் பாத்திரம் வேடிக்கையாக இருக்கிறது. கோயில்களிலும் கடைகளிலும் வைத்திருக்கும் இந்தப் பாத்திரம் பறவையினுடைய முகம் போல இருக்கிறது. எச்சில் படாமலே தண்ணீர் குடிக்கும்படி இது அமைந்திருக்கிறது.

அவர்களுடைய நாடகங்களிலே அர்ஜுனனும் பீமனும் முக்கியமானவர்கள். அர்ஜுனன் இலங்கை ராணியைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறான். வானர ராஜன் அவளை மீட்பதற்கு வருகிறான்.

இந்த நாட்டிலே அமெரிக்க நாடகங்களைப் பரப்பிப் பணம் சம்பாதிக்கவேண்டுமென்று ஓர் ஆர்மீனியனுக்கு ஆசை உண்டாயிற்று. அவன் அதற்கு ஏற்பாடு செய்தான். முதல் நாள் இரவு கொட்டகையிலே எள் விழ இடமில்லாதபடி ஜனங்கள் குழுமினார்கள். அன்று, 'நம்முடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! அமெரிக்க நாடகங்களுக்கு இனிமேல் இங்கே நல்ல வரும்படிதான்! ஜமாய்த்துவிடலாம்' என்று ஆர்மீனியன் தனக்குள்ளே எண்ணி மகிழ்ந்துகொண்டான். பாலி ஜனங்கள் உல்லாசத்தைப் போலவே உழைப்பையும் விரும்புகிறவர்கள். ஒரு தடவை அவர்கள் வந்துபோனதோடு சரி; பிறகு வேறு நாடகம் போட்டபோது கொட்டகை முழுவதும் காலியாகக் கிடந்தது. எவ்வளவோ ஆசை காட்டியும் பிரசாரம் செய்துங்கூட அவர்கள் அயல் நாட்டு நாடகங்களைப் பார்க்க மறுத்துவிட்டார்கள்.

செத்த பிறகு தங்களுடைய ஆத்மா இந்திரலோகத்துக்குப் போவதாகப் பாலி ஜனங்கள் நம்புகிறார்கள். செத்தவர்களுக்கு மிகவும் தடபுடலாகத் தகன ஸம்ஸ்காரம் நடக்கிறது.

இந்தத் தீவின் கிழக்குக் கரையில் சிம்மராஜம் என்பது ராஜதானி. இங்கே வருணன் கோயிலொன்று இருக்கிறது. நமது நாட்டிலே இதைப்பற்றி யாருக்கும் தெரியாது. சிம்மராஜத்துக்கு அருகிலே இந்தத் தீவுக்குள்ளேயே பிரம்மாண்டமான அழகிய கோயில் இருக்கிறது. இதுதான் தேவிஸ்ரீயின் கோயில். இந்தக் கோயிலுக்குள்ளே திரிமூர்த்திகளின் விக்கிரகங்கள் இருக்கின்றன. ஏழுதலை நாகமும் இருக்கிறது. ஸ்நானத்துக்காக ஒரு பொய்கை இருக்கிறது; அதற்குத் தேஜகுலம் என்று பெயர். உற்சவங்களின்போது விக்கிரகங்களுக்கு வெள்ளைத் துணியால் அலங்காரம் செய்து, ஒரு தட்டிலே நைவேத்தியமும் தாம்பூலமும் எதிரே வைத்திருப்பார்கள்.

தாமிரத் தகடுகளில் எழுதிய சமய நூல்கள் எல்லாக் கோயில்களிலும் காணப்படுகின்றன. கோயில்களில் 5, 7, 9, 11 அல்லது 13 அடுக்குகள் கொண்ட நீண்ட

கோபுரம் இருக்கும். இந்த அடுக்கு களை அவர்கள் ஸம்ஸ்கிருதத்திலே 'மேரு' என்கிருர்கள்.

பாலித் தீவிலே நிறநிறமான மலர்களும் விதவிதமான பறவை களும் இருக்கின்றன. அழகிய ஏரி கள் இருக்கின்றன. ஒவ்வோர் ஏரி யின் கரையிலும் கோயில் உண்டு. இந்த நாட்டில் எரிமலைகளும் இருக்கின்றன. கௌசாம்பி என்ற நகரம் இங்கே இருக்கிறது; பௌத்த காலத்துப் பாரத நாட்டை இது ஞாபகப்படுத்து கிறது. கிருதகோஷம் என்ற கோயிலில் நரகதண்டனைக் காட்சி களைச் சித்திரித்திருக்கிருர்கள், குடுமியுள்ள சிவமூர்த்திகள் சில கோயில்களில் இருக்கின்றன. இந்த நாட்டிலே கருடனும் முதலை யும் சிங்கமும் கலைக்கு முக்கிய அடையாளங்கள்.

பாலித் தீவு அற்புதமான நாடு.

படிப்பின் மதிப்பு

அமெரிக்காவைச் சேர்ந்த தெற்குக் கலிபோர்னியாவில் ஒரு வைத்தியக் கல்லூரியில் மாணவர்களுடைய படிப்பு முடிந்தது. பட்டமளிப்புக் கூட்டம் நடந்தது.

அவர்களுக்குப் பாடம் போதித்த புரொபஸர் அப்போது சொன்னர்: "உங்கள் படிப்பு முடிந்துவிட்டது. எனக்குத் தெரிந்த புஸ்தகங்களையெல்லாம் உங்களுக்கு நான் சொல்லிக் கொடுத்துவிட்டேன். இன்னும் ஒரு விஷயம் இப்போது உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அது இதுதான்: நான் சொல்லிக் கொடுத்த அத்தனை விஷயத்திலும் பாதி பிழை. ஆனல் அது எந்தப் பாதி என்றுதான் எனக்குத் தெரியவில்லை" என்ருர்.

ஆகவே, உங்களுடைய சொந்த அநுபவத்தில் நேரும் சிக்கல்களை, நீங்களே கவனித்துப் பாருங்கள். அவற்றுக்கு ஏற்ற பரிகாரம் எது என்பதை நீங்களே பரீட்சித்துத் தேர்ந்து கொள்ளுங்கள். இதைத்தான் அந்த டாக்டர் சொன்னர். நிர்வாக சாமர்த்தியமும் இதுவே.

—பால் கார்னெட் (மாடர்ன் இண்டஸ்டிரி)

யாரைப் புகல் அடைவது?

புரோகித முறை எந்த உருவத்தில் இருப்பதையும் புத்தர் வெறுத்தார். அவர் நிர்வாணமடையச் சிறிது காலத்துக்குமுன், அவருக்குப் பின்பு பௌத்த சங்கத் தலைமைப் பீடத்துக்கு யாரை யாவது குறிப்பிடும்படி அவரைச் சிஷ்யர்கள் கேட்டார்கள். அவர் மறுத்துவிட்டார், "உங்களுக்கு நீங்களே வழிகாட்டி களாக இருங்கள்; உங்களுக்கு நீங்களே புகலாக இருங்கள். பிறர் எவரையும் வழிகாட்டிகளாக அடையாதீர்கள; புகலா கவும் கொள்ளாதீர்கள" என்ருர்.

—டாக்டர் எம். ஹபீல் (ஓரியெண்ட்)



காந்தி

●ஒரு வாலிப நண்பர்: காந்தியின் உள்ளத்தில் இளம் பிராயத்திலேயே இடம் பெற்றவர்களில் நாராயண ஹேமசந்திரர் முதன்மையானவர். அவர்கள் இருவரும் லண்டனில் ஒன்றாக வாழ்ந்து வந்தவர்கள். நாராயண ஹேமசந்திரரின் விசித்திரமான நடையுடை பாவனைகளையும் கவர்ச்சியற்ற தோற்றத்தையும் கண்டு மகாத்மாவுக்குச் சிரிப்பு வரும். தெருவிலே போகும்போது பையன்கள் நாராயணரின் எளிய உடையைக் கண்டு பரிகாசம் செய்வார்கள். லண்டனில் அவர்கள் வசித்துவந்த வீட்டின் சொந்தக்காரி அவரைப் 'பைத்தியம்' என்று சொல்லிவந்தாள். யார் என்ன சொல்லியும் அவருடைய எளிமை மாறவில்லை. காந்தி அவரோடு பழகப் பழக அவருடைய குணங்கள் நன்றாகத் தெரிந்தன. இருவரும் ஒன்றாகவே சாப்பிடுவார்கள். மணிக்கணக்காகப் பேசுவார்கள். 'மனிதனுடைய பெருமை வெளி ஆடம்பரத்திலே இல்லை; உள்ளத் தூய்மையும் பரந்த மனப்பான்மையுமே மனிதனின் பெருமைக்கு அளவுகோல்' என்பதை அவரிடமிருந்து மகாத்மா அறிந்துகொண்டார்.

—லக்ஷ்மணபிரஸாத் (மாதுரி)

●வேதம் என்பது என்ன?: தேங்கிக் கிடப்பதை வெறுப்பது ஹிந்து மதம். ஞானம் எல்லையற்றது; சத்திய அநுஷ்டானமும் அப்படிப்பட்டதுதான். புதிய அநுபவங்களால் புதிய கடமைகளை நாம் கற்கிறோம். ஆனால், சத்தியம் ஒன்றே. சத்தியத்தைப் பரிபூர்ணமாய் உணர்ந்தவர் யார்? வேதங்கள் உண்மையைச் சொல்லுகின்றன. ஆனால், அவை அனந்தமாயிருக்கின்றன. அவற்றைப் பூர்ணமாய் உணர்ந்தவர்தாம் யார்? இன்று வேதங்களாக இருப்பவை, உண்மை வேதத்தின் கோடியில் ஓர் அம்சங்கூட இல்லை. ஞானபரிபூர்ணமே உண்மை வேதம். உள்ள சில நூல்களையேனும் பூர்ணமாய் உணர்ந்தவர் யார்? இந்தச் சிக்கல்களுக்குள் புகுந்து தவிக்காமல் ஒரே ஒரு தத்துவத்தை மட்டும் நாம் கற்கவேண்டுமென்று நம் ரிஷிகள் நமக்குப் போதித்திருக்கிறார்கள். 'பிண்டத்தைப் போலவே அண்டமும்' என்பதுதான் அந்தத் தத்துவம். அண்டத்தை ஆராய்ச்சி செய்ய முடியாது. ஆனால் யாரும் தன்னை ஆராய்ந்துகொள்ள முடியும். ஆத்மாவை உணர்ந்தால், அண்டத்தை உணர்ந்துகொள்வாய். ஆனால் ஆத்ம ஞானம் பெற ஓயாத

வாழ்வும் வாக்கும்

நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

தூய முயற்சி செய்ய வேண்டும்; யம நியமங்களை அநுஷ்டிக்க வேண்டும்.

— காந்தி (யங் இந்தியா).

● திருடரைப் பிடித்தார்: சாபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்தில் யாரும் சொத்து வைத்துக்கொள்ளக் கூடாது. இப்படியிருந்தும், கஸ்தூர்பா காந்தி தமது பேரக் குழந்தை ஒன்றிடம் கொண்ட பாசத்தினால், அதற்கு ஏதோ நகை செய்துபோட ரகஸ்யமாகக் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தார். அந்தப் பணம் ஒரு நாள் திருட்டுப் போய் விட்டது. மிகுந்த தியக்கத்துக்குப் பின் இதைக் காந்திஜியிடம் தெரிவித்தார்கள். "நான் திருடனைக் கண்டுபிடித்துவிடுகிறேன்" என்று தட்சணமே பதில் சொன்னார் காந்திஜி. அடுத்த நாள் காலையில் ஆசிரமவாசிகளெல்லாம் கூடியிருந்தார்கள். திருட்டைப் பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகக் காந்திஜி குறிப்பிட்டார். பிறகு, "திருடியவள் இதோ இருக்கிறாள்" என்று சொல்லி, கஸ்தூர்பாவைப் பிடித்து முன்னே தள்ளினார். எல்லாரும் திடுக்கிட்டுப் போனார்கள். காந்திஜி தமது கருத்தை இவ்வாறு விளக்கினார்: "ஒவ்வொருவரும் தம்முடைய மிகக் குறைந்த தேவைகளுக்குமேல் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படிச் சேர்த்து வைத்துக் கொள்கிறவர் திருடரே!"

—(ஓரியெண்ட்)

● அவர் பாராட்டிய இரண்டு நூல்கள்: கீதையும் துளசிதாசரின் ராமாயணமும் பாடுவதனால் எனக்கு உண்டாகும் அந்த ஊக்கமும் தூண்டுதலும் வேறு எதனாலும் உண்டாவதில்லை. ஹிந்து மதத்திலே நான் கண்ட ஒப்பற்ற இரண்டு நூல்கள் இவைதாம். துளசிதாஸரின் சிரத்தை இவ்வுலகுக்கு அப்பாற்பட்டது. ஹிந்துக்களுக்கு ராமாயணத்தைப் போன்ற ஒரு ரத்தினத்தை அளித்தது அவருடைய சிரத்தைதான். சிரத்தையும் அறிவும் வெவ்வேறு துறைகள். நிரம்ப அறிவு வாய்ந்தவர்கள் அடியோடு ஒழுக்கம் கெட்டிருப்பதையும் காண்கிறோம். ஆனால் சிரத்தை இருக்குமிடத்திலே ஒழுக்கமின்மை தலைகாட்ட முடியாது. மனிதன் இந்தச் சிரத்தையை எப்படிப் பெறுவது? இதற்குப் பதில் கீதையில் இருக்கிறது; துளசிராமாயணத்தில் இருக்கிறது.

—காந்தி (நவஜீவன்)

உப்புக் கரித்தாலும், அதன் கதை மிகவும் ரச மானது; அதன் மதிப்பு மிகவும் உயர்வானது.

உப்பு - உயிரின் அமுதம்

உப்பு! இது ஒரு சிறியவார்த்தை தான். ஆனால், இந்த உப்பின் காரணமாக எவ்வளவோ தேசங்க ளுக்கிடையில் போர் மூண்டிருக் கிறது. ஏன், நம் நாட்டையே எடுத் துக்கொள்ளுங்கள்; மகாத்மா காந்தி யின் சத்தியாக்கிரகம் ஓர் உப்புப் போராகத்தானே நடந்தது? அது இந்திய சரித்திரத்திலேயே பிரசித்தி பெற்றுவிட்ட உப்புப்போர்; இந்திய சுதந்தரத்துக்கு அஸ்திவாரம் கோலிய போர். இந்த உப்பைப் பற் றிய ரஸமான பல வரலாறுகளைப் பிரான்ஸிஸ் ஸெயிண்ட் ஜான் என்பவர் 'க்ராஸ்' என்ற டப்ளின் நகரப் பத்திரிகையின் ஒரு கட்டுரை யில் கூறியிருக்கிறார்.

பெர்சியாவில் ஒரு திருடன் இருந் தான். அவன், ஓர் இளவரசனின் அரண்மனைக்குள் கொள்ளையடிக்கப் புகுந்தான். அங்கே ஒரு பெரிய உப் புக்கட்டி தடுக்கி விழுந்தான். தடுக்கி யது என்ன என்று யோசிக்கத் தொடங்கிய அவன், தன்னை அறி யாமலே கையை நக்கிப் பார்த்தான். உப்பின் ருசியைத் தன் ஆயுளி லேயே முதல் தடவையாக அன்று தான் அவன் தெரிந்துகொண்டான். மற்றப் பொருள்களை எல்லாம் லட் சியம் செய்யாமல், அந்த உப்புக் கட்டியை மட்டும் அவன் தூக்கிக் கொண்டு போய்விட்டான்! எதிர் பாராத சிறந்த கொள்ளை கிடைத் ததே என்று வெகு சந்தோஷப்பட் டான்.

பைபிள் காலத்தில் உப்புக்கு இருந்த மதிப்பே அலாதி. பெரிய பெரிய ஒப்பந்தங்களெல்லாம் உப்புச் சாட்சியாகவே நடக்குமாம். 'உப்புச் சாட்சியாகச் செய்த ஒப்பந்தம்' என்ற பதத்தொடர் பைபிளில் காணப்படுகிறது. நம் நாட்டிலும் உப்பும் வெற்றிலையும் சாட்சியாகச் சத்தியம் செய்யும் வழக்கம் இன் றைக்கும் இருக்கிறது.

உப்பு ஜல ஊற்று ஒரு நாட்டில் இருந்துவிட்டால், அந்த நாட்டு மக் கள் தங்களை அதிருஷ்டமுள்ள மக்கள் என்று அந்தக் காலத்தில் நினைத்தார்களாம். சோறிட்டவர் என்பதற்குப் பதிலாக 'உப்பிட்டவர்' என்று சொல்வது நம் நாட்டில் இன்றும் வழங்கிவருகிறது. ஆங்கி லத்தில் 'ரொட்டியும் உப்பும்' என்ற தொடர் வெகு காலமாக வழங்கி வருகிறது.

பழம் பெரும் வியாபாரப் பாதை கள் ஏற்பட்டதற்கெல்லாம் உப்பு வியாபாரம் ஒரு முக்கியமான கார ணம். இதாலியில் ஏற்பட்ட 'உப்புப் பாதை' என்பது உப்பு வியாபாரத் துக்காகவே தோன்றிய ஒரு பழைய பாதை. ஓஸ் டியா உப்பளங்களில் உற்பத்தி யான உப்பு இந்தப் பாதையின் வழி யாகத்தான் சேபைன் தேசத்துக்கு வந்தது. லிபியா நாட்டுப் பாலை வனத்தில் உள்ள பல பசும்புல்வெளி களில் உப்பளங்கள் இருந்தன. இந்த

உப்பளங்களை எல்லாம் ஒட்டகப் பாதைகள் இணைத்தன. இந்தப் பாதைகளும் 'உப்புப்பாதை'களே. ரோமர்களுக்குச் சொந்தமான பல்மைரா என்ற ஊர் 'டாட்மூர் உப்பு' என்ற உப்புக்குப் பிரசித்தி பெற்றது. அந்த உப்பு வியாபாரம் ஸிரியா நாட்டின் துறைமுகங்களுக்கும் பெர்சியன் வளைகுடாவுக்கும் இடையே பிரமாதமாக நடந்தது. பல்மைரா என்ற ஊர் அடியோடு மறைந்து வெகு காலம் ஆனபின்பும், அந்த 'டாட்மூர் உப்பி'ன் புகழ் மங்காமல் இருந்துவந்தது.

உப்புக்கு வெகு காலமாகவே பொருளாதாரப் பெருமை இருந்து வருகிறது. உப்பு வரி போட்டு எவ்வளவோ நாடுகள் நிறையப் பணம் சம்பாதித்தன. உதாரணமாக இந்தியாவையும் சீனாவையும் சொல்லலாம். சீனர்கள் ஒரு முறை ஐரோப்பாவிலிருந்து நிறையக் கடன் வாங்கவேண்டியிருந்தது. சீனாவின் உப்பு வரியையே அடகு வைத்து அவர்கள் இந்தக் கடனை வாங்கினார்கள்!

கடல் உப்பு, பாறை உப்பு என்று உப்பு இரண்டு வகைப்படும். பாறை உப்பும் ஒரு காலத்தில் கடலாக இருந்த இடத்தில் உறைந்த உப்புத்தான் என்று நிச்சயமாகத் தெரிய வருகிறது. எனவே இரண்டுவகை உப்பும் பார்க்கப் போனால் ஒன்றே தான்.

கடல் ஏன் உப்பாக இருக்கிறது? இந்த விஷயம் இன்னும் விளங்காத ஒரு ரகசியமாகவே இருக்கிறது. சாதாரணமாகக் கடல்நீரில் 1000-க்கு 34-பங்கு உப்பு இருக்கிறது. பால்டிக் கடலின் சில பகுதிகளில் உப்பே இல்லை. பூமத்திய ரேகைக்கு அருகே உள்ள கடல்களில் 1000-க்கு 35½-பங்கு உப்பாக இருக்கிறது.

சில விஞ்ஞானிகள் ஆரம்பம் முதலே கடலில் உப்பு இருந்தது என்கிறார்கள். வேறு சில விஞ்ஞானிகள் கடலில் விழும் ஆறுகள் உப்பைக் கொண்டுபோய்க் கடலில் கொட்டியவண்ணம் இருக்கின்றன என்கிறார்கள். இப்படி ஆறுகளால் கடல் உப்பு அதிகரித்துக் கொண்டே வந்தால், கடைசியில் கடலில் மனிதர் நீந்த முடியாத நிலையே வந்துவிடும். சாக்கடலில் இது நேர்ந்துவிட்டது. இந்தக் கடலில் ஒருவர் மல்லாந்து படுத்துக் கொண்டு புஸ்தகம் படிக்கலாம்; மிதப்பதற்காக ஒரு முயற்சியும் செய்யவேண்டாம்.

ஒரு கன மைல் கடல்நீரில் 11 கோடியே 70 லட்சம் டன் உப்பு இருக்கிறதாம். உலகெங்கும் உள்ள கடலின் மொத்தப் பரப்பு 30 கோடி கன மைல். கடலில் மொத்தம் எவ்வளவு கோடி டன் உப்பு இருக்கிறது என்று பெருக்கிப் பாருங்கள்! உலகம் முழுவதற்கும் ஒரு வருஷத்துக்கு வேண்டிய உப்பு 40 லட்சம் டன்களே! கடலில் உள்ள உப்போடு ஒப்பிட்டால் இது எவ்வளவு சிறிய அளவு! என்றாலும் உலக மக்களுக்கு உப்புப் போதவில்லை என்ற குறை சில சமயங்களில் உண்டாகிறதே, என்ன ஆச்சரியம்! சமீபத்தில்கூட இங்கிலாந்தில் உப்புப் போதவில்லை என்ற குறை உண்டாயிற்று.

ஆரோக்கியமாக இருக்க ஓரளவு உப்பு மனிதனுக்குத் தேவைதான். ஆனால், மனிதர்கள் அளவுக்கு மீறி உப்பை உபயோகிப்பதாகச் சில வைத்தியர்கள் குறை கூறுகிறார்கள். உப்பில்லாவிட்டால்

உணவு ருசிப்பதில்லையே, சப்பென்று இருக்கிறதே! அதிகமாக உப்பைத் தின்பதால் ருசியறியும் சக்தியே போய்விடுகிறது என்கிறார்கள் மற்றும் சிலர்.

கீல்வாயு போன்ற நோய்களுக்கு அதிக உப்புத்தான் காரணம் என்கிறார்கள் வேறு சிலர். ஆனால் உப்புச் சுரங்கங்களில் உழைப்பவர்களுக்குக் கீல்வாயுவோ, நரம்புக் கோளாறோ, சளியோ வருவதே இல்லையாம். உப்புக்காற்றின் மகிமை இது. சில நோயாளிகள் உப்புக்காற்று வாங்கக் கடற்கரைக்குப் போகும் சூட்சுமமும் இதுதான். பசுவின் உணவில் அதிக உப்புச் சேர்ந்தால் அதன் பாலின் தரமும் உயர்கிறது, அளவும் அதிகமாகிறது.

உப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. சில வாய் நோய்களுக்குக் கொப்புளிக்க உப்பு ஜலம்போல் வேறு மருந்தில்லை. இதைப்போல் மலிவானதும் வேறு எதுவும் இல்லை. உப்புஜலத்தில் ஸ்நானம் செய்வதும் எவ்வளவோ நோய்களைப் போக்கும்.

உணவுப் பண்டங்கள் கெடாமல் காப்பதில் உப்புக்கு இணை இல்லை. ஊறுகாய், வற்றல் முதலியவைகளில் இதன் உண்மை தெரியும். நிலத்துக்கு நல்ல எருவாகவும் உப்பு உதவுகிறது.

உப்பு அபூர்வமாகக் கிடைக்கும் நாடுகளில் அதன் மதிப்பு உயர்கிறது. அபிஸீனியா, திபேத், ஆப்பிரிகாவின் சில பகுதிகள் இங்கெல்லாம் உப்புக் கட்டிகளே பணமாக உபயோகப்படுகின்றனவாம். விஞ்ஞான ஆராய்ச்சிக்காக இந்த நாடுகளுக்குச் செல்லும் கூட்டத்தார் நிறைய உப்பைக் கொண்டுபோவார்கள். தாங்கள் போகும் இடங்களில் உள்ள மக்களிடம் உப்பைக் கொடுத்து, அவர்களிடமிருந்து உணவு முதலியவற்றை இவர்கள் பெறுகிறார்கள். நியூகினி என்ற தீவுக்குச் சென்ற சில விஞ்ஞானிகளுக்கு, ஒரு டேபிள் ஸ்பூன் உப்புக்குப் பதிலாக 20-பவுண்டு உருளைக்கிழங்கு கிடைத்ததாம். மத்திய ஆப்பிரிகாவில் இரண்டு டின் ஸ்நான உப்புக்கு ஒரு பெண் கிடைப்பாளாம். மூன்று டின் கொடுத்தால் அங்கே ஓர் அடிமையையே வாங்கிவிடலாமாம்.

உப்போடு சில மூடக் கொள்கைகளும் பின்னிக்கொண்டிருக்கின்றன. உப்பு நல்லது, ஆகையால் தித்திப்புக் கெட்டது என்று ஹிந்துக்கள் நம்புகிறார்கள். வேல்ஸ் நாட்டின் சில பகுதிகளில் இன்றும் புது வீட்டுக்கு முதலில் உப்பைத்தான் கொண்டு போவார்களாம். நம் நாட்டிலோ அதை முதலில் கொண்டு போவதில்லை. ஆனால், எல்லா மக்களிடத்தும் உப்பு விஷயமாக வழங்கும் பொதுவான ஒரு வழக்கம் மட்டில் இருக்கிறது: உப்பைச் சிந்தவும் கூடாது, ஒருவர் கையில் இன்னொருவர் கொடுக்கவும் கூடாது என்பதே அந்த வழக்கம்.

'அற்புத உலகில் ஆலிஸ்' என்ற பிரசித்த ஆங்கிலச் சிறுவர் கதைப் புத்தகத்தின் மூலப் பிரதியை அமெரிக்காவில் உள்ள டாக்டர் லூதர் இவான்ஸ் என்பவர் 1946-இல் ஓர் ஏலத்தில் 50 ஆயிரம் டாலருக்கு வாங்கினார்.

—(*விசால பாரத்*)

குருவியைப் போல் அவர் கவலையற்று வாழ்கிறார்;
ஆத்ம ஞானத்தை நாடி இந்தியாவில் திரிகிறார்.

காஷாயம் தரித்த வெள்ளைக்காரர்

ஜி. எல். நரஸிம்ம ராவ்

கழுத்தில் ஒரு ருத்திராட்ச மாலை; இடுப்பில் ஒரு காஷாய வேஷ்டி - இவ்வளவுதான் அவருடைய உடுப்பு. அவருக்கு விசாலமான கண்கள்; கூர்மையான மூக்கு; எலுமிச்சம் பழம்போல் நிறம். இந்தக் கோலத்தில் தோன்றிய ஒரு சந்நியாசி சமீப காலத்தில் பந்தர், பெஜவாடா, ராஜமகேந்திர வரம், பாபட்லா முதலிய ஊர்களில் சஞ்சரித்து, ஜனங்களை ஆச்சரிய மூற்றுத் திகைக்க வைத்தார்.

யாராவது அவருக்குப் பணம் கொடுத்தால் அவர் அதை வாங்கிக் கொண்டு அப்படியே வேறு யாருக்காவது தானம் கொடுத்துவிடுவார். இது எல்லோருக்கும் அதிசயமாகத் தோன்றியது.

"மனிதனுக்கு வேண்டியது பணம் அல்ல. அது வேறு. இந்தப் பணம் மனிதனை அதோகதிக்குக் கொண்டுபோய் விடுகிறது. பறவைகளும் மிருகங்களும் பணம் இல்லாமல் வாழும் என்றால், எனக்கு மாத்திரம் பணம் எதற்காக?" என்று அவர் சொல்லுவார். தம் வாழ்க்கையைப் பறவைகளின் வாழ்க்கைக்கு அவர் ஒப்பிட்டாலும் உண்மையில் அது போற்றத் தகுந்த முனிவர் வாழ்க்கையே யாகும்; இம்மாதிரி அடக்கமாக வாழ்க்கை நடத்தும் மகாநுபாவன், ரோஜர் ஸெமிதைஜ் என்னும் ஒரு பிரெஞ்சுக்காரர். அவர் பெஜவாடாவில் டாக்டர் 'நமச்சிவாயா' வீட்டில் ஒரு நாள் பிட்சை ஏற்றுக் கொண்டு எல்லோரையும் மகிழ்வித்தார். பிட்சை என்றால் வெறும் வாழைப்பழம் மாத்திரந்தான்!

பிரெஞ்சு நாட்டிலிருந்து அவர் ஏன் இந்தியாவுக்கு வந்தார்? இந்தக் காஷாயத்தை எதற்காக உடுத்துகிறார்? அவருடைய உத்தேசம் என்ன?

அவரை அவருடைய தேசத்தில் எல்லோரும் நாகரிகமில்லாதவர் என்று கருதினார்கள். அவர் யுத்தத்தை எதிர்த்தார்; யுத்தத்தில் பங்கு எடுத்துக்கொள்ள மறுத்தார். இந்த இரண்டு குற்றங்களுக்காகவும் அவர் சிறைவாசம் செய்ய நேர்ந்தது. அவர் மாமிச உணவை வெறுத்தார்; பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்தார்; தனுக்கு மினுக்கு ஆடம்பரங்கள் இல்லாமல் வாழ்ந்தார். இதையெல்லாம் கண்டு அவரைச் சமூகம் இகழ்ந்தது.

அநீதிக்கும் யுத்தத்துக்கும் ஹிம்சைக்கும் வழிகாட்டும் மேற்கத்திய நாகரிகத்தை அவர் முற்றும் வெறுத்தார். ஆத்மபக்திக்குத் தாயகம் என்று பெயர் பெற்ற இந்தியா கடைசியில் அவர் மனத்தை வசீகரித்தது. இந்தியா

காப்பிரைட்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு: 2-6-'48),
7, தமபு செட்டி தெரு, சென்னை.

வுக்கு வந்துவிட்டார். காந்திஜீயைச் சந்திக்க ஆவல் கொண்டார்; ஆனால் அந்தப் பாக்கியம் அவருக்குக் கிட்டவில்லை.

வரும்போது அநுமதிச் சீட்டு இல்லாமல் படாத பாடும் பட்டு அவர் சிங்களம் வரையில் வந்தார். அங்கே அதிகாரிகள் அவரைக் கப்பலை விட்டு இறக்கிவிட்டார்கள். அதன்மேல் அவர் அந்தத் தேசம் முழுவதிலும் சுற்றினார். யோக ஸ்வாமி என்னும் மகாநுபாவர் அவருடைய மனப்பக்குவத்தைக் கண்டு, அவருக்கு ஹிந்து வேதாந்தத்தைப் போதித்தார். 'காயத்திரி' மந்திரத்தையும் உபதேசித்தார். "இந்தியாவுக்குப் போய் ஆத்யாத்மிகக் கொள்கைகளில் விருப்பம் உள்ள மகான்களைத் தரிசி. உனக்கு வழி பிறக்கும்" என்று ஆசீர்வதித்துத் தூய்மைக்கும் தியாகத்துக்கும் அடையாளமான காஷாயத்தையும் கொடுத்து அனுப்பினார். அது முதல் அவர் தம் குருநாதரைத் தேடும் தூய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். கண்ணில் கண்ட நதிகளில் ஸ்நானம் செய்கிறார்; தமக்கு வேண்டிய வஸ்து எங்கே இருக்கிறதென்று காதில் பட்டாலும் அங்கே ஓடுகிறார். "பாஷை தெரியாவிட்டாலும் பாவம் பேசிவிடும்" என்கிறார். புஸ்தக ஞானம் அவருக்குப் போதாது. அவர் படிப்பதே இல்லை. அவர் ஒரு கர்மயோகி. தற்சமயம் எதையோ தேடுவதில் அவர் மும்முரமாய் ஈடுபட்டிருக்கிறார். மகாத்மா காந்தியின் முரட்டுத் துணியையும் எளிய வாழ்க்கையையும் பற்றி வெகு காலத்துக்கு முன்பே கேள்விப்பட்டுத்தான் இப்படி அவர் மாறிவிட்டார்.

மதம் மாறிய ரோஜர் ஸெமிதைஜ் 'காசிகுமார்' ஆகிவிட்டார். அவர் எப்போதும் மலர்ந்த முகத்துடனும் உற்சாகத்துடனும் சரளமாகப் பழகுகிறார். அவர் ஒரு ரிஷி. சிறு குழந்தைபோலும் இருக்கிறார். சிட்டுக்குருவிகள் விளையாடுவதைக் கண்டு ஆனந்தமடைகிறார். பிரெஞ்சு சங்கீதம் பாடி மெய்ம்மறந்துவிடுகிறார். மழை பெய்யும்போது வெட்ட வெளியில் உட்கார்ந்து நனைந்து மழைத்துளிகளோடு விளையாடி இயற்கையிலே லயித்துவிடுகிறார்.

எதைக் கொடுத்தாலும் தின்பார்; கொடுக்காவிட்டால் பச்சைத் தண்ணீர்கூடக் கேட்காதிருப்பார். அறிவாராய்ச்சியைவிட நம்பிக்கையே பெரிதென்று மதிப்பவர். "உங்களைப்பற்றிப் பத்திரிகைகளில் எழுதி எங்கள் மக்களுக்கு உங்களை அறிமுகப்படுத்துகிறோம்" என்று யாராவது அவரிடம் சொன்னால், "வேண்டவே வேண்டாம்; என்னை மாயையில் இழுத்துவிடாதீர்கள்" என்பார். இந்திய மக்களை வாயாரப் புகழ்வார்; இந்தியாவிலேயே உண்மையான சுயேச்சை இருக்கிறதென்று சொல்லுவார்.

ஸ்வாமி சிவானந்தரைத் தரிசிக்க வேண்டுமென்று அவர் இப்போது ஹ்ருஷீகேசத்துக்குப் போயிருக்கிறார். இவருக்கு இருக்கும் உத்வேகத்தைப் பார்த்தால், ஒரு நாள் இவர் பரிபூரண ஞானம் பெற்று, ஆத்மசக்தியைச் சம்பாதித்துக் கொண்டு, பாரத நாட்டின் உபதேசத்தையும் வாழ்க்கைத் தத்துவத்தையும் மேல்நாட்டாருக்குப் போதிப்பார் என்றே தோன்றுகிறது.

முகலாயர் காதல்

டாக்டர் காளிகாரஞ்ஜன்

அராபியக் காதல்: தலைநகரத்தை டில்லியிலிருந்து தேவகட்டுக்கு மாற்றினான் துக்ளக். அதனால் அவன் பைத்தியக்காரன் என்று இந்திய சரித்திரத்தில் பட்டம் பெற்றுவிட்டான். அந்தத் துக்ளக்கின் தங்கைக்கு விவாகம் ஏற்பாடாயிற்று. தன் குலம் உயர வேண்டுமென்று அவனுக்கு ஆவல். அதனால் அப்பாஸ் ஸையத் என்ற அசல் அராபிய 'பத்தூயின்' ஜாதி முஸ்லிமுக்கு இளவரசியை மணம் செய்து கொடுக்க அவன் தீர்மானித்தான். "ஹிந்துஸ்தானி ரீதியில் நான் மணம் செய்துகொள்ள முடியாது. எங்கள் ஜாதி முறைப்படியே செய்யவேண்டும்" என்று மணமகன் பிடிவாதம் பிடித்தான். முதலில் துக்ளக்குக்கு மண விழாவை எப்படி நடத்துவது என்று புரியவில்லை. பிறகு பத்தூயின்களைக் கேட்டு அவர்களுடைய மணவிழா முறையை அறிந்துகொண்டான். அதன்படியே மணவிழா நிறைவேறியது.

மணமகளான இளவரசி பந்தலில் அமர்ந்திருந்தாள். மேலே என்ன நடக்கப் போகிறதென்று எல்லோரும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அப்பாஸ் திடீரென்று புலிவேஷந்தாங்கி உள்ளே நுழைந்தான். காதல் பொங்கி இளவரசியின்மேல் தாவிப் பாய்ந்து அவளைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றான். இளவரசியின் நிலை குரங்கின் கையில் சிக்கிய

காதலிலே பல விதம். அது அரண்மனையிலும் உண்டு; குடிசையிலும் உண்டு. முகலாயரின் சில ரசமான காதல் நிகழ்ச்சிகளை இப்ன் பதூதா, பாதுயினி, மானுஸி, முகம்மது ஸாலேஹ் ஆகிய பழைய சரித்திர ஆசிரியர்கள் வர்ணித்திருக்கிறார்கள். அவற்றைச் சேகரித்துத் தரும் இந்தக் கட்டுரையாளரும் ஓர் ஆராய்ச்சிக்காரரே. இது வங்காளிப் பத்திரிகைகள் சிலவற்றின் பழைய இதழ்களிலிருந்து திரட்டிய தொகுப்பு.

பூமாலைக்கு ஈடாகத்தான் இருந்திருக்கும்!

மோகினியின் காதல்: அக்பர் பாதுஷா காலத்தில் ஸையத் மூஸா என்ற ஒருவன் பாதுஷாவின் தர்பாரில் உத்தியோகம் பார்த்து வந்தான். ஒரு நாள் தன்னந்தனியாக அவன் ஆக்ராநகரில் உலாவச் சென்றான். அப்போது ஹிந்துக்கள் வசிக்கும் பாகத்தில் ஒரு மாடி வீட்டில் மோகினி என்ற ஒரு பெண்ணை மூஸா கண்டான். உடனே மையல் கொண்டுவிட்டான். பொற்கொல்லன் மகளான மோகினி அபூர்வ அழகி; அவளும் அந்த அழகிய முஸல்மான்மீது காதல் கொண்டாள்.

அதே சமயம் ஜயபுர் ராஜ்யத்தில் ஏதோ கலவரம் நேர்ந்தது. அங்கே

செல்லும்படி மூஸாவுக்குக் கட்டளை பிறந்தது. மூஸா அதைக் கவனிக்க வில்லை. 'எப்படியாவது மோகினியை வெளியே அழைத்து வந்துவிட வேண்டும்' என்று அவன் துடித்தான். இரண்டொரு தடவை இரவில் அந்தப் பக்கம் சென்று பார்த்தான். காவலாளரிடம் அடிபட்டதுதான் மிச்சம். பிறகு ஒரு நாள் மோகினி முன் ஏற்பாட்டின்படி மாடியில் கயிற்றைக் கட்டி அதன் வழியே இறங்கி வந்து மூஸாவுடன் புறப்பட்டுச் சென்றாள். மோகினியின் வீட்டார் மூஸாவின் வீட்டைச் சந்தேகத்தின்மேல் முற்றுகை யிட்டார்கள். அந்தக் காலத்தில் அக்பர் ஒரு சட்டம் இயற்றியிருந்தார். அதன்படி ஹிந்துப் பெண் எவளேனும் முஸ்லிமை மணந்தாலோ மதம் மாறினாலோ அது செல்லாது. அதிகாரிகள் அவளைப் பலவந்தமாகத் திருப்பிக் கொண்டு வந்து அவளுடைய பெற்றோரிடமே சேர்த்துவிடுவார்கள். அவளை மணந்த அல்லது மதம் மாற்றிய முஸ்லிமுக்குக் காஜியின் நீதிஸ்தலத்தில் தண்டனை வேறு கிடைக்கும்.

ஆகவே, மோகினி வேறு வழியின்றி மூஸாவுக்கு ஒரு விதமாக ஆறுதல் சொல்லிவிட்டு, மூன்றாம் நாள் இரவு திடீரென்று தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். ஏதோ ஒரு தேவதை தன்னை மாயமாய்த் தூக்கிச் சென்றுவிட்டதாகவும் தான் மிகவும் அழுது வேண்டிக் கொண்டதன் மேல் அது தன்னை இப்படித் திருப்பிக்கொண்டு வந்துவிட்டதென்றும் கதை திரித்துவிட்டாள். வீட்டார் இதை நம்பினார்கள். இருந்த போதிலும் அவளை வீட்டு மேல்மாடி அறையில் போட்டு அடைத்து வைத்தார்கள். "விஷயம் அதிக தூரத்துக்குப் போய் விட்டது. இனி நீ ஆக்ராவை விட்டுச் செல்; உன் சிநேகிதன் எவன் மூலமாவது என்னைப்பற்றி அவ்வப்போது தகவல் அறிந்துகொள்" என்று மோகினி ரகசியமாகத் தன் காதலனுக்குச் சொல்லி அனுப்பினாள்.

மறுமுறை மூஸா தன் நண்பன் மூலம் அவளை மீட்க முயன்ற போதும், அவள் வீட்டார் கண்டு பிடித்துவிட்டார்கள். அதிகாரிகள் அந்தத் தோழனைச் சிறையில் தள்ளிவிட்டார்கள். மோகினியை ஓர் அறையில் பூட்டிவைத்தார்கள். இதனால் மூஸாவின் மனம் முறிந்துவிட்டது. அவன் உடல் வாடி மெலிந்து பைத்தியக்காரனானான். இந்த நிலையிலே கடைசியாக ஒரு நாள் உயிரும் நீத்தான். அவனது சவம் தன் வீட்டு வழியாக வருவதைக் கண்டதும் மோகினிக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டது. அவள் அப்படியே மாடியிலிருந்து கீழே குதித்தாள். உடலில் பட்ட காயத்தையும் லட்சியம் செய்யாமல் மூஸாவின் பிணத்தின் பின்னே சென்றாள். இப்போது எவரும் அவளைத் தடைசெய்யவில்லை. அதன் பின்பு மோகினி ஒரு முஸ்லிம் மதபோதகரிடம் சென்று இஸ்லாத்தில் சேர்ந்தாள். 'மூஸா! மூஸா!' என்று பிதற்றிக்கொண்டே அவளும் வெகு விரைவில் தன் காதலன் சென்ற இடம் சேர்ந்தாள்.

இதைப்பற்றிப் பிற்காலத்தில் மூஸாவின் சகோதரன் ஒருவன் பாரசீக மொழியில் 'மனமோகினி' என்ற பிரசித்தி பெற்ற அழகிய காவியம் ஒன்றை எழுதியிருக்கிறான் என்கிறார் பாதுயினி.

ஷாஜஹானின் சபதம்: முகலாய அரசனான ஷாஜஹானுக்கு மும்தாஜ்மஹல் என்ற மகிஷியைத் தவிர

வேறு இரு மனைவியரும் உண்டு. ஆனால் ஆர்ஜ்மந்த்பானு என்று இயற் பெயர் பெற்ற மும்தாஜிடமே பாதுஷாவுக்கு அளவு கடந்த பிரேமை. அந்தப் பிரேமை மயக்கத்தில் ஒரு சமயம் மும்தாஜுக்கு அவன் கடுமையான சபதம் செய்து கொடுத்துவிட்டான். மும்தாஜைத் தவிர வேறு எந்த மகிஷிக்கும் பிள்ளைப் பேறு இராதபடி தான் பார்த்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டான். அதை அவன் சாகுமளவும் மீறவில்லை.

இன்று மும்தாஜின் ஞாபகச் சின்னமாகத் தாஜ்மஹால் சிறப்புற்று விளங்கியபோதிலும், மற்ற இரண்டு மகிஷிகளான பதேபுரி மஹல், அக்பராபாதி மஹல் என்பவர்களின் தியாகத்துக்கும் அடையாளமாக டில்லியில் இப்போதும் அவர்கள் பெயர் தாங்கிய இரண்டு மசூதிகள் இருப்பதை நாம் காணலாம்.

ஔரங்கஜேப்பின் மையல்: ஷாஜஹானின் மூத்த மகன் தாராவைப் பற்றியும் இந்தமாதிரி வரலாறுகள் காணப்படுகின்றன. அவற்றைவிட அவன் தம்பி ஔரங்கஜேப்பைப் பற்றிய சம்பவத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். அவர் நித்திய நமாஸ் புரிந்து சதா குர்ஆனும் கையுமாகப் பக்கிரிபோல் எளிய வாழ்க்கை நடத்தியவர்.

ஒட்டியுலர்ந்த சரீரமுள்ள அவர் புர்ஹான்பூரிலிருந்த தம்முடைய பெரியம்மாவின் மாளிகைக்குச் சென்றிருந்தார். அங்கே ஒரு நாள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அங்கே வந்த ஹீராபாய் என்ற அடிமைப் பெண்ணிடம் அவர் மையல் கொண்டுவிட்டார். இளவரசர் இந்த மையலில் மயக்கம் போட்டு இறந்துவிடுவார் என்று கூடச் சொல்லிக்கொண்டார்கள். ஏற்கனவே அந்தப் பெண் அவருடைய பெரியம்மாவின் புருஷன் கலில் உல்லாவுடன் உறவு கொண்டவள். அந்தக் கிழவனுக்கு இதைக் கேட்டதும் இளவரசரின்மேல் கோபங் கோபமாக வந்தது. ஆயினும் தன் மனைவி பயமுறுத்தவே, அந்தப் பெண்ணை ஔரங்கஜேப்புக்குத் தர அவன் இசைந்தான். அப்படியும் இளவரசனின் வேட்கை நிறைவேறுகிற வழியாக இல்லை. ஏனென்றால் ஹீராபாய் ஒரு நிபந்தனை விதித்தாள். இஸ்லாம் தர்மத்தை அப்படியே கடைப்பிடித்தொழுகிய ஔரங்கஜேப், மதுபானம் என்றால் அறவே வெறுப்பவர். "நீ சாராயம் குடித்தால்தான் உன் மையலுக்கு நான் இணங்குவேன்" என்று ஹீராபாய் சொன்னாள்.

மதபக்தி மிகுந்த ஔரங்கஜேப் என்ன செய்வார்! ஆனால், அவருக்கு மோகம் தலைக்கேறி இருந்தது அந்தச் சமயம்; அதனால் நீதி, தர்மம் எல்லாம் மலையேறிவிட்டன. ஔரங்கஜேப் தமது வாழ்வில் முதல் முறையாகச் சாராயக் கிண்ணத்தை எடுத்து வாயருகில் கொண்டுபோனார். அதற்குமேலும் பார்த்திருக்க ஹீராபாய்க்குப் பொறுமை இல்லையோ அல்லது அவரது விரதத்தை ஏன் கெடுக்கவேண்டும் என்ற எண்ணந்தான் அவளுக்கு வந்ததோ தெரியவில்லை. அவள் பட்டென்று கிண்ணத்தைத் தட்டிவிட்டாள். சாராயம் கீழே வழிந்து ஓடியது. விரதபங்கம் நேரவில்லை. என்றாலும் ஔரங்கஜேப்பின் உறுதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதென்னவோ உண்மை.

ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

★

> வருங்கால 'மேசாயா' என்று மதித்து அவரை அன்னி பெஸன்ட் வளர்த்தார். அவரே அத்தனை பெருமையையும் உதறிவிட்டார்!

ஒல்லியான உருவம்; வளைந்த புருவம்; நீண்டு அரும்பு போல் நுனி சிறுத்த விரல்கள் - இந்த லட்சணங்களுடன் விளங்குகிறார் ஓர் இந்தியர். இவரிடம் ஹாலிவுட் பட முதலாளி ஒருவர் ஒரு சமயம் கவர்ச்சி கொண்டார். புத்தர் வேஷத்தில் நடிக்க ஒரு நடிகரைத் தேடிக்கொண்டிருந்தார் முதலாளி. இந்த இந்தியரிடம் அப்போதுதான் அவருக்குக் கவர்ச்சி ஏற்பட்டது. அந்த நடிப்பை இவருக்கு அளிக்க அவர் முன்வந்தார். இந்தியர் அதைக் கேட்டு மகிழ்ந்து பூரித்துப் போகவில்லை. முதலாளிக்கு இவர் சொன்ன பதில் இதுதான்: "ஐயா, எனக்கு உம்மையும் பிடிக்கவில்லை; உமது படத்தையும் பிடிக்கவில்லை; புத்தரையும் பிடிக்கவில்லை."

இந்த இந்தியரே ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி. இதே மனிதர்தாம் முன் ஒரு காலத்தில் "நானே புத்தர்; நானே கிறிஸ்து" என்று சொன்னவர். இவர் சொன்னது மட்டுமல்ல, இவர் சொன்னதை ஏராளமான மக்கள் நம்பவும் நம்பினார்கள்.

இப்போது கிருஷ்ணமூர்த்திக்கு வயது 50. இத்தனை நாளும் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்செல்ஸ் என்னும் இடத்தில் இவர் வசித்தார். அங்கே இவருக்குப் பக்கத்து வீட்டுக்காரர் ஆல்டஸ் ஹக்ஸ்லி. அந்த அமெரிக்க நகரில் தாம் இத்தனை நாளும் வசித்ததைச் 'சிறைவாச'த்துக்கு இவர் ஒப்பிடுகிறார். அந்தச் 'சிறைவாச'த்திலிருந்து வெளிப்பட்டு, இன்று இவர் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார். ஏராளமான மக்கள் இவரைத் தரிசிக்க வருகிறார்கள். அவர்களிடமெல்லாம் இவர், "நான் மகாத்மா அல்ல; முனிவன் அல்ல. உங்கள் எல்லாரையும் போலவே நானும் ஒருவன்" என்று சொல்கிறார். என்றாலும், அவர்கள் விடவில்லை; இவரைத் தரிசிக்க வந்துகொண்டேதான் இருக்கிறார்கள்; இவரைத் தங்களுக்கு ஆத்ம ஒளி காட்டும் குருவாகவே இன்னமும் மதிக்கிறார்கள்.

மூலம்: லீடர் (ஆங்கிலம்: 15-5-'48), ஷூ லேன், லண்டன்.

தியாஸபிஸ்டுகளின் தலைவரான அன்னி பெஸண்ட், ஒரு காலத்தில் இந்தியத் தேசிய இயக்கத்தின் முடி சூடா ராணியாகவும் விளங்கினார். அவர் இவரைச் சிறுபிராயத்தில் எடுத்து வளர்த்தார். வருங்கால 'மேசாயா' (உலக ரட்சகர்) இவரே என்று அவர் மதித்தார். தென்னிந்தியாவிலுள்ள மதனபள்ளி ஹைஸ்கூலில் இவரைப் படிக்க வைத்தார். இவருடைய தகப்பனார் சென்னை ராஜதானியில் சொற்பச் சம்பளம் பெற்று வாழ்ந்த ஒரு மாஜிஸ்ட்ரேட். மகனைத் திரும்பப் பெற அவர் முயன்றார். அது பலிக்கவில்லை. பெஸண்ட் இவரை ஆக்ஸ்போர்டு கல்லூரிக்கு அனுப்பினார். பிரெஞ்சு பாஷை, டென்னிஸ் விளையாட்டு, பால் ரூம் டான்ஸ் இவையெல்லாம் கற்றார் கிருஷ்ணமூர்த்தி.

குருநாதர்களான மகாத்மாக்களின் அருள் இவருக்கு இருப்பதாக இவர் நம்பும்படி இவருக்குப் பெஸண்ட் போதித்தார். இவர் புனைந்த கவிகளும் 'குருநாதர் பாதங்களில்' என்று இவர் எழுதிய நூலும் அந்த மகாத்மாக்களின் அருளே என்று தியாஸபிஸ்டுகள் மதித்தார்கள். இவர் இரண்டு முறை உலகமெங்கும் சுற்றிப் பிரசங்கங்கள் புரிந்தார். எங்கெங்கும் சபையோர் இவரைத் தெய்வமெனப் போற்றி வணங்கினார்கள். செல்வங்கொழித்த ஆண்களும் பெண்களும் இவருடைய உபதேசங்களைக் கேட்டு மனம் உருகிப் பெருங்காணிக்கைகளை இவரிடம் சொரிந்தார்கள்.

திடுதிப்பென்று இவர் 1929-ஆம் ஆண்டு "நான் மேசாயா (உலக ரட்சகன்) அல்ல; எனக்கு அருள் புரிவதாகச் சொல்லும் மகாத்மாக்களெல்லாம் வெறும் கற்பனையே" என்று பகிரங்கமாய் அறிக்கை செய்துவிட்டார். பெஸண்ட் ஏமாற்றமடைந்தார்; தியாஸபிஸ்டுகளெல்லாம் கலவரமுற்றார்கள். இவரை உலக குருவாகச் செய்வதற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தது ஒரு சங்கம். அதற்கு 'ஆர்டர் அவ் தி ஸ்டார் அவ் ஈஸ்ட்' (கீழ்நாட்டு நட்சத்திர ஸ்தாபனம்) என்று பெயர். அந்தச் சங்கத்தையும் இவர் கலைத்துவிட்டார். தமக்குக் காணிக்கையாக வந்த பெரிய பெரிய நிலபுலன்களையும் இதர சொத்துக்களையும் அவரவருக்கு இவர் திருப்பிக் கொடுத்துவிட்டார். அந்தச் சொத்துக்கள் பல கோடி பவுன் மதிப்புள்ளவை.

இவர் அப்படித் திருப்பிக் கொடுத்த சொத்துக்களில் காஸில் ஈர்டி என்ற அரண்மனையும் ஒன்று. 'கீழ்நாட்டு நட்சத்திரச் சங்கத்'தின் உலகத் தலைமைக் காரியாலயம் அந்த அரண்மனையில்தான் இருந்தது. ஹாலந்து தேசத்தில் ஓம்மென் என்னும் இடத்துக்கு அருகே உள்ளது அந்த அரண்மனை. பின்னால் அதை நாஜிகள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அரண்மனையைச் சேர்ந்த 6,000 ஏக்கரா நிலத்தையும் ஒரு சிறைக்கூடமாக அவர்கள் மாற்றிவிட்டார்கள். "இதைப் பற்றிக் கேள்விப்பட்ட போது, நான் வருத்தப்படவில்லை; உலகமே இப்போது ஒரு பெரிய சிறைக்கூடமாகத் தானே இருக்கிறது என்ற எண்ணந்தான் தோன்றியது" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

"எனக்கு இப்போது என் மனத்தைத் தவிர வேறு சொத்து எதுவும் இல்லை. என்மீது அன்பு கொண்டவர்கள் என் பிரயாணச் செலவையும் உணவுச் செலவையும் பொறுத்துக்கொள்கிறார்கள்" என்று அவர் சொல்கிறார். "நான் புத்தகம்

படிப்பதில்லை. ஏனென்றால், எழுத்திலே காண்பதெல்லாம் மனிதர்களின் சிந்தனையை அரைகுறையாகத்தானே வெளியிடுகிறது?" என்று அவர் கூறுகிறார். சமாசாரப் பத்திரிகைகள் கலப்பற்ற தீமையே புரிகின்றன என்று அவர் கருதுகிறார். என்றாலும் அவரைப் பற்றிப் பத்திரிகைகளில் வரும் குறிப்பை யெல்லாம் அவருடைய இரண்டு காரியதரிசிகளும் சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

"மக்களைச் சிந்திக்கச் செய்ய வேண்டும்" - இதுவே அவருடைய நோக்கம்.

"நான் கூடிய சீக்கிரம் பிரிட்டனுக்குச் செல்லப் போகிறேன்; பிரிட்டிஷ்காரர்களைச் சிந்திக்கச் செய்யப் போகிறேன். அவர்கள் தங்கள் நன்மைக்காகவும் உலக நன்மைக்காகவும் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், இன்று பிரிட்டிஷ்காரர்கள் என்ன சிந்திக்கிறார்களோ அதையே நாளைக்கு உலகம் சிந்திக்கிறது" என்று அவர் சொல்லுகிறார்.

டாக்டரும் சமையல்காரியும்

ஓர் ஆசிரியருக்கு விலாவில் ஒரு சிரங்கு புறப்பட்டது. ஒரு டாக்டரிடம் ஓடினார். "சூடாக ஏதாவது பற்றுப் போடுங்கள். இரண்டே நாளில் குணமாகிவிடும்" என்றார் அவர்.

வீட்டிலே ஆசிரியரின் சமையல்காரி இதைக் கேட்டு, "பூ! சூடான பற்றும் வேண்டாம், மண்ணும் வேண்டாம். குளிர்ச்சியான பற்றுப் போடுவதுதான் நல்லது" என்றாள். ஆசிரியர் வேறு வழி யில்லாமல் குளிர்ச்சியான பற்றையே போட்டுக்கொண்டார். என்ன ஆச்சரியம்! இரண்டே நாளில் சிரங்கு அமுங்கிப் போய்விட்டது.

ஆசிரியர் மீண்டும் டாக்டரிடம் போய், "சிரங்கு முற்றும் குணமாகிவிட்டது. ஆனால், நீங்கள் சொன்னபடி நான் சூடான பற்றுப் போட்டுக்கொள்ள வில்லை. என் சமைபல்காரி குளிர்ச்சியான பற்றே போடும்படி சொன்னாள். அதுதான் சிரங்கைக் குணப்படுத்தியது" என்றார்.

டாக்டர் பிரமித்துப் போனார். "இதென்ன வேடிக்கையாயிருக்கிறதே! சூடான பற்றுப் போட யோசனை சொல்லும்படி அல்லவா என் சமையல்காரி எனக்குச் சொன்னாள்" என்றார்!

—பென்னெட் ஸெர்ப் (ஆம்னிபுக்.)

வைத்தியர் தவிப்பு

"அப்படியானால், உங்கள் நோயாளி மாண்டுவிட்டான் என்று சொல்லுகிறீர்கள்?"

"ஆமாம். அதுதான் என் மனசுக்குப் பெரிய தொல்லை தந்துவிட்டது. அவனுக்கு நான் வெவ்வேறு விதமான இரண்டு மருந்துகளைக் கொடுத்தேன். அவற்றில் எது அவனைக் கொன்றது என்று புரியாமல் தவிக்கிறேன்."

—'லீ ரிரே', பாரிஸ்

வாழ்க்கையிலே குழந்தை முதல் முதலாகப் பெறும் அநுபவம் பால் குடிப்பதே. அதை இன்பமாக்க வேண்டியவள்—

பால் கொடுக்கும் தாய்

ஜீன் டூப்ளே

தூங்குவதும் பால் குடிப்பதுமே குழந்தையின் முதல் அநுபவங்கள். பால் குடிக்கும்போது ஏற்படும் இன்பந்தான் குழந்தை முதல் முதலாக அடையும் இன்பம். அந்த இன்பம் பால் கொடுக்கும் தாயின் மனநிலையையே பொறுத்திருக்கும். குழந்தை பால் குடிக்கும்போது தாயை அறிந்து கொள்கிறது. அவள் மூலமாகவே இது எப்படிப்பட்ட உலகம் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்குகிறது. பால் குடிக்கும் இந்தக் காலத்தில் குழந்தைக்கு இன்பமும் திருப்தியும் நிறைந்து, அன்பும் அரவணைப்பும் பத்திரமும் இருக்குமானுல், குழந்தையின் மனத்தில் ஒரு நம்பிக்கை உண்டாகும்; இது நல்ல உலகந்தான், வாழத்தகுந்ததுதான் என்ற உணர்ச்சி ஏற்படும். இந்த முதல் அநுபவம் திருப்திகரமாக ஏற்பட்டுவிட்டால், குழந்தை வெகு சுலபமாக அடுத்த அநுபவத்தை ஏற்கத் தயாராகும். ஆனுல் பால் குடிக்கும் இந்த முதல் அநுபவம் குழந்தைக்குத் திருப்தியையோ இன்பத்தையோ தராவிட்டால், எதன் மேலும் ஓர் அவநம்பிக்கையும் பயமும் குழந்தையின் மனத்தில் நிலைத்துவிடும். இவை பின்னுல் அதன் ஆயுள் முழுவதிலுமே தொடர்ந்து வாழ்க்கையைக் கசப்பாக்கிவிடும். குழந்தைக்குப் பால் கொடுப்பதில் வெறும் உடல் வளர்ச்சியைப் பற்றி மட்டும் கவனித்தால் போதாது; குழந்தையின் மனவளர்ச்சி முழுவதற்குமே அஸ்திவாரம் பால் கொடுப்பதில் அடங்கியிருக்கிறது என்பதைத் தாய்மார்கள் நன்ருக அறிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைக்குப் பசிக்கும்போது தான் பால் கொடுக்கவேண்டும். பசியெடுக்கும் நேரம் குழந்தைக்குக் குழந்தை வித்தியாசப்படும். எனவே எல்லாக் குழந்தைகளுக்கும், 'இவ்வளவு மணி நேரத்துக்கு ஒரு முறைதான்' என்ற பொதுத் திட்டம் ஒன்றும் இல்லை. குழந்தை எவ்வளவு பாலைக் குடிக்க விரும்புகிறதோ அவ்வளவுதான் அதற்கு வேண்டிய பாலின் அளவு. அந்த எல்லைக்குமேல் அதிகமாகக் குடிக்கும்படி குழந்தையை வற்புறுத்தக் கூடாது. பால் குடிக்கும்போது குழந்தை நெடுநேரம் சூப்பிக் குடிக்கவிடவேண்டும்; சூப்பிக்குடிப்பது குழந்தைக்கு அவசியம். குழந்தையை அவசரப்படுத்தக்கூடாது. பால் குடிக்கும்போது குழந்தையை அன்போடு அணைத்துப் பிடித்துக் கொள்ளவேண்டும்; கொஞ்சவேண்டும்; தடவிக்கொடுக்கவேண்டும்; அதோடு சிரித்து விளையாடவேண்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: மே '48), 4600, டைவர்ஸி அவென்யூ, சிக்காகோ 39, யு. எஸ். ஏ.

டும். இவையெல்லாம் குழந்தைக்குத் தேவை. குழந்தை இவற்றை எல்லாம் எதிர்பார்க்கிறது, விரும்புகிறது. பால் கொடுக்கும்போது தாய் குழந்தையிடம் காட்டும் அன்பைக் குழந்தை மனத்தால் உணர்கிறது, அநுபவிக்கிறது; அதில் இன்பமடைகிறது, திருப்தி பெறுகிறது. இந்த இன்பமும் திருப்தியும் அதன் முகத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். இந்த இன்பத்தையும் திருப்தியையும் தந்தவள் தாய் என்பதைக் குழந்தை அறிகிறது. தாயையே தன் உலகமாகக் கொண்ட குழந்தை உலகத்தில் எல்லோரும் தன் தாயைப்போலவே தன்னிடம் அன்பும் ஆதரவுமாக இருப்பார்கள் என்ற உணர்ச்சி கொள்கிறது.

குழந்தையின் பசி நேரத்தைக் கணக்காக அறிந்து பால் கொடுப்பது தாய்க்குச் சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் குழந்தையினிடம் அன்பு மிகுந்த ஒரு தாய் குழந்தைக்குப் பசியெடுக்கும் நேரம் எது என்பதைத் தானே எளிதிலே அறிந்துகொண்டுவிடுவாள். குழந்தைக்குப் பால் கொடுக்கும் நேரம், அளவு முதலியவற்றைப் பற்றிச் சொந்தக்காரரும் நண்பர்களும் பலவிதமாகச் சொல்வதைக் கேட்டுக் குழம்புகிற தாய்க்குத்தான் கஷ்டம். யார் சொன்ன திட்டமும் தன் குழந்தைக்குப் பொருந்தவில்லையே என்று தோன்றும்போது, அவளுடைய குழப்பம் இன்னும் அதிகமாகும். கடைசியில் தன் குழந்தைக்குப் பால் கொடுப்பதற்கு ஏற்ற திட்டம் எது என்பதை அறியாமல், வைத்தியர்கள் சராசரிக் கணக்கெடுத்து அமைத்திருக்கும் ஒரு திட்டப்படி நேரத்தையும், பாலின் அளவையும் அவள் வகுத்துக் கொள்வாள். இதோடு நிற்காமல், குழந்தையை எடுத்து அணைத்துக் கொஞ்சிச் சீராட்டிப் பாராட்டுவது தவறு என்றும், தானே பால் கொடுப்பதைவிடப் பாட்டில் மூலமாகக் கொடுப்பதே நல்லது என்றும் அவள் எண்ணிவிடுகிறாள். சில வைத்தியப் புத்தகங்களே தாம் இந்த முறைகளை விதிக்கின்றனவே!

சுற்றி இருப்பவர்களின் சௌகரியத்துக்கு ஏற்றபடி குழந்தை தன் தேவையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பது தற்கால நாகரிகம். இதன் பலன் என்ன? குழந்தைக்குத் தன் பசி வேளையில் பால் கிடைக்காது; யாரோ எழுதி வைத்த கால அட்டவணைப்படி தான் கிடைக்கும். தாயிடம் பால் குடிப்பதைவிட்டுப் பாட்டில் மூலம் குடிக்கும் பழக்கம் ஏற்படும். பாட்டிலை விட்டுக் கிண்ணியில் குடிக்கும் பழக்கமும் பாலைக் கைவிட்டு விட்டுக் கெட்டியான ஆகாரம் உண்ணும் பழக்கமும் வெகு சீக்கிரத்திலே ஏற்படும்.

நமது நாகரிகம் நமக்கு என்னவெல்லாம் கற்றுக் கொடுத்திருக்கிறது! தாய் தன் பாலைக் குழந்தைக்குக் கொடுப்பது தவறாம்; குழந்தையை எடுத்து வைத்து அணைத்துக் கொஞ்சுவது பிசகாம்; குழந்தையைச் செல்லம் கொடுத்துக் கெடுக்கக்கூடாதாம்; அட்டவணையிலுள்ள மணி நேரத்துக்கு முன் பசியால் குழந்தை அழுதால், அழட்டும் என்று விட்டுவிடவேண்டுமாம். (இந்த அழுகை குழந்தைக்கும் துன்பம் தருகிறது, தாய்க்கும் துன்பம் தருகிறது; இருவருக்கும் துன்பம் தரும் ஒரு விதி நல்லதாகத்தானே இருக்க முடியும்!) குழந்தைக்கு ஒழுங்கு பழக்க வேண்டுமே ஒழிய, கொஞ்சிக்

குலாவி அதைக் கெடுக்கக் கூடா தாம்! இந்த எண்ணமெல்லாம், நம் நாகரிகத்தின் விளைவு.

இந்த உபத்திரவங்களுக்கு நடுவே வாழும் குழந்தையின் கதி என்ன? அதன் அவசியத்துக்கும் சக்திக்கும் ஏற்றபடி பழக்கங்கள் ஏற்படுவ தில்லை. ஆனால் ஏதோ கண்மூடித் தனமான ஒரு திட்டத்துக்கு ஏற்ற படி குழந்தையைப் பெரியவர்கள் கட்டாயப்படுத்திப் பல பழக்கங்களை யும் அதற்கு உண்டாக்குகிறார்கள். குழந்தைக்கு அதனால் அதிருப்தி யும் துன்பமும் ஏமாற்றமுமே ஏற்படுகின்றன.

ஆரம்பத்தில் பெறும் அநுபவத் தில் குழந்தைக்குத் திருப்தியும் இன் பமும் ஏற்பட்டிருந்தால், பின்னால் எந்த விஷயத்தில் அதைக் காக்க வைத்தாலும் அது பொறுமையாய் இருக்கும்; காத்திருந்தால் உண்மை யான சுகம் கிடைக்கும் என்று அது நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளும். பால் மறப்பது முதல் பற் பல பழக்கங்களும் அவசரமில்லா மல் சரளமாக ஏற்பட்டிருந்தால், பல புதிய பழக்கங்கள் ஒரே சமயத்தில் நேர்ந்து குழந்தையைக் குழப்பாதிருந்தால், பின்னாலும் குழந்தை வேறு பல பழக்கங்களை இயற்கையாகவே ஏற்றுக்கொள் ளும். குழந்தை நிலையில் பழக்க மான சில சில இன்பங்களை அது கைவிட நேரும்போது, குழந்தை யிடம் தாய் நிறைந்த அன்பு காட்டி, அதைக் கொஞ்சி, அரவணைக்க வேண்டியது அவசியம். இந்த அன்பு வெள்ளத்தில் தன் நஷ்டத் தைக் குழந்தை உணராது. பழைய இன்பமான பழக்கங்களை விட்டுவிட் டுப் புதுப் பழக்கங்களைப் பழக முய லும் குழந்தையின் முயற்சிகளைத் தாய் பாராட்டவேண்டும். இதுவும் குழந்தையின் கஷ்டத்தைக் குறைக் கும் வழியாகும்.

ஆரம்பத்தில் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போதே அந்தக் குழந் தையின் சொந்த இயற்கைக்கு ஏலாத ஒரு திட்டப்படி நடந்து குழந்தைக்கு ஏமாற்றத்தையும் பயத்தையும் வெறுப்பையும் உண் டாக்கிவிட்டால், பிறகு ஒவ்வொரு புது அநுபவத்தைக் கண்டும் குழந் தைக்குப் பயமும் ஏமாற்றமும் வெறுப்புந்தான் உண்டாகும்.

ஆனால், ஆரம்பத்தில் குழந்தைக் குப் பால் கொடுக்கும்போது, அதற்கு அந்த அநுபவம் இன்பமா யிருக்கும்படி அதனிடம் அன்புகாட் டிக் கொஞ்சி, அதன் சொந்தத் தேவைக்கு ஏற்ற திட்டப்படி பாலைக் கொடுத்து, அதன் மனத் தில் திருப்தியும் நம்பிக்கையும் தோன்றும்படி செய்துவிட்டால், பிறகு ஏற்படும் எல்லாப் புது அநு பவங்களையும் பழக்கங்களையும் குழந்தை சுலபமாகவும் நம்பிக்கை யோடும் ஏற்றுக்கொள்ளும். அத னால் குழந்தைக்கும் சுகம்; குடும்பத் துக்கும் சுகம்.

இப்போது தேவை

கையிலே இன்னும் கொஞ்சம் அழுக்குப் படவேண்டும்;
மனத்திலே இன்னும் கொஞ்சம் பரிசுத்தம் வரவேண்டும்.
இதுதான் இப்போது நாட்டுக்குத் தேவை.

—'நார்த்பே நக்கெட்', (கானடா.)

நகைச்சித்திரம்



யானைகள் பேச்சு: ஈர்க்குச்சி
உடம்புதான். ஆனாலும் இவளுச்
குக் கால் ரொம்ப ஜோர்!

—இந்தியா.

மனைவி: அதை என்னிடம்
கொடுங்கள். நீங்கள் என்
நிழலில் நடக்கலாம்.

—ஆனந்தவாணி

"என் தலைக்கு 12-
அணாவா ?"
"வேலைக்கு நாலணாத்
தானுங்க; தேடு கூலி
எட்டணா." -ஆந்திர ஜோதி.



நாட்டுப் புறத்து வண்டிக்காரன்:
என்னப்பா, நடு ரோட்டிலே கூத்தாடிக்
கிட்டு நிக்கறே! வழியை விடப்பா!

—மனோஹர்.



இந்திய மந்திரிகளும் அவர்களின் இலாகாக்களும்.

—சங்கர்ஸ் வீக்லி (டில்லி)

புதிதாக இல்வாழ்க்கை தொடங்கும் தம்பதிகளுக்கு ஒரு சோதனைக் காலம் உண்டு. அதுதான்முதல் மாசம்.

புது மாப்பிள்ளையும் பெண்ணும்

மணமக்கள் வயசான அந்தப் பெரியவரிடம் போய் வணங்கினார்கள். அவர் ஆசீர்வாதம் பண்ணினார். "முதல் மாசத்தில் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்திவிட்டீர்களானால், பிறகு உங்கள் வாழ்வு முழுவதும் ஆனந்தமாக இருக்கலாம் என்பது நிச்சயம்" என்பதுதான் அவர் கூறிய அறிவுரை. அப்படிச் சொன்னவர் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார். தம்மைச் சார்ந்தவருடைய யோகக்ஷேமத்தில் சிரத்தையும் சிறந்த மனஸ்தத்துவ அறிவும் வாய்ந்தவர் அவர்.

"முதல் மாசமா! அது அவ்வளவு கஷ்டமா?" என்று மணமகன் வியப்போடு கேட்டான்.

"ஆம் அப்பா! அந்தக் காலந்தான் மிகவும் கஷ்டமான காலம்; சிக்கலான காலம். அந்த ஒரு மாச காலத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துப் போய் வாழ முடிந்துவிட்டால், ஒரு பெரிய போராட்டத்தில் வெற்றி பெற்றவர் ஆவீர்கள்" என்று பாதிரியார் பதில் அளித்தார்.

அந்த இரண்டு காதலரும் சில காலமாக ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டிருந்தார்கள். காதலின் முதல் மோகத்தில் ஒரு தடையையும் அவர்கள் காணவில்லை; அப்படி ஏதாவது வந்தாலும் அது அவர்கள் கண்ணில் பட்டதாகவே தெரியவில்லை. தங்களுடைய காதலும் மணவாழ்க்கையும் மிகவும் சிறப்பாக இருக்குமென்றே அவர்கள் நம்பினார்கள்.

காதல் விஷயத்தில் ஒரு விசித்திரம்: காதலையுடையவன் தன்னைப் போலச் சந்தோஷத்தை அநுபவிக்கிறவன் வேறு யாருமே இல்லை என்று நினைக்கிறான். அந்த உணர்ச்சி மிகவும் அற்புதமானதென்றும் நித்தியமானதென்றும் கருதுகிறான். இது உண்மையன்று. உண்மையாக இருந்தால் விவாகரத்துக்களும் இல்வாழ்க்கை முறிவும் சங்கடங்களும் நேரக் காரணம் இல்லையே! ஆகவே ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் அபிமானம் எவ்வளவு ஆழ்ந்து வலியதாக இருந்தாலும் காதல் வெற்றி பெற அதற்கு மேலும் ஏதோ ஒன்று வேண்டியிருக்கிறது.

முதல் மாசத்திலே சோதனை வந்து நிற்கிறது. கல்யாணத்துக்கு முன்னால் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. காதலர்கள் குறிப்பிட்ட காலங்களில் சந்திக்கிறார்கள்; எல்லைக்குள் அடங்கி மகிழ்கிறார்கள். தங்கள் அன்பையும் பரஸ்பர விசுவாசத்தையும் தெரிவித்துக் கொள்கிறார்கள். அப்போதெல்லாம் ஏதோ மாயமந்திரத்தாற் கட்டுப்பட்டவர் போலச் சந்திக்கின்றனர். உணர்ச்சி

காப்பிரைட்: காரவான் (ஆங்கிலம்: ஏப்ரல் '48),
கனாட் ஸர்க்கஸ், தபால் பெட்டி 17, புது டில்லி.

விஞ்சிய மயக்க நிலையில் பூவுலகத்துக்கு அப்பாலே உயர்ந்து நின்ற ஒரு கனவுலகத்தில் வாழ்கிறார்கள்; தம்முடைய சிறந்த இயல்புகளையே புலப்படுத்திக் கொள்ளும் ஆசை அவர்களிடம் இருக்கும்.

கல்யாணமானவுடன் இந்த நிலை மாறுகிறது. பொன்னுலக இன்பக் கனவில் அவர்கள் இனி வாழ்வதில்லை; நிலத்தில் கால்பாவி நடக்க வேண்டி வருகிறது. உண்மையான உலகத்தைப் பற்றிய நினைவுகள் வருகின்றன.

இருபத்துநாலு மணி நேரமும் கணவனும் மனைவியும் உடனிருந்து வாழ்கிறார்கள். இனிமேல் ரகசியம் என்பது இல்லை. இயற்கையில் ஒவ்வொருவரிடமும் நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கின்றன. ஆதலால் அவர்கள் உண்மை யுலகத்தில் வாழத் தொடங்கும்பொழுது சோதனையும் தொடங்குகிறது.

தாம் கண்ட கனவுக்கு நேர் மாறாக இருக்கும் ஒன்றை முதல் முதலில் உணரும்பொழுது திடுக்கிட்டுப் போகிறார்கள். இதை அவர்கள் எதிர்பார்த்திராததுதான் அதற்குக் காரணம். நண்பர்களோ, பெரியவர்களோ, பிரமாதமான ஆனந்தத்தை முதலில் எதிர்பார்க்கக் கூடாது என்று அவர்களுக்குச் சொல்லி வைக்கவேண்டும்.

உணர்ச்சி மோதல் வரும்போது முதல் ஏமாற்றம் உண்டாகிறது.

கல்யாணம் ஆவதற்கு முன் அவர்கள் உடலின்பம் நுகர்வதில்லை. அவ்வாறு நுகர்தல் தவறு; முறையுமன்று. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் இச்சை எவ்வளவு அதிகமாக இருந்தாலும், எவ்வளவு இன்பத்தைத் தருவதாக இருந்தாலும் எல்லை கடந்து பழகுவதால் ஒருவரை ஒருவர் மதித்திருக்கும் மதிப்புக்குக் கேடு வந்துவிடும். மரியாதையும் சால்பும் உடைய யாரும் தாம் ஆழ்ந்த காதல் கொண்டுள்ள மற்றவருடைய கௌரவத்தைக் காப்பாற்ற விரும்பினால், அத்தகைய காரியத்தில் ஈடுபடமாட்டார்.

முதல் கூட்டத்தில் உடலும் உயிரும் உள்ளமும் இணைந்து எல்லையற்ற இன்பம் உண்டாகுமென்று மணமக்கள் எதிர்பார்க்கின்றனர். முதல் முதலில் இத்தகைய இன்பம் கிடைப்பது அரிது. அதனால் ஏமாற்றம் ஏற்படுகிறது. அநுபவமற்ற உள்ளத்தில் ஏதோ ஒரு பெரிய கேடு சம்பவித்தாற் போலத் தோன்றுகிறது. அதை ஒரு கேடாக எண்ணுவது தவறு. அது தடுக்க முடியாத ஒரு கட்டமே யொழிய வேறு அன்று; அதை விரைவிலே தாண்டி விடலாம். கொஞ்சம் ஜாக்கிரதையும் அநுபவமும் இருந்தால் ஏமாற்றம் நீங்கி மகிழ்ச்சியும் இன்பமும் ஏற்படும்.

காதலர்கள் முன்ஜாக்கிரதையாகவும் விஷயம் தெரிந்தவர்களாகவும் இல்லாவிட்டால் அவர்கள் அமைதியை இழந்து துயரத்துக்கு ஆளாவார்கள்; பெரும்பாலோர், பாவம், அப்படித்தான் ஆகிறார்கள்! அவர்களுடைய உணர்ச்சிக்கு இடையூறு நேர்கிறது. அன்பினாலும் சந்தர்ப்பத்துக்கேற்ற செயலாலும் உண்மையை உணரும் அறிவினாலும் இந்தச் சங்கடத்தைப் போக்காவிட்டால் துன்பந்தான் உண்டாகும்.

சமாளிக்க வேண்டிய மற்றொரு சங்கடமும் உண்டு. மணமகள் புதிய இடத்தில் புதியவர்களோடு பழகுகிறாள். தன் வீட்டையும் தாய் தந்தையரையும் விட்டுப் புதுக் குடும்பத்தில் வாழ்க்கை நடத்த வரு

கிறுள்; புது முகங்களும் புது மனிதர்களும் உள்ள முற்றும் வேறு பட்ட சூழ்நிலையில் இருக்கிறுள். குறுகிய காலத்துக்குள் இந்த மாற்றத்தைச் சமாளித்துக்கொள்வது எளிய காரியம் அன்று.

கணவனது வாழ்க்கைத்தரத்துக்கும் வாழ்க்கை முறைக்கும் மனைவியின் வாழ்க்கைத் தரத்துக்கும் சில சமயம் பெரிய வித்தியாசம் இருக்கலாம். அவள் கிராமத்தில் வளர்ந்தவளாகவும், அவன் நகர வாழ்க்கையிலே பழக்கப்பட்டவனுகவும் இருக்கலாம். அல்லது அவள் நகரவாசியாகவும் அவன் கிராமத்தானுகவும் இருக்கலாம். எளிய முறையில் கிராமத்துக் கூரை வீட்டில் வாழ்ந்த பெண் புக்ககத்திலுள்ள நாற்காலி மேஜைகளையும் மின்சார விளக்கையும் ரேடியோவையும் கண்டு பிரமித்துப் போவாள். அல்லது பணக்காரப் பிறந்தகத்தில் செல்வவாழ்வு வாழ்ந்தவள், புக்ககத்தில் செட்டான வாழ்க்கை நடத்த வேண்டியும் வரலாம். இத்தகைய மாறுபட்ட நிலைகளில் ஏற்படும் சங்கடங்களைச் சமாளிக்கப் போதிய காலமும் ஆற்றலும் வேண்டும். இவைகளெல்லாம் முதல் மாசத்திலே ஒன்று சேர்ந்து வந்து நிற்கும்.

ஆகவே புதிய தம்பதிகள் இந்த விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இவை நிச்சயமாக நேரும். அளவில் கூடுதல் குறைதலாக இருக்கலாம்; அவ்வளவுதான். இவற்றினின்றும் தப்பிவிட இயலாது; எதிர் நின்று வெல்லவேண்டும். கல்யாணம் ஆனுல் உடனே இன்பம் பொங்கித் ததும்பும் என்று எண்ணக் கூடாது. அவ்வளவு சுலபமானதல்ல, மண வாழ்க்கை.

ஆனுல், மிகவும் கடினமானதென்றும் சொல்லக் கூடாது. காதலர்கள் தம்முடைய கடமைகளைப் பொறுமையுடனும், சாமர்த்தியத்துடனும், பரஸ்பர நம்பிக்கையுடனும் செய்து வருவார்களானுல் கொஞ்சம்கொஞ்சமாக அவர்கள் உறவு பலப்பட்டுச் சிறந்த இன்பத்தை அடையலாம். அதற்காகச் சிரமப்படவேண்டாம். பரஸ்பர அன்பும் மதிப்புமே ஆதாரமாகக் கொண்டு காரியம் செய்ய வேண்டும். உணர்ச்சிக்கும், உடற் பசிக்கும் திருப்தி அளிக்கும் முறைகளை உணர்ந்துகொள்ள வேண்டும். முதல் ஏமாற்றத்தை மதியாமல் வாழ நிச்சயம் செய்து கொள்ள வேண்டும்.

கணவன் மனைவி உறவென்பது நுண்ணிதான சிறந்த இன்பத்தைத் தரும் இயல்புடையது. அவர்களுடைய நடவடிக்கைகளையும் உறுதியையும் பொறுத்து நிற்பது அது. சரியான முறையில் மெல்ல மெல்ல முயன்றுல் அன்புக் கோயிலில் பொன் விமானத்தைக் கட்டிவிடலாம். அது அமைதியின் நிலையமாய், ஆனந்தத்தின் இருக்கையாய்த் திகழ்ந்து அன்புச் சோதியை வீசும்.

கேலிச்சித்திரம் என்றுல், அது காபியைப்போல முதல் தரமாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்.

—சாகா (ஸ்வதந்த்ரா)

இது ரேகை சாஸ்திரம் அல்ல; ஜாதக பலனுமல்ல. ஆனல், அவற்றை யெல்லாம் தோற்கடிப்பதாயிருக்கிறது!

கையெழுத்து ஜோஸ்யம்

புரோபஸர் என். கஸ்தூரி

கன்னட பாஷையிலும் டைப் அடிக்கும் யந்திரம் வரத்தான் போகிறது. ஆனல் அது வருவதற்கு முன்பு அதன் எழுத்துக்களைப்பற்றி இரண்டு வார்த்தை சொல்ல வேண்டுமென்று எனக்கு ஆசை. ஏன் என்கிறீர்களா? இனி வருங்காலத்தில் நாம் எழுத்தாணியையோ, பென்ஸிலையோ, பேனவையோ பிடிக்கப்போகிறேமோ அல்லது டைப் அடித்துத்தான் தள்ளப் போகிறேமோ; யார் கண்டார்கள்! இதுவரையில் எழுத்தாளரும் கவிகளும் தங்கள் விரல்களை ஒடித்துக்கொண்டுதான் கவிதா ரசத்தையும் கதை, கட்டுரைகளின் சுவையையும் நமக்கு அளித்து வந்தார்கள். என் மனத்திலுள்ள இந்தப் பயத்தினல் தானே என்னவோ, என் நண்பர்கள் அநேகரின் கவிதை கட்டுரைகளை அவர்களுடைய கையெழுத்திலேயே இதுவரை நான் சேர்த்து வைத்திருக்கிறேன். புதியவர் பழையவர் எல்லோர் கையெழுத்தையுமே சுமாராகச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறேன். உள்ளத்தில் கவிதாவெள்ளம் உடைப்பெடுத்து விடும்போது, எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் அதை விட்டு விட்டு ஓடிவந்து அறைக் கதவைத் தாழிட்டு, கீழே காகிதத் துணுக்கோ துண்டோ எது கிடந்ததோ அதை எடுத்து, பென்சிலோ மசியோ எது கையில் அகப்பட்டதோ அதைக் கொண்டு, சுவாசம் போனலும் பிராசம் போகாமல் அவர்கள் அருமையாக எழுதிய கவிதை கட்டுரைகள் அடங்கிய ஒரு கற்றை என்னிடம் இருக்கிறது.

'கையெழுத்தைக் காட்டித் தன் மதிப்பைக் கெடுத்துக்கொண்டான்' என்பது கன்னட பாஷையில் சாதாரணமாய் வழங்கும் பழமொழி. ஒருவனுடைய கையெழுத்தைக் கொண்டே அவனுடைய சுபாவத்தையும் போக்கையும் மதிப்பிட்டு விடலாம். அதுவும் கன்னட எழுத்துக்களைக் கைக்கண்ணுடி என்றே சொல்லலாம். நீங்கள் நம்பினலும் சரி, நம்பாவிட்டாலும் சரி; இது உண்மை: கன்னட எழுத்துக்களுக்கு உள்ள கொம்பு, கால், வால் முதலியவற்றின் போக்கிலிருந்தே அவற்றை எழுதிய எழுத்தாளனை நீங்கள் நன்ருக அளந்துவிடலாம்.

சில தினங்களுக்கு முன்பு என் நண்பர் ஒருவர் என் ஜாகைக்கு வந்தார். என்னிடம் இருக்கும் கையெழுத்துப் பிரதிக் கற்றையை அவரிடம் போட்டேன். அவரும் என்னைப் போலவேதான் இதிலெல்லாம் கொஞ்சம் பைத்தியம் உள்ளவர். கற்றை முழுவதையும் அவர் பார்த்துப் பார்த்துப் பல பிரதிகளை

காப்பிரைட்: கர்மவீர (கன்னடம்: 10-5-'48), ஹுப்ளி.

ஒதுக்கிவைத்துவிட்டு ஒன்றை மட்டும் பொறுக்கிக்கொண்டார்.

"பார்த்தாயா? இவன் உயர்ந்த கவிஞன். நல்ல குணமும் தீவிர யோசனையும் வருங்காலத்தைப்பற்றிய கவலையும் உள்ளவன். சிறந்த தீர்க்கதரிசி. ஆனால், பாவம்! கடனாலும் பசிப்பிணியாலும் மிகவும் நொந்தவன்" என்றார் கண்ணை மூடிக்கொண்டே.

"இதையெல்லாம் நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"எப்படி என்கிறீர்களே? சாமுத்ரிகா லட்சணங்களைக்கொண்டும் ஒரு மனிதனின் நடை, உடை, பாவனை, பேச்சு, பார்வைகளைக் கொண்டும் எப்படி அவனுடைய குணங்களை அறிந்துகொள்கிறோமோ, அதைப் போலவே அவன் எழுத்தைக் கொண்டும் அவற்றைத் தெரிந்துகொள்ளலாம். உள்ளத்தில் பொங்கும் எண்ண அலைகள் கவிதைகள் மூலம் எப்படி உருவாகின்றனவோ அப்படியே மனித வாழ்க்கையின் மேடு பள்ளங்களும் எழுத்துக்களின் மூலம் தெரியும். இது ஒரு சாஸ்திரம்" என்றார் அவர். பிறகு இருவரும் வெகு நேரம் வரையில் பேசிக்கொண்டிருந்தோம்.

மனிதன் தன் உள்ளத்தில் எழும் கற்பனைகளையும் சிந்தனைகளையும் கொண்டு உலகத்தையே ஒரு கணம் மெய்ம்மறக்கச் செய்துவிடுகிறான். இரண்டே வரிகளானாலும் சரி; பெரிய புராணமேயானாலும் சரி. கவிஞனின் உள்ளம் காகிதத்தின் மேல் எழுத்துக்களின் மூலம் தோன்றும் பொழுது, அதற்கும் எவ்வளவோ குண விசேஷங்கள் இருக்கின்றன. உலகத்தையே தனக்குள் இழுத்துக் கொள்ள விரும்புகிறவன் எழுத்துக்களை மட்டும் ஒன்றுக்கு ஒன்று படாமல் தனித்தனியாக வெகு கவனமாக எழுதுவான் என்றா எண்ணுகிறீர்கள்? எழுத்துக்களைத் தனித்தனியாக அழகாக எழுதவேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் எழவே எழாது. 'அங்க வங்க கலிங்கம்' என்ற ஐம்பத்தாறு தேசங்களையும் எப்படிச் சங்கிலியால் பிணைக்க அவன் விரும்புகிறானோ அதைப்போலவேதான் அவன் கையெழுத்தும் ஓடும். எழுத்துக்கள் தனித்தனியாக அழகாக இருக்கவேண்டும் என்று எண்ணங்கொண்டவனோ உலகத்தின் பகுதிகள் எல்லாம் தனித் தனியாக இருந்தால் அழகாக இருக்கும் என்றுதான் எண்ணுவான். இதைப்பற்றிச் சாஸ்திரம் எவ்வளவோ சொல்லுகிறது. சங்கிலி எழுத்தை அது கண்டிக்கிறது. அவ்விதம் எழுதுவோர் குறுகிய மனப்பான்மை உடையவர், அறிவில் தாழ்ந்தவர், சமயத்துக்கு ஏற்றபடி கொள்கைகளை மாற்றிக் கொள்பவர் என்று சொல்லுகிறது.

எழுத்துக்களை அழகழகாகக் குண்டு குண்டாக எழுதுவதோ, எழுத்துக்களின் உள் அங்காடியைப் பெரிதாக வைப்பதோ எழுதுபவர் தற்பெருமை நிறைந்தவர் என்று காட்டுகிறது. பெருமை அவர்களுக்குப் பிரியம். இரக்கம் குறைவு. பணத்தின் மேலேயே கண்; பிள்ளை மேல் இல்லை. தீர்மானமுள்ளவர்.

எழுத்துக்களை நோஞ்சலாக எழுதுவோர் அநேகமாய் உபாத்திமைத் தொழிலில்தான் இருப்பார்கள். வியாதியுடன் கஷ்டப்படுபவர்களே இப்படி எழுதுவார்கள் என்றும் ஒரு கொள்கை உண்டு. ஒரு வரிக்கும் மற்றொரு வரிக்கும்

நடுவில் கால் அங்குலத்துக்கு அதிகமாக இடைவெளி விட்டு எழுதுபவர் போலீஸ் உத்தியோகத்துக்கு உகந்தவர். தாட்சிண்யம் என்பது அவரிடம் துளியும் இராது. லஞ்சம் வாங்க அவர் அஞ்சமாட்டார். எது வந்தாலும் விடமாட்டார். நல்ல சங்கீத ரசிகராகவும் இருக்கலாம்.

எழுத்துக்களை இடது பக்கமோ வலது பக்கமோ சாய்த்து எழுதுவார்கள் பலர். வலது பக்கம் சாய்த்து எழுதுவோர் மிகவும் கோழைகளாகவும் பிறரிடம் முக தாட்சிண்யப்பட்டுப்பட்டுத் தயங்கும் சுபாவமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுடைய வாழ்க்கை மிகவும் சந்தோஷமாகவோ சுகமாகவோ இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. யாராவது ஏதாவது சொன்னால் அதை நம்பித் தம் உறவினரையே இவர்கள் பகைத்துக் கொள்ளலாம்; மனைவியுடன்கூடச் சண்டை சச்சரவு செய்யலாம். இவர்களுக்கு உள்ளத்தில் அன்பென்பதே இராது.

இடது புறமாகச் சாய்த்து எழுதுவோரைப் பார்ப்போம். அவர்கள் கற்பனை சக்தி நிறைந்தவர்கள். மனித உள்ளத்தின் ஆழத்திலிருந்தே கற்பனை எழுகிறது. மனித உள்ளம் தேகத்தில் இடது பக்கம் இருக்கிறது. உள்ளத்திலிருந்து கற்பனை ஊற்றுப் பெருகப் பெருக எழுதுகிறவனுடைய பேனா முனையும் எழுத்துக்களும் இடது பக்கமாகவே சாய்ந்துவிடுகின்றன. இப்படி எழுதுபவனுக்கு வெளுத்ததெல்லாம் பால். கண்டதே காட்சி. காக்கையைக்கூடக் குயிலாக இவன் வர்ணிப்பான். உயர்ந்த கலைஞன்.

அதற்கு அடுத்தது அழுத்தி எழுதும் எழுத்து. கால்வாங்கியிருப்பதையோ, எழுத்துக்கு ஒற்றுப் புள்ளி வைத்திருப்பதையோ கவனித்துப் பார்த்தால் அழுத்தி எழுதிய எழுத்தைக் கண்டுபிடித்து விடலாம். இந்த எழுத்து எழுத்தாளனின் குண தோஷங்களை முக்கியமாக எடுத்துக் காட்டுகிறது. இப்படி எழுதும் சுபாவமுள்ளவன் நல்ல காரியவாதி. வேலையிலும் விவாதத்திலும் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொள்வான், யாரையும் நிஷ்டூரமாகப் பேசுவான். நாக்கில் நயம் குறைவு.

எழுத்துக்களை மேலாகவோ மிகவும் தளுக்காகவோ எழுதுபவன் நல்லவன். சாது. பிறருக்கு ஒரு தீங்கும் நினைக்காதவன். குழந்தையைப் போன்ற உள்ளமுடையவன். இவன் என்றும் ஒரே தினுசாக இருப்பான். தன் சுகதுக்கங்களைச் சொல்லிக்கொள்ள யாராவது ஒருவர் அகப்பட்டால், அதுவே இவனுக்குப் பரமதிருப்தி.

கன்னட எழுத்து ஒவ்வொன்றுக்கும் தலையில் முண்டாசுபோன்ற ஒரு கொம்பு உண்டு. இந்தக் கொம்பு மனிதனின் அதிகப்படியான விவகாரங்களைக் காட்டும். எழுத்தின் தலை அளவுக்கு மீறிப் பெரியதாகவோ, கொம்பு அளவுக்கு மிஞ்சி நீளமாகவோ இருந்தால் அதைக் கவனிக்க வேண்டும். நீண்டு உயர்ந்து காற்றில் பறக்கும் முண்டாசுபோல் கொம்பை எழுதுகிறவனுக்கு மதுபானத்திலும் சூதாட்டத்திலும் விருப்பம் அதிகம். அவன் விவேகமில்லாதவன்; கடனாளி; உண்ட வீட்டுக்கு இரண்டு நினைப்பவன். எழுத்தின் தலையோ கொம்போ தாழ்ந்து தொங்கி எழுத்தோடு ஒட்டிக் கொண்டு இருந்ததோ, அதை எழுதியவன் முழுச் சோம்பேறி;

ஆளழகன்; கிணற்றுத் தவளை; எல்லோர் வாயிலும் புகுந்து புறப்படுபவன். இன்னும் எவ்வளவோ சொல்லலாம். ர,ம்,த, த்த, ட, ட்ட இவை போன்ற எழுத்துக்களை அடக்கமாக அழகாக எழுதாதவன் டாம்பீகப் பிரகிருதி; வாயாடி. ஷ போன்ற எழுத்தின் குறுக்குக் கோட்டை மிகவும் நீளமாக இழுப்பவன் எதற்கும் அஞ்சாதவன்; குள்ளநரி; காரணத்தைக் கேட்காமலும் வியாதியை அறியாமலும் சிகிச்சை செய்பவன். ப்பா, த்தா ஆகிய எழுத்துக்களின் தலையையும் சொம்பையும் ஒன்றோடொன்று படாமல் எழுதுபவன் உயர்ந்த ஞானி, சாது, கருணை நிறைந்தவன். இதற்கு நேர்மாறாக மற்றொன்றும் சொல்கிறார்கள். அதாவது மனைவி ஆட்டி வைக்கிறபடி அவன் ஆடுவானாம்.

மொத்தத்தில் இந்தக் கையெழுத்து ஆராய்ச்சிச் சாஸ்திரத்தின் மூலம் மனிதனின் தலையெழுத்தைக் கூட அறிந்து விடலாம்போல் தோன்றுகிறது. நம்பிக்கை இருந்தால் அவரவரும் அநுபவத்திலே இன்னும் பல விஷயங்களைக் கண்டு பிடிக்கலாம். ஜோதிடம் போல் இந்தச் சாஸ்திரத்தை ஆராயவும் சிலர் கிளம்பலாம். நாமும் அவர்களிடம் போய்ப் பலன் கேட்கலாம். புத்தி நுட்பமுள்ளவர்கள் சாஸ்திரத்தை அலட்சியம் செய்யாமல் எவ்வளவோ விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளலாம். கன்னட பாஷைக்கு 'டைப்' அடிக்கும் யந்திரம் வருவதற்கு முன்பு இந்த ரகசியத்தை எழுதிவிட வேண்டுமென்பது என் ஆசை. எழுதி விட்டேன். இனி உங்கள் பொறுப்பு.

எது சரி?

1. நச்சினார்க்கினியர்: (அ) ஒரு நாயனார் (ஆ) சோழநாட்டில் வாழ்ந்த ஒரு சாதியினர் (இ) தமிழ் இலக்கண இலக்கியங்களுக்குச் சிறந்த உரை வகுத்த உரையாசிரியர் (ஈ) பாண்டிய மன்னருள் ஒருவர்.

2. திருவானிலை: (அ) பசுத்தொழு (ஆ) கருவூரில் உள்ள சிவபிரான் திருக்கோயில் (இ) அரண்மனைவாயில் (ஈ) சாலநிலை.

3. திருமந்திரவோலை: (அ) மந்திரம் எழுதிய சுவடி (ஆ) ஒரு வகைக் காதணி (இ) சோழ அரசர் காலத்தில் இருந்த ஓர் உத்தியோகம் (ஈ) பெரிய ஆரவாரம்.

4. தும்மாயம்: (அ) கண்கட்டு வித்தை (ஆ) மாயை (இ) ஒரு கூட்டம் (ஈ) பருப்பும் வெல்லமும் கலந்த ஒரு சிற்றுண்டி.

5. முதுமொழிக்காஞ்சி: (அ) பாண்டிநாட்டில் உள்ள ஒரு நகரம் (ஆ) ஒரு மரம் (இ) ஒருவகை ராகம் (ஈ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

6. அம்போதரங்கம்: (அ) கலிப்பாவின் உறுப்புகளுள் ஒன்று (ஆ) பஜனைப்பாட்டு (இ) ஜலதரங்க வாத்தியம் (ஈ) ஓர் ஏரி.

7. பிசி: (அ) ஒரு பேய் (ஆ) விடுகதை (இ) சூடான பண்டம் (ஈ) பொடிபட்ட மலை.

இதுதான் சரி

1. இ. 2. ஆ. 3. இ. 4. ஈ.
5. ஈ. 6. அ. 7. ஆ.

ரஜாக்கர்கள்

சத்தியவான்

ஹைதராபாது ரஜாக்கர்களின் தொல்லை அதிகரித்துவிட்டதாகத் தினமும் செய்திகள் வருகின்றன. இந்த ரஜாக்கர்களை ஹைதராபாது ராணுவத்திலேயே சேர்த்துக் கொள்ளவும் நிஜாம் யோசித்து வருகிறாராம். இந்த ரஜாக்கர் யார்? இவர்களைக் கிளப்பி விட்டவர் யார்? நடத்துகிறவர் யார்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் இங்கே இருக்கிறது.

"இந்த ஹைதராபாது நம் இந்திய யூனியனில் சேராவிட்டால் பரவாயில்லை; மக்களுக்குப் பொறுப்பாட்சி வழங்காவிட்டாலுங்கூடப் பரவாயில்லை; ஆனால், அந்த ரஜாக்கர் படையை மட்டும் உடனே அடியோடு கலைத்தாக வேண்டும்" என்று இந்தியாவின் பிரதம மந்திரி தொடங்கிச் சாமான்ய மனிதன் வரைக்கும் இந்தியாவில் உள்ள அத்தனை பேரும் ஒருமுகமாகச் சொல்கிறார்கள். ரஜாக்கர் படை சமீபத்தில்தான் தோன்றியது. 'ரஜாக்கர்' என்றால் தொண்டர் என்று அர்த்தம். பொதுக்கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு உதவி புரிவது அவர்களின் வேலை. ஆனால், அந்த நிகழ்ச்சிகள் எப்போதோ வருகின்றன. ஆகையால், அவற்றுக்கு உதவுவது முழுநேர உத்தியோகம் அல்ல. ஒவ்வொரு நகரத்திலும் அரை டஜன் தொண்டர் படைகள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் ஏதாவது ஓர் அரசியல் கட்சியின் அங்கமாக இருக்கிறது. மஜ்லிஸ் இத்திஹாதுல் முஸ்லிமின் என்ற அரசியல் கட்சியின் அங்கமாக இருப்பது ரஜாக்கர் படை. காக்ஸார் படையின் உணர்ச்சியைப் பின்பற்றியே இந்த ரஜாக்கர் படை அமைந்திருக்கிறது. ஆனால் கம்யூனிஸ்டுகளே ரஜாக்கர்களுக்கு ராணுவ குருமார். கம்யூனிஸ்டுகளின் கொரில்லாப் போர் முறையைத்தான் இவர்கள் அநுஷ்டிக்கிறார்கள்.

இந்தப் படைக்கு எப்படி ஆள் சேர்க்கிறார்கள்? இதில் எவ்வளவு பேர் சேர்ந்திருக்கிறார்கள்? ஹைதராபாது முஸ்லிம்கள் தாங்கள் தேச பக்தர்கள் என்று பெருமையடித்துக்கொள்கிறார்கள்; ஆனால் அவர்கள் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் வகுப்புவாத வெறி பிடித்தவர்கள். என்றாலும் ராணுவ பலந்தான் கடைசியிலே வெற்றி பெறும் என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இந்த நாட்டை ராணுவரீதியாக எதிர்த்து ஹைதராபாத் வெற்றி பெறுவது துர்லபம். தவிர, தக்காண முஸ்லிம்கள் ஒருநாளும் சண்டையிட்டு அறியாதவர்கள். இதனால் ஒரு சமயம் ரஜ்வியே மனம் சோர்ந்துபோய், "உங்களுக்குச் சண்டை போடத் தைரியம் இல்லையே!" என்று அவர்களைத் தூற்றினார். மேலும், 100-க்கு 12½ விகிதம் இருக்கும் முஸ்லிம்கள், மற்ற வகுப்பினரையெல்லாம்

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்ரிகா (ஆங்கிலம்: 19-6-'48), 12, ஆனந்த சட்டர்ஜி லேன், கல்கத்தா.

மீறி, சண்டை போட முடியுமா? பணக்கார முஸ்லிம்கள் ராணுவ உடுப்புடன் வெளியே வரப் பயப்படுகிறார்கள். ஏழை முஸ்லிம்கள் மட்டும் தங்களுக்குப் பொருளாதார விமோசனம் தரும் எந்தத் திட்டமுமில்லாத ஒரு ஸ்தாபனத்துக்காகத் தங்கள் உயிரைக் கொடுக்க எப்படி முன்வருவார்கள்? என்றாலும், ஹைதராபாத மகாஜனங்களுக்கெல்லாம் கிலி உண்டாக்கவும் இந்திய யூனியனைத் திகைக்கச் செய்யவும் நிஜாம் விரும்பினார்.

உடனே காஸிம் ரஜ்விக்கு ஆஞ்ஞை பிறந்தது. பாவம்! காஸிம் ரஜ்வி வேண்டுகோளுக்கு மேல் வேண்டுகோள் விடுத்தார். காது கொடுப்போரைக் காணோம். அதன் மேல் வெளிக்கிளம்பியது சர்வவல்லமையுள்ள ரூபாய். ரஜாக்கர்கள் பயிற்சி பெறும் காலத்தில் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் சம்பளம். அதற்குப் பின்பு 'ட்யூடி'யில் இருக்கும்போது இரண்டு மடங்கு சம்பளம். சர்க்கார் வேலையில் இருப்பவர்களுக்கு இந்தச் சம்பளத்தோடு கூட, 2 அல்லது 4 மணி நேரம் உத்தியோகத்திலிருந்து லீவும் கிடைக்கிறது. இது நல்ல தூண்டில் அல்லவா? அப்படியிருந்தும், போதிய ஆள் சேரவில்லை. ஏப்ரல் மாதம் சகல ஜில்லாத் தலைநகர்களிலும் ஏககாலத்தில் நடந்த முதல் அணிவகுப்பில் மொத்தம் 30 ஆயிரம் பேர்களுக்குமேல் இல்லை. ஆனால், அவர்கள் 2 லட்சம் பேருக்கு மேல் இருந்ததாக முஸ்லிம் பத்திரிகைகள் பொய்க்கணக்கு வெளியிட்டன. கடைசியாக நிஜாம் சர்க்காரே ரஜாக்கர் படைக்குப் பகிரங்கமாக உதவி செய்ய முன்வந்துவிட்டது. எங்கெங்கே திறந்த வெளி உண்டோ அங்கெல்லாம் - சர்க்கார் கட்டிடங்களிலுங்கூடத்தான் - காலையிலும் மாலையிலும் ரஜாக்கர்களுக்குப் பயிற்சியளிக்கத் தொடங்கிவிட்டார்கள். சின்னஞ்சிறு குழந்தைகள் முதல், 50 - வயதுக் கிழவர்கள் வரையில் யாரையும் ரஜாக்கர் படையில் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இத்தனை வேலையும் ரஜாக்கர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்டவே நடக்கிறது. இன்று அவர்களின் எண்ணிக்கை லட்சத்துக்குச் சிறிது அதிகமாயிருக்கும். முகமூடியணிந்த முஸ்லிம் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முகமூடிகளை உதறிவிட்டு அவர்களும் ஒரு நாள் வெளியே வருவார்களானால், வேடிக்கையாகத்தான் இருக்கும்!

ரஜாக்கர்களிடம் போதிய ஆயுதம் இல்லை. ஏதோ சொற்ப ஆயுதங்கள் திருட்டுத்தனமாக உள்ளே வந்து கொண்டிருக்கின்றன. பெரும் பகுதி ஆயுதங்களை உள்ளுக்குள்ளே தயாரிக்கிறார்கள். ஆனால், இன்று எல்லா ரஜாக்கர்களும் துப்பாக்கி வைத்திருக்கவில்லை. வாள், ஈட்டி, கோடாலி இந்த ஏதாவது ஒன்று இருந்தால் அவர்களுக்குப் போதும். நாட்டுப்புறத்தில் செய்த துப்பாக்கிகளைப் பலர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ராணுவ நடவடிக்கைகளுக்கு அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை. ஆனால், முஸ்லிம் அல்லாத பிற மக்கள் கட்டுப்பாடில்லாமல் நிராயுதபாணிகளாய்க் கிலிபிடித்துக் கிடக்கிறார்கள் அல்லவா, அவர்களை எதிர்ப்பதற்கு ரஜாக்கர்களிடம் உள்ள ஆயுதங்கள் போதும்.

ரஜாக்கர்களின் எண்ணிக்கையும் பிரமாதமாக இல்லை; அவர்களிடமுள்ள ஆயுதங்களும் அற்பம். இப்படியிருந்தும், சம்ஸ்தானத்தில் ஒரு கோடியே நாற்பது லட்சம்

உள்ள இதர மக்களின் வாழ்க்கையைத் துன்பமயமாக்க அவர்களால் எப்படி முடிகிறது? எப்படி என்ருல், அவர்களைப் போலீஸாரும், ராணுவத்தினரும், சர்க்காரும் ஆதரிக்கிருர்கள். கம்யூனிஸ்டுகள் கிளப்பிவிட்ட வர்க்கப் பகைமையும் அவர்களுக்கு உதவியாயிற்று.

ஏற்கனவே கம்யூனிஸ்டுகளின் அதிக்கிரமத்துக்கு ஆளாகித் தத்தளித்துக்கொண்டிருந்த கிராமங்களுக்குள் ரஜாக்கர்கள் நுழைந்தார்கள். தங்கள் கண்ணில் எதிர்ப்பட்டவரையெல்லாம் பாரபட்சம் இல்லாமல் தண்டித்தார்கள். பின்னுல் பிதார் ஜில்லாவில் நுழைந்தார்கள். அங்கே ஹைதராபாது கல்விமந்திரியின் கட்சிக்குச் சொந்தமான தீண்டாவகுப்புத் தலைவர்கள் சிலர் இருந்தார்கள். அவர்கள் கிளப்பிவிட்டிருந்த வகுப்புக் குரோத விஷத்தை ரஜாக்கர் பயன்படுத்திக் கொண்டார்கள். ஜாதி ஹிந்துக்களைக் கொள்ளையடிக்கவும் படுகொலை செய்யவும் அவர்களின் வீடுகளுக்குக் கொள்ளி வைக்கவும் தீண்டாவகுப்பினர் வெகு சுலபமாகத் தயாராகிவிட்டார்கள். இந்தச் சந்தடியில் குண்டர்களெல்லாம் ரஜாக்கர்கள் ஆகிவிட்டார்கள். குண்டர்கள் முஸ்லிம்களாக இருந்தால், பட்டப்பகலிலே ரஜாக்கர்களாக வருகிருர்கள்; மற்ற வகுப்பினராக இருந்தால், நள்ளிரவிலே ரஜாக்கர்களாக வருகிருர்கள்.

ஒடபார்த்தியில் காஜா பாட்சா என்ற ஒரு சிறு ஜாகீர்தார் இருக்கிருர். அவர் தமக்குச் சொந்தமான 300 ஏக்கர் நிலத்தை மடப்பள்ளி யோகரெட்டி என்பவர் ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதாக ஒரு வழக்குத் தொடர்ந்தார். அது ஹைக்கோர்ட்டில் ஆகஸ்டுமீ 5-உ தோற்றுப் போய்விட்டது. ஒடபார்த்தி, மடப்பள்ளி இரண்டும் அடுத்தடுத்து இருக்கும் கிராமங்கள்; நலகொண்டா ஜில்லாவைச் சேர்ந்த பொங்கிர் தாலுக்காவில் உள்ளவை. தமது வழக்குத் தோற்றதும், ஜாகீர்தார் தட்சணமே ஒரு வேலை செய்தார்; அதாவது ரஜாக்கர் படை ஒன்றை அமைக்கத் தொடங்கினுர். ஒரு லாரி, ஒரு ஜீப், ஒரு மோட்டார் சைக்கிள், இரண்டு ரைபிள், ஆறு ‘கண்ட்ரிமேட்’ துப்பாக்கிகள், ஏராளமான ஈட்டிகள், கோடாலிகள் ஆகிய ஆயுதங்களைச் சேகரித்தார். இருபது அராபியர், சில ரோஹில்லாக்கள், ஒரு டஜன் உள்ளூர்க் குண்டர்கள் இவர்களை யெல்லாம் சேர்த்துக் கொண்டார். நாள் ஒன்றுக்கு இரண்டு கிராமங்களைக் காலையில் ஒன்று மாலையில் ஒன்ருகப் படையெடுத்துத் தாக்கித் திக்விஜயம் செய்து வருகிருர். கிராமங்களிலோ, அரசியல் பிரக்ஞையுள்ள தொண்டரே இல்லை. ஏனென்ருல், கம்யூனிஸ்டுத் தொண்டர்கள் ரஜாக்கருக்குப் பயந்து ஓடிவிட்டார்கள். பிறகட்சித் தொண்டர்களைக் கம்யூனிஸ்டுகள் ஓட்டிவிட்டார்கள். யோக ரெட்டியையும் மடப்பள்ளிக் கிராமத்தையுமே காஜா பாட்சா முதலில் களப்பலி கொண்டார். இப்போது ரஜாக்கர்களின் படைத் தலைவராகையால், பாட்சா என்ன அக்கிரமம் வேண்டுமானுலும் செய்யலாம். அவரை ஏன் என்று கேட்போர் இல்லை. போலீஸ்காரர்களோ ரஜாக்கர் படைத் தலைவர்களுடன் ஒத்துழைக்கிருர்கள்; அவர்களுக்குக் கீழேயும் சில சமயம் வேலை செய்கிருர்கள். ஆகவே சட்டமோ பொதுஜன அபிப்பிராயமோ காஜா பாட்சாவின் வேலைக்குக் குறுக்கே நிற்க முடியாது. அவர் இன்னெரு தந்திரமும்

செய்திருக்கிறார். அதாவது, தமது பிரதேசத்துக்குள் வேறு எந்தக் கொள்ளைக்கார ரஜாக்கரும் நுழைய முடியாதபடி, பொங்கிர் தாலுக் காவை நாலு மண்டலங்களாகப் பிரித்து வைத்துக்கொண்டு வேலை செய்கிறார்.

ஆனால், இதே ரஜாக்கர்களுக்குச் சில இடங்களில் தோல்வி வந்துவிடு கிறது. அங்கேயெல்லாம் இவர் களுக்கு உதவி செய்யப் போலீஸார் தட்சணமே ஓடி வருகிறார்கள். ஹைதராபாது நகரத்துக்குள் ஆலி யாபாத் என்றபிடாகை இருக்கிறது. அதில் சென்ற ஜூலை மீ ஹிந்துக் களைச் சில முஸ்லிம் குண்டர்கள் போய்த் தாக்கினார்கள். 25-ஹிந்துக் களே இருந்துகொண்டு, 75-குண்டர் களை எதிர்த்து அடித்து ஓட ஓட விரட்டிவிட்டார்கள். பலருக்குக் காயம். உடனே போலீஸார் வந்து சேர்ந்தார்கள். வீடு வீடாகப் புகுந்து சோதனை போட்டார்கள். சட்டப் படி தடையில்லாத ஈட்டிகளையும் தடிகளையுங்கூடக் கைப்பற்றிக் கொண்டு சென்றார்கள். பின்பு ஏராளமான வாலிபர்களைக் கைது செய்தார்கள். இதன் மேல் தொண் டர்களெல்லாம் இந்தப் பிரதேசத் தைவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். 1942-ஆம் வருஷ இயக்கத்தின் பின்னணியில் வேலை செய்த காங்கி ரஸ் தொண்டர்கள்கூட இந்திய யூனியனுக்குள் ஓடிவிட்டார்கள். பிரதேசவாசிகளுக்கு ஆயுதமும் இல்லை; தலைவரும் இல்லை. ஆலியா பாது பாழாயிற்று. ரஜாக்கர்கள் மீண்டும் வந்து புகுந்துகொண்டார் கள். இதைத்தான் போலீஸ் உதவி என்று நான் சொல்கிறேன். ரஜாக் கர்கள் வெற்றி பெற்றால், போலீ ஸார் சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்க்கிறார்கள்; தோற்றால் அவர் கள் சட்டத்தைக் காற்றில் பறக்க விட்டு, ரஜாக்கர்களின் தோல்வியை வெற்றியாக மாற்றித் தருகிறார்கள்.

சமீப காலத்தில் ரஜாக்கர்களின் அட்டகாசம் எங்கே பார்த்தாலும் பரவிவிட்டது. இவர்களின் உபத்தி ரவத்துக்குத் தப்புவதற்காக, கிராம வாசிகள் ஒன்று கூடி வழி கண்டு பிடிக்க வேண்டியதா யிருக்கிறது. கோஹிர் என்ற நகருக்கு அருகே காஞ்சாவரம் என்ற கிராமம் இருக்கி றது. அந்த ஊர் முஸ்லிம்களும் ஹிந் துக்களும் அப்படி ஒரு வழி கண்டு பிடித்தார்கள். ஏப்ரல் 18-ஆம் உ ஞாயிற்றுக்கிழமை அவர்கள் சந்தை கூடும் நாள். அன்று ரஜாக்கர்கள் வரப்போகிறார்கள் என்று முன்ன தாகவே அவர்களுக்குத் தெரியும். ரஜாக்கர்கள் வந்ததும், அவர்க ளிடம் கிராமவாசிகள் சரண மடைந்து, "எங்களை ஒன்றும் செய் யாமல் விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சினார்கள். "ஏராளமாய்ப் பணம் கொடுங்கள். உங்களைச் சும்மா விடு கிறோம்" என்றார்கள் ரஜாக்கர்கள். "எங்களிடம் அவ்வளவு பணம் ஏது?" என்று கையை விரித்தார்கள் கிராமவாசிகள். "அப்படியானால் நீங்கள் சும்மா இருங்கள்" என்று சொல்லிவிட்டு, ரஜாக்கர்கள் சில சில பேர் சேர்ந்த டஜன் கோஷ்டிக ளாகப் பிரிந்தார்கள்; வீடுகளை யெல் லாம் கொள்ளையடிக்கத் தொடங்கி னார்கள். தங்கள் சொந்த வண்டி களிலும், கிராமத்தில் அகப்பட்ட வண்டிகளிலும் சாமான்களையெல் லாம் ஏற்றினார்கள். அலமாரி களையும் இரும்புப் பெட்டிகளை யுங்கூட மிச்சம் வைக்கவில்லை. ரஜாக்கர்கள் இப்படித் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு கிளம்பப் போகிற சமயத்தில், கிராம வாசிகள் தங்களுக்குள் ஏதோ சங்

சேதம் செய்துகொண்டார்கள். உடனே எல்லோரும் திடீரென்று பாய்ந்து ரஜாக்கர்களின் ஆயுதங்களையே தூக்கிக்கொண்டு அவர்களைத் தாக்கினார்கள். நிராயுதபாணிகளான கிராமவாசிகள் இப்படித் தங்களைத் தீவிரமாகத் தாக்குவார்கள் என்று ரஜாக்கர்கள் எதிர்பார்க்கவே இல்லை. 13-ரஜாக்கர்கள் மாண்டார்கள். மற்றவர்கள் காயம் பட்டுத் தப்பியோடினார்கள்.

இந்த நாட்களில் சிந்தலபூரி ராம ரெட்டி புரிந்த தீரச்செயல் சரித்திரத்தில் ஏறத்தக்கது. நலகொண்டா ஜில்லாவில் உள்ள ரேணிகுண்டா இவருடைய கிராமம். போலீஸாரையும் ரஜாக்கரையும் எதிர்த்து இரண்டு முறை தமது கிராமத்தை இவர் தற்காத்தார். போலீஸார் பழி வாங்க எண்ணங் கொண்டார்கள். 6 லாரி நிறைய ரிஸர்வ் போலீசாரையும் ராணுவ வீரர்களையும் 3 கார்கள் நிறைய ரஜாக்கர்களையும் அழைத்துக்கொண்டு, அடிஷனல் கலெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் எல்லாருமாகக் கிராமத்தை வந்து சூழ்ந்துகொண்டார்கள். தாமும் தம்முடைய 16 வயது மகனுமாக வீட்டிலே இருந்து கொண்டு, ரெட்டியார் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டார். ரஜாக்கர், போலீஸ்காரர், ராணுவவீரர் இவர்களில் ஒருவர்கூடத் தம் வீட்டுக்கு அருகே நெருங்க முடியாதபடி சுட்டார். காலை 6 - மணியிலிருந்து மத்தியான்னம் 2 - மணிவரைக்கும் 53-பேரை அவர் இப்படிச் சுட்டுத் தள்ளினார். இந்தச் சமயத்தில் ஒரு போலீஸ்காரன் மரத்தின்மேலேறி இவர் வீட்டு ஜன்னல்வழியாக இவரைக் குறி பார்த்துச் சுட்டான். வெயில் கொளுத்திக்கொண் டிருந்ததால், காற்றுக்காக அந்த ஜன்னலை ரெட்டியார் திறந்து வைத்திருந்தார். என்ன துரதிருஷ்டம்! ரெட்டியார் விழுந்த பின்பு, மேலும் இரண்டு பேரை அவருடைய மகன் சுட்டுத் தள்ளினான்.

இந்த மாதிரி இன்னும் பல சம்பவங்களைக் கூறலாம். ஹைதராபாத்தின் எல்லையோரத்தில் உள்ள கிராமவாசிகள் இதைவிடக் கடுமையாக எதிர்க்கிறார்கள். ஆகவே, "நாங்கள் எல்லையோரத்துக்கு மட்டும் போகவேமாட்டோம்" என்று ரஜாக்கர்களே - ஏன், அராபியர்கூடத் தான் - பல முறை மறுத்திருக்கிறார்கள். ரஜாக்கர் இயக்கத்தை ஒரு முறைகிளப்பி விட்டுவிட்டால், பிறகு அது தானாகவே இயங்கத் தொடங்கி விடுகிறது. இன்று ரஜாக்கர்கள் தங்களால் செலவழிக்கவே முடியாத அளவு பணத்தைப் பெற முடிகிறது. மிகக் குறைவாக மதிப்பிட்டாலும், ஹிந்துக்கள் இழந்த சொத்தின் மதிப்பு 60 - கோடி ரூபாய் இருக்கும். அதில் பாதி இந்தப் 'பிண்டாரி'களின் கைக்கு நேரே போய்ச் சேர்ந்திருக்கிறது. 'ட்யூட்டி'யில் இருக்கும் ரஜாக்கர்கள் இப்போது படிப்பணம் கேட்பதில்லை.

யுத்தம் வந்தாலும் சரி, அதன் முடிவில் ஒரு ராஜி ஏற்பட்டாலும் சரி, இந்த ரஜாக்கர்கள் என்ன செய்வார்கள்? யுத்தத்தில் இந்திய யூனியனை எதிர்க்க ராணுவ ரீதியில் ரஜாக்கர்கள் எவ்விதமும் பயன்படமாட்டார்கள். ஆனால், யுத்தகளத்துக்குப் பின்னால் இருந்துகொண்டு, பஞ்சாப், நோவாகாலி கலகங்கள் போன்ற பல கலகங்களைப் புரிய அவர்களால் முடியும். ஊரைப் பொசுக்கிப் பொட்டலாக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்க நிஜாம் விரும்பினால், அதற்கு ரஜாக்கர்கள்

மெத்தவும் ஏற்றவர்கள். யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டால், கம்யூனிஸ்டுகளோடு ரஜாக்கர்களும் சேர்ந்துகொண்டு சில வருஷ காலம் உள்நாட்டுக் கலகம் புரிவார்கள். நிஜாமுக்கும் இந்திய யூனியனுக்கும் இன்னமுங்கூட ஒரு ராஜி ஏற்பட்டாலும் ஏற்படலாம். அப்படி ராஜி ஏற்பட்டால், சம்ஸ்தானமெங்கும் வகுப்புக் கலவரங்களைக் கிளப்பிவிட ரஜாக்கர்களைக் கம்யூனிஸ்டுகள் தூண்டிவிடுவார்கள். அதனால் முஸ்லிம்களுக்கே அதிகக் கஷ்டம் நேரும். ஹைதராபாது மக்களுக்குத் துளியும் நஷ்டமில்லாமல் ரஜாக்கர்களை ஒழிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. நிஜாம் மனம் வைத்து, மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்து ரஜாக்கர் படையைக் கலைப்பதுதான் அந்த வழி. நிஜாம் இதைக் கடைப்பிடிப்பாரா? ரஜாக்கர்கள் இன்றைத் தினம் முஸ்லிமல்லாத பிற மக்களுக்கே சத்ருக்களாக இருக்கலாம். ஆனால், இறுதியிலே அவர்கள், முகலாயப் பெருமையின் கடைசி எச்சமான நிஜாம் ஆட்சிக்கே உலை வைத்துவிடப் போகிறார்கள்.

உட்கார்த்திவிடுதல்

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஒரு கூட்டத்துக்குச் சென்றபோது, அங்கு முன்பே வந்து உட்கார்ந்திருந்த சிலர் அவர்களுக்கு இடம் கொடுக்க எழுந்தார்கள். "உட்காருங்கள்" என்று உபசரித்தார்கள். "நீங்கள் இருங்கள்; நான் வேறிடத்துக்குப் போகிறேன்" என்று ஐயரவர்கள் சொன்னார்கள். "இல்லை, இல்லை; இப்படியே உட்காருங்கள்" என்று அவர்கள் சொல்லவே, "சரி, எப்படியாவது என்னை உட்கார்த்திவைத்துவிட வேண்டும் என்பது உங்கள் ஆசை போலிருக்கிறது" என்று சொல்லி அமர்ந்தார்கள். ஒருவரைப் பேச்சின்றியும் செயலின்றியும் செய்வதை 'அவனை உட்கார்த்தி வைத்துவிட்டான்' என்று சொல்வது உலக வழக்கு.

திருந்தாத குரங்கு

பால்டிமூர் என்ற இடத்தில் உள்ள ஒரு மிருகக் கண்காட்சிச் சாலையில் சார்லி என்று ஒரு குரங்கு இருக்கிறது. அது தன் கூண்டில் உள்ள மற்றக் குரங்குகளையெல்லாம் சதா அடித்து ஹிம்சித்துக்கொண்டிருந்தது. இந்தக் குரங்கின் யுத்த வெறியை ஒழிப்பதற்காகக் கண்காட்சி அதிகாரிகள் இதை வில்டன் என்ற ஒரு முள்ளம்பன்றிக் கூண்டுக்குள் போட்டார்கள்.

சார்லி இன்னமும் யுத்தம் புரிந்துகொண்டுதான் இருந்தது. வில்டனை ஒரு முறை தாக்கி அதன் ஒரு முள்ளைப் பிடுங்கிக்கொண்டு ஒரு மூலைக்குப் போய்விடும். மறுபடியும் தாக்கி இன்னொரு முள்ளைப் பிடுங்கிக்கொண்டு ஓடிவிடும். இப்படியாக ஒரே நாளில் வில்டனின் எல்லா முள்ளையும் சார்லி பிடுங்கிவிட்டது. வில்டனை அதிகாரிகள் அடுத்த நாள் சமாதி செய்துவிட்டார்கள்.

—'காப்பர்ஸ் வீக்லி'

திரட்டு

குதிரையும் கொள்ளும்

ஒரு குதிரைக்காரன் இருந்தான். குதிரையின் எஜமான் கொடுக்கும் கொள்ளிலே பாதியை இவன் திருட்டுத்தனமாய் விற்றுப் பணத்தை எடுத்துக்கொள்வான். என்றாலும், பார்வைக்குக் குதிரை பளபளவென்று இருப்பதற்காகப் பலமணி நேரம் அதன் உடம்பைத் தேய்த்து நகாசு செய்துகொண் டிருப்பான். குதிரைக்கு இது பிடிக்கவில்லை. "இந்தாப்பா, நான் பளபளப்பாக இருப்பதற்கு இவ்வளவு நகாசு எதற்கு? இதில் பாதி போதும். கொள்ளை மாத்திரம் முழுவதும் கொடுத்துவிடு" என்றது.

—ஈசாப்பு கதை.

பிரசங்க வெற்றி

ஒரு வர்த்தகர் தமது தொழில் சம்பந்தமாக அடிக்கடி பிரசங்கங்கள் புரியவேண்டி யிருந்தது. அவர் பல விகடத் துணுக்குகளைச் சொல்லுவார். சபையோர் ரசிப்பதில்லை. இது அவருக்குப் பெரிய மனக்குறை. அவர் ஒரு நாள் பேசும் போது, பைபிளிலிருந்து ஒரு மேற்கோள் கூற விரும்பினர். ஞாபகம் வரவில்லை. சட்டை ஜேபியைத் துழாவினர். பிரசங்கியின் இந்த அவஸ்தையைக் கண்டு, சபையோர் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இந்தத் துரதிருஷ்டத்திலிருந்து வர்த்தகர் ஒரு ரகஸ்யத்தை அறிந்துகொண்டார். அதாவது ஜனங்களைத் தம் வாக்கைக் கேட்டுச் சிரிக்கச் செய்வதைவிடத் தம்மைக் கண்டே சிரிக்கச் செய்வது சுலபம் என்று அறிந்தார். இது முதல் தமது மேற்கோளை மறந்து ஜேபியைத் துழாவுவது போல் எப்போதுமே நடிக்கத் தொடங்கினர். மேலும் சில சமயம் மேற்கோளை வேண்டுமென்றே பிழைபடச் சொல்லுவார். இவற்றை லெல்லாம் சபையோர் ஓயாமல் சிரித்தார்கள். வர்த்தகர் இவ்வாறு தம் சொந்தக் கௌரவத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்ததன் மூலம், மக்களின் அன்பைக் கவர்ந்த பிரசங்கியாகிவிட்டார்!

—டை வெல்ட்வாசே, ஜுரிச்.)

இதில் பயம் ஏன்?

ஐயோ மனிதனே, உன் காதலியின் இதழ்களிலே தூய, அமைதியான, கவடற்ற முத்தத்தைப் பதிக்க உன்னால் முடியாதா? மனத்தில் வெட்கத்தோடு, உலகத்தாரிடம் பயத்தோடு, மறைவாகப் பதுங்கிப் பயங்கொள்ளியாகி நீ பெண்ணைக் காதலிக்கிறாயே! பசிதாகங்களைப்போல, கனவையும் விழிப்பையும்போல, காதலும் இயல்பானது; அழகானது; ஜீவன் நிரம்பியது. மனிதனே, பறவைகளிடமும் மிருகங்களிடமும் காதற் கலையைக் கற்றுக்கொள். ஆணும் பெண்ணும் உள்ளங்கலப்பது புண்ணியதீர்த்தம் போன்றது.

—ஸுமித்திராநந்தன் பந்த், 'மாதுரி'.

குழந்தைகள் குறும்பு

நாலு வயதுதான் இருக்கும் சங்கருக்கு. ஆனாலும் அபார சூடிகை. இவன் அக்காள் ஹேமாவுக்கு ஆறு வயது. அவளைவிட இவன் அதிகச் சமர்த்துத்தான். ஹேமாவுக்கு அவள் பாட்டி மிகுந்த செல்லம் கொடுத்துவந்தாள். பாட்டி எங்கே போனாலும் அவளோடு கூடவே கிளம்பிவிடுவாள் ஹேமா. ஆனால், அம்புலுமாமி அகத்துக்கு மட்டும் ஹேமா போகவே மாட்டாள். அதற்குக் காரணம் அம்புலு மாமி அகத்தில் இருந்த ஒரு பெரிய நாய்தான்.

ஒரு நாள் பாட்டி எங்கேயோ வெளியில் போய்விட்டாள். ஹேமா அப்போது தூங்கிக்கொண்டிருந்ததால், அவளை வீட்டிலேயே விட்டுவிட்டுப் போனாள். ஆனால், பாட்டி போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஹேமா விழித்துக்கொண்டாள். பாட்டியைக் காணோம் என்று தெரிந்ததும் அவள் பெரிதாக ராகம்போட்டு அழ ஆரம்பித்துவிட்டாள்!

அம்மாவும் அப்பாவும் எவ்வளவு சமாதானம் செய்தும் அவளுடைய அழுகை ஓயவேயில்லை.

அந்தச் சமயத்தில் குடுகுடுவென்று அங்கே ஓடி வந்தான் சங்கர். "ஏமா, என் அயறே? பாட்டி தா அம்புலு ஆத்துச்குப் போத்துதாளே'' என்று கூறினான். ஹேமா அதைக் கேட்டாளோ இல்லையோ உடனே அவளுடைய அழுகை சட்டென்று நின்றுவிட்டது.

—ராஜம் ராமமூர்த்தி, தியாகராயநகர்.

* * *

சிறுவன் கோபு பண்ணுகிற விஷமத்தை அவன் தாயாரால் சகிக்க முடியவில்லை. "அடே கோபு, நீ இப்படியெல்லாம் பிடிவாதம் பிடித்து அடம் பண்ணினால், நான் என்ன செய்வேன் தெரியுமோ? அதோ போறான் பாரு ஒரு போலீஸ்காரன்; அவனைக் கூப்பிட்டு அவனண்டை உன்னை ஒப்பிச்சிடுவேன். அவனைக் கூப்பிடட்டுமா?'' என்று அவள் மிரட்டினாள்.

கோபு கொஞ்சங்கூடப் பதறவில்லை. "ஓ! கூப்பிடு, கூப்பிடு. அப்பா சைக்கிளுக்கு லைசென்ஸ் வாங்காததை நான் அவன்கிட்டச் சொல்லிப்புடறேன்'' என்றான்.

தாயார் 'கப் சிப்' என்று வாயைப் பொத்திக்கொண்டு உள்ளே போய் விட்டாள்.—வி. ராஜப்பா, பொள்ளாச்சி.

எங்கள் ஊருக்கு ஒரு தாத்தா புதிதாக வந்திருந்தார். அவரும் நானும் என் நாலு வயதுத் தம்பியும் உலாவச் சென்றோம். போகிற வழியில் இருந்த குளத்தைக் காட்டி "இது ரொம்ப ஆழமா?" என்று தாத்தா கேட்டார்.

"ஆம், ஆழந்தான்" என்று நான் சொன்னேன்.

அப்பொழுது என் தம்பி, "இல்லே, தாத்தா. இந்தக் கொலம் ஆழமேயில்லே" என்றான். "அது ஆழமேயில்லையா? உனக்கு எப்பி



டிடா தெரியும்" என்று நான் அதட்டிக் கேட்டேன். அதற்கு அவன், "தெரியாதோ? நானு முந்தி இங்கே வந்தப்ப என் பக்கத்திலே ஒரு சின்னூண்டு வாத்து வந்துச்சு. தண்ணிலே இறங்கிச்சு. நடுத்தண்ணிக்குப் போயிடிச்சு. மூங்கவேயில்லே. அதான் கொலம் ஆழமேயில்லேன்னு தெரிஞ்சுக்கிட்டேன்" என்றான் தம்பி.

—டி. கறுப்பையா, மதுரை.

* * *

இளந் தம்பதிகள். குழந்தை லலிதாவைத் தாயார் தன் மடியில் வைத்துச் சீராட்டிக்கொண் டிருந்



தாள். தந்தை பக்கத்திலே நின்று குழந்தையைக் கொஞ்சினர்.

தந்தை: லல்லு, உனக்கு என்னைத்தானே ரொம்பப் பிடிக்கிறது?

குழந்தை அம்மாவின் முகத்தைப் பார்த்தது. பேசவில்லை.

தாய்: லல்லு, உனக்கு என்னைத்தானே ரொம்பப் பிடிக்கிறது?

குழந்தை அப்பாவின் முகத்தைப் பார்த்தது. பேசவில்லை.

தாயும் தந்தையும் இதோடு விடவில்லை. "என்னைத்தானே?" "என்னைத்தானே?" என்று குழந்தையை நச்சரித்துக்கொண்டேயிருந்தார்கள்.

இந்தத் தொல்லை தாளாமல் குழந்தை திடுக்கென்று எழுந்தது. குடுகுடு என்று ஒரு மூலைக்கு ஓடியது. அங்கே கிடந்த மரப்பாச்சியை எடுத்து மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டே, "உன்னைத்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கிறது" என்றது.

—டி. ஆர். பாலசுந்தரம், பாலக்காடு.

இன்று மூன்று தேசீய கீதங்களைப் பாடிவருகிறார்கள்.
அவற்றில் எதுவும் இன்னும் நிச்சயமாகவில்லை.

நமது தேசீய கீதம்

தௌலத்ராம் பரசுராம்

எது நமது தேசீய கீதம் என்பது பற்றி அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள். மூன்று கீதங்களுக்குள் இப்போது போட்டி. அவற்றை நாம் ஆராய்வது நல்லது. அவை வருமாறு: (1) 'வந்தே மாதரம்' (தாயே, நமஸ்கரிக்கிறேன்); (2) 'ஜன கண மன அதிநாயக ஜயஹே' (மக்களின் மனத்துக்கெல்லாம் நாயகனே, வெற்றி பெறுவாயாக); (3) 'ஸாரே ஜஹான்ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா' (உலகத்திலேயே சிறந்தது நம் ஹிந்துஸ்தான்). இந்த மூன்றையும் இன்று உற்சாகமாகப் பாடிவருகிறார்கள். ஆனால், இவற்றில் எதுவும் சகல சந்தர்ப்பங்களுக்கும் முழுவதும் பொருத்தமுள்ளதாக இல்லை. என்னவாவது சில குறைகள் இவற்றில் இருக்கின்றன.

'வந்தே மாதரம்' கீதத்தை இயற்றியவர் காலஞ் சென்ற பங்கிம் சந்திர சட்டர்ஜீ. அவர் பிரபல வங்காளி நாவலாசிரியர். தமது 'ஆனந்தமடம்' என்ற நாவலில் இதை அவர் இணைத்திருக்கிறார். நாவலில் காண்கிறபடி, கிழக்கிந்தியக் கம்பெனியாரின் காலத்தில் ஒரு கோஷ்டி சந்நியாசிகள் தங்கள் கூட்டத்தில் இந்தக் கீதத்தைப் பாடுகிறார்கள். கடைசியில் அந்நியர்களைப் படைகொண்டு எதிர்க்க ராணுவ கீதமாகவும் இதை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். தேசீய கீதத்துக்குத் தேவையான ஆர்வமும் உணர்ச்சி வேகமும் இந்தக் கீதத்தில் இல்லை. சாந்தியே இதில் நிறைந்திருக்கிறது. வளம் பெருகிய தாய் நாடு என்று இது நாட்டைப் பிரமாதமாய்ப் புகழ்கிறது. இதன் முதல் எட்டு வரிகள் சம்ஸ்கிருதம். மீதி வரிகள் வங்காளி. பாஷாரீதியாகப் பார்த்தாலும், இதை இந்தியா முழுவதும் பாட முடியாது. சம்ஸ்கிருதத்தையும் வங்காளியையும் இந்திய மக்களில் மிகச் சிறு பகுதியினரே புரிந்துகொள்ளுவார்கள்.

'ஜன கண மன' கீதத்தை டாக்டர் ரவீந்திரநாத டாகுர் வங்காளியில் இயற்றியிருக்கிறார். ஆகையால் இதையும் இந்தியா முழுவதிலும் உள்ள மக்கள் பாட முடியாது. கவிஞரே இதைப் பாட வேண்டிய மெட்டை அமைத்திருக்கிறார். 'வந்தே மாதரத்'தைப் போலவே இதுவும் சாந்தி நிறைந்த ஒரு புகழ்மாலை தான். இந்தக் கீதம் மக்களிடையிலே பெரிதும் பரவியிருப்பது உண்மை. ஆனால், சாந்தியற்றுச் சஞ்சலம் நிரம்பிய இந்த நாளிலே இது பொருத்தமாயில்லை.

ரவீந்திரநாத டாகுர் இன்னொரு தேசீய கீதமும் இயற்றியிருக்கிறார். 'அயி புவனமன மோஹினி' (உலகோர் மனத்தையெல்லாம் கவரும்

காப்பிரைட்: நியூ டெமொகிராட் (ஆங்கிலம்: 25-6-'48), பம்பாய்.

மோஹினியே, வாழ்க!) என்று இது தொடங்குகிறது. இதுவும் 'ஜன கண மன' கீதத்தைப் போன்றதுதான். ஆனால் முழுவதும் சம்ஸ்கிருத பாஷையில் இயன்றிருக்கிறது. சொல்லழகு நிரம்பியது.

இவற்றையெல்லாம்விடச் சில அம்சங்களில் பொருத்தமாக இருப்பது கவிஞர் இக்பால் இயற்றியுள்ள 'ஸாரே ஜஹான்ஸே' என்ற கீதம். இது மக்களிடம் அவ்வளவாசப் பரவவில்லை. உருது பாஷையில் அமைந்திருக்கிறது. ஆகையால், இந்திய மக்களில் மிகப் பெரும் பகுதியினர் இதைப் பாட முடியும். இதில் சில பாரசீக வார்த்தைகள் விரவியிருக்கின்றன. சாதாரண மக்களுக்கு அந்த வார்த்தைகளின் அர்த்தம் புரியாது. அதுதான் இதன் குறை.

இதன் முதல் இரண்டு வரிகள் இந்தியாவில் முஸ்லிம் படையெடுப்பைக் குறிக்கிறதா, அல்லவா என்று ஒரு விவாதம் வேறு இருக்கிறது. அந்த வரிகளைத் தவிர, மீதியெல்லாம் தேசீய கீதத்துக்கு முற்றும் பொருத்தமாக இருக்கிறது. கீதத்துக்கு எடுத்துக்கொண்ட பொருள் நன்றாயிருக்கிறது. 'மஜ்ஹப் நஹீம் ஸிகாதா ஆபஸ்மேம் பைர் ரகனு' (மதம் பரஸ்பரப் பகைமையைப் போதிக்கவில்லை) என்ற ஒரு வரி மிகவும் சிறப்பாக இருக்கிறது. தற்காலத்தில் நமக்கு நேரிட்டிருக்கும் சிக்கலைத் தீர்க்கதரிசனம் கண்டவர் போலக் கவிஞர் இங்கே பாடியிருக்கிறார். இத்தனை வருஷகாலமும் இந்தப் பாட்டை மக்கள் பாடச் செய்திருந்தோமானால், நாட்டில் வகுப்புக் கலகங்களே நிகழாமல் ஒருவேளை நாம் தப்பித்துக்கொண்டிருக்கலாம். மற்ற இரண்டு தேசீய கீதங்களிலும் இல்லாத சர்வதேச அரசியல் தத்துவம் இந்தப் பாட்டில் இருக்கிறது. இதில் அடங்கியிருப்பது குறுகிய தேசீயம் அல்ல. என்றாலும், இதுவும் ராணுவ கீதமாக இல்லாமல், புகழ்மாலையாகவே இருக்கிறது. ஆகையால், இதையும் ஏற்க முடியவில்லை.

இன்னொரு கீதம் உண்டு. இந்திய தேசீய காங்கிரஸின் கொடிப்பாட்டு என்று அதைச் சொல்வது தகும். 'விஜயீ விச்வ திரங்கா ப்யாரா, ஜண்டா ஊஞ்சா ரஹே ஹமாரா' (எங்களுடைய இந்தக் கொடி - உலகெங்கும் வெற்றி வாய்ந்த மூவர்ணக் கொடி—என்றென்றும் உயரப் பறக்கட்டும்) என்பது அந்தக் கீதம். அமெரிக்கரின் 'நட்சத்திரங்கள் பொதிந்த கொடி' (ஸ்டார் ஸ்பாங்கிள்டு பானர்) என்ற கொடிப் பாட்டுக்குச் சமமானது இந்தப் பாட்டு.

'வந்தே மாத'ரத்தையும் அமெரிக்க தேசீய கீதத்துக்குச் சமமாகச் சொல்லலாம். அமெரிக்கக் கொடிப் பாட்டு, அவர்களின் கீர்த்தியைப் பாடுவது. அதைப்போலவே நம் காங்கிரஸ் கொடிப் பாட்டும், நம் நாட்டினர் சாதித்த சாதனைகளையே சொல்வது; ராணுவகீதம் அல்ல.

ஆனால், ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கு வேறு இரண்டு ராணுவ கீதங்களும் உண்டு: கப்பல் படைக்கு ஒரு கீதம்; தரைப் படைக்கு ஒரு கீதம். பிரெஞ்சுக்காரருக்கு 'லா மார்ஸேல்' என்று ஒரு ராணுவ கீதம் இருக்கிறது. பூர்ண ஆவேசமும் உணர்ச்சி வேகமும் உள்ள ஒரு ராணுவ கீதத்தை நாமும் இயற்றிக்கொள்ள வேண்டும்.

நமது தேசீய கீதத்திலே மிடுக்கும் வேகமும் இருக்க வேண்டும். அது ஜனங்களைச் செயலுக்குத் தூண்டிவிடவேண்டும்; அவர்களுக்

குத் தேசபக்தியைப் புகட்ட வேண்டும். தவிர, எல்லாருக்கும் புரியக் கூடிய சுலபமான ஹிந்துஸ்தானி பாஷையில் அமைந்திருக்க வேண்டும். ஜாதி, மதம், வர்ணம், மாகாண வேற்றுமை முதலிய பேதங்கள் அதில் துளியும் இருக்கக் கூடாது. விவாதத்துக்குரிய எந்த அம்சமும் அதில் புகக் கூடாது.

'வந்தே மாதர'த்தில் உள்ள பக்தியும் புகழுரையும் அதில் அடங்கியிருக்க வேண்டும்; 'ஜன கண மன' கீதத்தில் உள்ள நம்பிக்கையை அதில் புகுத்த வேண்டும்; 'அயி புவனமன மோஹினி'யில் உள்ள மாட்சிமை அதில் இழைய வேண்டும்; 'ஸாரே ஜஹான்ஸே அச்சா'வில் உள்ள நீதியையும் புத்திமதியையும், 'பட் சலே மௌத்ஸேபி லட்னே, ஹம் ஹிந்துஸ்தானீ ஹைங்'(எமனையும் போரிட்டு வென்று, இந்தியர்களாகிய நாங்கள் முன்னேறுவோம்) என்ற தீரத்தையும் அதில் நிறைக்க வேண்டும். "மனித வர்க்கத்தின் நாகரிகம் முழுவதுமே எங்களுக்குக் கடன்பட்டது. ஏனென்றால் எங்கள் அடையாள முத்திரை சகல நாடுகளிலும் தென்படுகிறது" என்ற வரிகளையும் அதில் பொருத்தமான இடத்தில் சேர்க்க வேண்டும். இந்த அம்சங்களெல்லாம் இழைந்த ஒரு தேசிய கீதம் நமக்குத் தயாராகிவிட்டால் நம் லட்சியங்களுக்கு ஒரு புதிய தூண்டுதல் ஏற்படும். சுதந்தரம் ஒரு நாட்டின் பிறப்புரிமை. அந்தச் சுதந்தரத்தை அடையவும் காப்பாற்றிக் கொள்ளவும் பெரிதும் உதவியாக இருப்பது அதன் தேசிய கீதம்.

அரிசி முனையிலே ஆயிரம் எழுத்து!

ஜேம்ஸ் டபிள்யூ. ஜஹாரி என்பவர் 1929-இல் அற்புதமான ஒரு வேலை செய்தார். அதைக் கேட்டு உலகம் பிரமித்தது. இரண்டு ஸெண்ட் மதிப்புள்ள தபால் தலையில் அவர் இருபதினாயிரம் எழுத்துக்களை எழுதிக் காட்டினார். 1935-இலே அவர் இதைவிடப் பிரமாதமான மற்றொரு வேலையைச் செய்தார். ஓர் அரிசியிலே 9,007 எழுத்துக்களை எழுதினார். உலகம் அவரைச் 'சாம்பிய'னாக மதித்தது.

இதைவிட நுணுக்கமாகக்கூடத் தாம் எழுத முடியும் என்று அவர் உணர்ந்தார். பதின்மூன்று காலனிகளின் பேரும், ஐம்பத்தாறு கையெழுத்துக்களும் சேர்ந்து, மொத்தம் 7,576 எழுத்துக்கள் அடங்கிய அமெரிக்கச் சுதந்தர சாஸனத்தை, ஒரு பூதக் கண்ணாடியின் உதவி கொண்டு, அவர் ஓர் அரிசியின் ஒரு புறத்திலே எழுதினார்!

கெட்டிஸ்பர்க்கில் லிங்கன் பேசிய 1130 சொற்கள் கொண்ட பிரசங்கத்தை ஜஹாரி 2½ அங்குலம் நீளமுள்ள தலைமயிரில் எழுதினார். சாதாரணமாக நாம் எழுதும் எழுத்தில் இரண்டாயிரத்தில் ஒரு பங்கு அளவுள்ள எழுத்துத்தான் அவர் எழுதியதிலே சிறந்த எழுத்து.

தலைமயிரில் அவர் எழுதும் பேனா, மயிரின் பருமனில் அரைக்கால் பங்குதான் இருக்கிறது. அரிசியின் ஒரு புறத்திலே ஜஹாரி 7,576 எழுத்துக்களை எழுதியபோது, அவற்றின் அளவு தலைமயிரில் அவர் எழுதிய எழுத்தில் மூன்றில் ஒரு பாகந்தான் இருந்தது.

—தி எஜுகேஷனல் போகஸ்

சுதந்தரம் பெற்ற இந்தியா தன் தற்காப்பு இயற்கை எல்லைகளை இழந்து நிற்கிறது. இந்த அபாயத்துக்குத் தப்ப வேண்டும்.

இந்தியாவின் தற்காப்பு

சிவராம சாஸ்திரி

இந்தியா தன் சொந்த நன்மையைக் கருதினால், பிரிட்டிஷ் ராணுவப் பாதுகாப்பை நம்பாமல், தனக்கென்று ஒரு தற்காப்புத் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவைப் பிரிட்டன் ஒரு விசித்திரமான நிலைமையில் விட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தற்காப்பு மண்டலத்தை நாம் ஒதுக்கிவிடுவோமானால், நம் நாட்டுக்கு இயற்கையாக உள்ள ஏடென், கொழும்பு, சிங்கப்பூர், கைபர் கணவாய் இந்தக் கேந்திர ஸ்தானங்களையெல்லாம் நாம் இழந்துவிடுவோம். இவையெல்லாம் இனி நம் தற்காப்புக்கு உதவமாட்டா.

வகுப்பு வாதத்தை ஆதாரமாகக் கொண்டு பாகிஸ்தானைச் சிருஷ்டித்துவிட்டார்கள். இது இந்தியாவின் இருதயத்திலே ஆழமான புண்ணை உண்டாக்கிவிட்டது.

சிறிய கைபர் கணவாயைப் பாதுகாக்க வேண்டியது போக, இப்போது இந்தியாவின் தற்காப்பு எல்லை உள்ளுக்குள்ளே பின்வாங்கிப் பஞ்சாபில் 200 மைல் நீளத்துக்கு நீண்டுவிட்டது.

இந்திய அரசாட்சி என்னதான் மதசம்பந்தமில்லாததாக இருந்தாலும், பொருளாதார விஷயங்களில் பாகிஸ்தானுடன் ஒத்துழைப்பது காலக்கிரமத்தில் அசாத்தியமாகிவிடும்.

பாகிஸ்தானில் மில்களும் நிலக்கரியும் இல்லை. அது கோதுமையையும் சணலையும் வைத்துக்கொண்டு, ஐந்து வருஷத்துக்கு மேல் தன் பட்ஜெட்டைச் சரிக்கட்டிக்கொள்ள முடியாது.

பாகிஸ்தானுக்கு இந்தியாவிலிருந்து மூலதனம் கிடைப்பது துர்லபம். ஆகவே, அமெரிக்காவின் மூலதனத்தைத்தான் அது பெற வேண்டும். தனக்குச் சில ராணுவ தளங்களைத் தந்தால்தான், தன் மூலதனத்தை வழங்க அமெரிக்கா சம்மதிக்கும். ருஷியாவைத் தாக்கப் பாகிஸ்தானைத் தன் ராணுவ தளமாக அமெரிக்கா ஆக்கிக்கொள்ளலாம். இது இந்தியாவுக்கு ஆபத்தாக முடியும்.

மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சில முஸ்லிம் நாடுகளைப் போலவே பாகிஸ்தானும் தன்னோடு சேர்ந்துகொண்டு ருஷ்யாவுக்கு விரோதமாயிருக்க வேண்டும் என்று, பிரிட்டன் ராஜதந்திர முயற்சிகள் செய்து வருகிறது. பூகோள அமைப்பை

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜூன் '48),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

லட்சியம் செய்யாமல் உலக முஸ்லிம்களெல்லாம் ஒரே தேசீய இனம் என்று கிளப்பிவிட்ட ஒரு மோசமான சித்தாந்தமே பாகிஸ்தான் ஸ்தாபிதமானதற்குக் காரணம். மத்தியக் கிழக்குப் பிரதேசத்திலிருந்து காலத் சம்ஸ்தானத்தின் வழியாகக் கராச்சிக்கு நேராக ஒரு ரெயில் பாதை வேறு போட்டுவருகிறார்கள்.

ஒவ்வொரு திசையிலும் நமக்கு அபாயம் காத்துக்கொண்டிருக்கிறது. ஆகையால், நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நாம் உயிரோடு வாழ்வதற்கு, போதிய தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவேண்டும். இந்தியா பலத்தோடிருந்தால், பலவீனமாயிருக்கும் எந்த ஆசிய நாட்டுக்குமே அது பாதுகாப்பாகும்.

இந்திய அரசாட்சி மதப்பற்றில்லாததாகவே இருக்கவேண்டும். அப்போதுதான் மலாயா, இண்டொனீசியாபோன்ற தூரக்கிழக்கு நாடுகளின் ஒத்துழைப்பை நாம் பெறமுடியும். அவற்றின் மக்கள் முஸ்லிம்களாக இருந்தாலும், புராதன ஆசியக் கலைப்பண்பாடு துளியும் மாறாமல் அவர்களிடம் இருந்துவருகிறது.

பர்மா, சையாம், சீனா போன்ற சகல ஆசிய நாடுகளுடனும் ராணுவத் தற்காப்பு ஏற்பாடுகளில் நாம் ஒத்துழைக்க வேண்டும். ஆசியாக் கண்டமெங்கும் மூலைமுடுக்கெல்லாம் ரெயில் போக்குவரத்து வசதிகளை அமைக்கவேண்டும். இப்படிச் செய்தோமானால்தான், இப்போது நம்மைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய அரசுகள் விளைக்கக்கூடிய ஆபத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளலாம். விசேஷமான யுத்தக் கருவிகள் செய்வதுபற்றி ஆசியநாடுகள் கூட்டுறவு கொண்டு ஆராய்ச்சி புரிவதும் அவசியம்.

வெளிநாடுகளின் படையெடுப்பிலிருந்து தற்காத்துக்கொள்ள இந்தியா செய்யும் ஏற்பாடுகளிலே இலங்கை ஐக்கியமாகச் சம்மதித்தால், அதற்குப் பாதுகாப்பும், சுதந்தரமும், பொருளாதார உதவியுங்கூட அளிப்பதாக உறுதி கூறி, அதன் நல்லெண்ணத்தை நாம் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்.

நாகபுரியை இந்தியாவின் ராணுவத் தலைநகராக அமைத்துக்கொள்ளவேண்டும். அதை நடுநாயகமாகக்கொண்டு அதிலிருந்து இந்தியாவின் சகல எல்லைப் பகுதிகளுக்கும் எட்டும்படி ரெயில் முதலிய பாதைகளையும் விமான தளங்களையும் சங்கிலித் தொடர்போல் அமைத்துவிடவேண்டும். இப்படி நாடெங்கும் பரவி ஆழமாக இருக்கும் தற்காப்பு ஏற்பாடுகளே நவீன கால யுத்தங்களில் பயன்படும். மாஷினோ, ஸிக்பிரீட் அரண்களைப்போல ஒரே கோடாக அமைந்த தற்காப்பு ஏற்பாடு எதுவும் பயன்படாது.

மேற்கு எல்லையோரம் நெடுகலும் வளைந்து செல்லும்படி ஒரு ரஸ்தா அமைக்கவேண்டும். அந்தப் பாதையெங்கும் அங்கங்கே நிரந்தரமாகக் காவல் படைகளை நிறுத்த வேண்டும். கிழக்குப் பாகிஸ்தான் எல்லையோரம் முழுவதும் இதே போல இன்னொரு ரஸ்தா அமைத்து அதிலும் காவல் படைகளை நிறுத்தவேண்டும்.

வகுப்புவாத உணர்ச்சிகளை ஒழிப்பதற்குச் சிறிதும் மதப்பற்றில்லாத லௌகிகக் கல்வியை மக்களுக்குப் போதிக்கவேண்டும். ஏனென்றால், உள்நாட்டிலே அமைதி நிலவினால்

தான், வெளிப் பகைவரின் படையெடுப்பிலிருந்து நம்மை நாம் தற்காத்துக்கொள்ள முடியும்.

இதுவரையில் காலனிகளாக இருந்த நாடுகளில், நம் நாட்டு மூல தனங்கள் முடங்கியிருக்கக் கூடும். அவை அந்த நாடுகளின் சொந்த நன்மைகளுக்குப் பாதகமாயிருக்குமானால், நம்முடைய அந்த மூல தனங்களைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்துத் தியாகம் செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் அந்த நாடுகளின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொள்ள முடியும்.

ஒவ்வொரு குடியானவனுக்கும் தொழிலாளிக்கும் மாணவனுக்கும் ராணுவக் கல்வி போதிக்க வேண்டும். எத்தனையோ தியாகம் செய்து போராடி வருந்திச் சம்பாதித்த சுதந்தரத்தை அநுபவிக்க அப்போதுதான் நாம் தகுதியுள்ளவர்களாவோம்.

வாலிபனின் கர்வபங்கம்

பிரபல விஞ்ஞானி எடிஸனை ஒரு கெட்டிக்கார வாலிபன் பேட்டி கண்டான். ஸயின்ஸிலே தனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்பது வாலிபனின் எண்ணம்.

வாலிபனிடம் எடிஸன் ஒரு மின்சார பல்பைக் கொடுத்தார். "இதன் உள்ளே இருக்கும் காலி இடத்தின் கன அளவுப் பரப்பைக் கணக்கிட்டுச் சொல், பார்க்கலாம்" என்றார்.

கெட்டிக்கார வாலிபன் எடுத்தான் தன் அளவுக் கருவிகளை. பல்பின் மேலுள்ள கோண கோள வளைவு அளவுகளை யெல்லாம் அளந்து கணக்குப் போட்டான். பிறகு வெகு ஜாக்கிரதையாகக் கண்ணாடியை உடைத்து, அதன் கம்பித் திரிகளையும் அவற்றைச் செருகியிருக்கும் கண்ணாடிக் குழாயையும் வேறுபடுத்தி, அவற்றின் சுற்றளவு கோண அளவுகளை யெல்லாம் வெகு நுட்பமாய்க் கணக்கிட்டான். பின்பு, என்ன என்னவோ க்ஷேத்திர கணித ரீதியான கணக்கெல்லாம் போட்டுத் தசாம்ச பின்னமான ஒரு விடையைக் கண்டுபிடித்தான்.

"பரவாயில்லை. இம்மி தான் பிசகு. அது எவ்வளவு என்பதை இதோ காட்டுகிறேன் கவனி" என்றார் எடிசன்.

பக்கத்திலே அதே மாதிரி இருந்த இன்னொரு பல்பை எடுத்தார். அளவுக் கோடுகள் போட்ட ஒரு கிளாஸில் கொஞ்சம் தண்ணீரைக் கணக்காக ஊற்றினார். அதிலே இந்தப் பல்பின் நுனியை அமுக்கி, அந்த நுனியை ஒரு குறட்டால் ஒடித்தார். பல்பின் உள்ளே காற்றில்லாத சூன்ய வெளியில் கிர் என்று தண்ணீர் பாய்ந்து புகுந்தது. கிளாஸில் குறைந்த தண்ணீர் எவ்வளவு என்று எடிஸன் கணக்குப் பார்த்துக்கொண்டார். இதுதான் சரியான விடை. இந்த விடை சரி என்பதை வாலிபனுக்கு மறுபடியும் ருசுப்பிக்க வேண்டாமா? தண்ணீர் புகுந்த பல்பை அவர் வெளியே எடுத்தார். அளவுக் கோடுகள் போட்ட இன்னொரு வெறும் கிளாஸில் பல்புத் தண்ணீரை ஊற்றினார். அதே விடை கிடைத்தது.

"இதைக் கண்டுபிடிக்க, நாம் எத்தனை அளவெல்லாம் அளந்தோம்; கணக்கெல்லாம் போட்டோம்!" என்று நினைத்துக் கெட்டிக்கார வாலிபன் பெருமூச்சு விட்டான்.

—பாப்புலர் ஸயின்ஸ்

சிறு கதை:

தேவ கன்னிகை

—ராவி

> அவள் காதல் கொண்டாள். சர்வாங்க சுந்தரி அவள். அவனும் அதை நன்ருகக் கண்டான்; பாராட்டினுன். என்ருலும், அவள் அழகு அவனுக்குப் பிடிபடவில்லை. காரணம் உண்டு. ஆருவது மனுகுமாரனின் வருகைக்கு அவள் காத்திருக்கிருள். பூலோகமும் சொர்க்கமும் ஒன்ருகும் சூட்சுமம் இந்தக் கதையிலே இருக்கிறது.

வைவஸ்வத மனுவுக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களில் நாலு பேர் இளமையைக் கடந்துவிட்டவர்கள்; கல்யாணமாகி இல்லறம் நடத்திவந்தார்கள். ஐந்தாவது குமாரன் இளைஞன்; அந்த ஐவருக்குள்ளே மிக அழகன்.

சொர்க்க லோகத்துப் பேரழகியான தேவகன்னிகை இந்த ஐந்தாவது மனுகுமாரனைக் கண்டு மோகித்துப் போனுள். அவனிடம் வைத்த ஆசையால் அவள் நாளுக்கு நாள் உருகிக்கொண்டே வந்தாள். ஒரு புறம் நாணம், கூச்சம்; மறுபுறம் பொறுக்க முடியாத ஆசையால் வந்த வேதனை. தேவலோகத்துக் கட்டுப்பாடு, பெரியோர்களிடம் பயம், தன் ஆசை நிறைவேருமற் போகுமோ என்ற கவலை - இப்படி எல்லாமாகச் சேர்ந்து அவளை அல்லும் பகலும் வாட்டின.

மனு ஒரு நாள் தியானத்தில் அமர்ந்திருக்கையில் இந்தத் தேவ கன்னிகையின் துன்பத்தைக் கண்டுகொண்டார். அவருடைய உள்ளத்திலே அருள் சுரந்தது. அவர் அவளைக் கூப்பிட்டனுப்பினுர். அவள் வந்தாள்.

அவர் மிகுந்த பரிவோடு, மென்மையான குரலில், "அம்மா, உன்னுடைய துன்பம் எனக்குத் தெரியும். இதில் கூச்சப்படுவதற்கு ஏதுமில்லை; அநுசிதமான விஷயமும் இல்லை. நீ எனக்கு மருமகளாக வருவதிலே தேவலோகத்தாருக்கு ஆட்சேபம் இராது. இருந்தாலும், வேறு காரணங்களை உத்தேசித்து, நீ என் ஐந்தாவது பிள்ளையை மணந்துகொள்ளும் எண்ணத்தை விட்டுவிடுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. சீக்கிரமே எனக்கு ஆருவது பிள்ளை பிறக்கப் போகிருன்; அவன் இவர்கள் எல்லோரையும் விட அழகிலும் வீரத்திலும் மிஞ்சியிருப்பான். அவனை நீ கல்யாணம் செய்துகொள்" என்ருர்.

தேவ கன்னிகையின் மனக்கோட்டை சிதைந்தது; அவள் முகம் ஒளிமங்கிப் போயிற்று. எப்படியோ அவள் மூர்ச்சையாகாமல் சமாளித்துக்கொண்டாள். தான் வரித்த ஒருவனை விட்டு மற்றொருவனைக் காதலிப்பதையோ மணப்பதையோ மனதிலுல்கூட அவள்

காப்பிரைட்: ஸரஸ்வதி (ஹிந்தி: ஜூன் '48), அலாஹாபாத்.



அவளுடைய அங்க லக்ஷணங்களைக் கண்டு அவன் சொக்கிப்போனான். ஆனால்!

நினைக்க முடியவில்லை. மனுவின் ஆறுவது பிள்ளையிடத்திலே அவளுக்கு எப்படி ஆசை விழும்! அவள் மனம் சோர்ந்து போயிற்று. உலகம் முழுவதும் அசைவற்று உயிரற்றுச் சூனியமாக அவளுக்குத் தென்பட்டது.

அவள் பேசாவிட்டாலும் மனுவுக்கு அவள் மனநிலை தெரியாமல் இல்லை. அவர் அன்போடு அவளைத் தட்டிக்கொடுத்து, "உன் எண்ணத்துக்கு மாறாக நான் நடக்க மாட்டேன், அம்மா! உன்னுடைய வருத்தம் எனக்குத் தெரியும். இருந்தாலும் சில காலம் வரைக்கும் பொறுத்திருந்து, பிறகு இதைப்பற்றி யோசிப்போம். இதன் நடுவிலே நீ எங்கள் குடும்பத்தோடும் குமாரனோடும் சங்கோசமில்லாமல் பழகிக் கொண்டிரு. இதற்குத் தேவையான அநுமதியை நான் தேவலோகத்தாரிடமிருந்து உனக்கு வாங்கித் தருகிறேன்" என்றார்.

அவளுடைய ஆசை மீண்டும் கொழுந்து விட்டது. மகிழ்ச்சியும் நாணமும் முகத்திலே தோன்ற, அவள் மனுவைப் பணிந்து நின்றாள். அவருடைய ஆசி பெற்றுத் திரும்பினாள்.

மனுகுமாரனும் தேவகன்னிகையும் அடிக்கடி சந்தித்தார்கள். முதல் தடவை பார்த்தபோதே அவளுடைய ஒவ்வோர் அங்கத்தையும் கண்டு அவன் சொக்கிப் போனான்.

மற்றும் பல கலைகளோடு எழிற்கலையையும் அவன் பயின்று வந்தான். பெண்ணின் அழகைப் பயில்வதும் அந்தக் கலையிலே ஒரு பகுதி.

அவர்கள் இருவரும் நீண்ட நாள் பழகினார்கள். இதனிடையே அவன் தேவகன்னிகையின் தலைமுதல் கால்வரைக்கும் எல்லா அங்க லக்ஷணங்களையும் ஆராய்ந்து ஒரு மகா காவியம் எழுதிவிட்டான். அவளும் அந்த வர்ணனைகளைக் கேட்டு உள்ளம் பூரித்து, அவனுக்குத் தன்னிடமுள்ள பிரேமையை எண்ணி எண்ணிப் பல இன்பக் கனவுகளிலே ஆழ்ந்துவிட்டாள்.

ஒரு நாள் மனு அவர்கள் இருவரையும் கூப்பிட்டனுப்பினார்.

"என்னம்மா, இத்தனை நாள் குமாரனோடு பழகிய பிறகு, உன்னுடைய எண்ணத்தில் ஏதாவது மாறுதல் உண்டா? நீ அவனைக் கணவனாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறாயா?" என்று அவர் தேவகன்னிகையைக் கேட்டார்.

அவள் நாணத்தினால் தலைகுனிந்து, தன் பழைய விருப்பத்தையே தெரிவித்தாள்.

"நீ என்ன சொல்லுகிறாய், குமாரா? அழகியான இந்தத் தேவமங்கையை மனைவியாக ஏற்றுக்கொள்ள உனக்குப் பிரியமா?"

"அழகியான தேவமங்கை!" என்று குமாரன் வியந்துகொண்டே, "தேவமங்கைகளிலே - ஏன், மங்கைகளிலே - அழகி என்று ஒருத்தி இருக்கிறாளா, அப்பா? எழிற்கலையிலே பலவிதமான அழகுருவங்களை நான் கண்டிருக்கிறேன். சராசர சிருஷ்டியிலே ஒவ்வோர் அழகுப் பொருளையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து, ஒவ்வோர் அங்கத்தின் அழகையும் விகாரத்தையும் நான் அலசி ஆராய்ந்திருக்கிறேன். இந்தத் தேவகன்னிகையின் எல்லா அங்கங்களும் - தலையிலிருந்து கால்வரைக்கும் - அழகாக இருக்கின்றன என்று நான் சொல்ல முடியும். மானின் கண்ணும், கிளியின் மூக்கும், புறாவின் கழுத்தும் இவளுடைய அவயவ சோபைக்கு முன்பு எம்மாத்திரம்! இவளுடைய இதழ்களிலே நந்தனவனத்துக்

கொவ்வைக்கனிகளைவிட ஆயிரம் மடங்கு அழகும் சுவையும் இருக்கின்றன. இவளுடைய கன்னங்களிலே மணமும் மென்மையும் இருக்கின்றன. முழு எழிலுக்கும் இருப்பிடமான இவளுடைய ஒவ்வோர் அங்கத்தின் அழகையும் நான் போற்றுகிறேன்; ஆனால் இந்த மங்கையினிடத்திலே எவ்வித அழகும் இருப்பதாக எனக்குத் தென்படவில்லை. அழகும் கவர்ச்சியும் இவளுடைய வெவ்வேறு அவயவங்களில் இருக்கின்றனவே தவிர, இவளிடம் இல்லை!" என்றான்.

மனு தேவகன்னிகையை நோக்கி, "பார்த்தாயா அம்மா! இவன் உன்னை மணந்துகொள்ள ஏற்றவனல்ல என்று நான் சொன்னதற்கு இதுதான் காரணம். என்னுடைய இந்தப் பிள்ளையின் சிந்தனை ஓர் எல்லைக்குட்பட்டேதான் வேலை செய்யும். இவன் எந்தப் பொருளையும் முழுசாகப் பார்க்காமல், அதன் வெவ்வேறு பகுதிகளைத்தான் பார்க்க முடியும். முழு உருவத்தை ஊகித்துப் பார்க்கக்கூட இவனால் முடியாது. இவன் யாரையுமே அன்பைக் கொண்டு அளவிட மாட்டான்; வெவ்வேறு அவயவங்களை ஆராய்ந்து பார்க்கத்தான் இவனுக்குத் தெரியும். இந்த நிலையிலே நான் உனக்குச் சொன்ன யோசனைதான் சரி. என் ஆறாவது மகன் உன் அழகையும் அன்பையும் மதிப்பிட்டுப் போற்றுவான்" என்றார்.

தேவகன்னிகைக்கு இனி வேறு வழி இல்லை. அவள் தன் உள்ளத்திலே வரித்திருந்த வாலிபன், இப்போது அவள் கண்ணுக்கு, இருதயமற்ற அழகிய கல்லுருவாகத் தோற்றினான். அவள் கண்ணிலே துளும்பிய நீர், மனுவின் கட்டளைக்கு அவள் பணிந்ததைக் குறிப்பிட்டது.

என்றும் இளமையெழில் வாய்ந்த தேவகன்னிகை, மனுவின் ஆறாவது குமாரனை ஆவலோடு எதிர்பார்த்து, ஒவ்வொரு நாளாகக் கடத்தி வருகிறாள். அந்த ஆறாவது குமாரன் பிறந்து, குழந்தைப் பிராயத்தை இப்பொழுது தாண்டிவிட்டான். ஒவ்வொரு பொருளையும் பல கோணங்களிலிருந்தும் மொத்தமாகவும் அறிவைக்கொண்டும் உள்ளத்தைக்கொண்டும் கண்டு அறியும் ஆற்றல் அவனிடம் இயல்பாகவே தென்படுகிறது. இன்று உலகத்தில் பெரும்பாலான மனிதர்கள் மனுவின் ஐந்தாவது குமாரனைப் போலவே எதையும் தனித்தனியே விண்டு அலசிப் பார்ப்பதிலேயே மூளையைச் செலுத்தி, எந்த உண்மையையும் எழிலையும் அதன் சுய உருவத்திலே காணச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்களாம். இனிமேல் ஆறாவது மனுகுமாரனைப்போல அறிவும் உள்ளமும் இணைந்து, எந்தப் பொருளையும் தனித்தனியாகவும் மொத்தமாகவும் கண்டு ஒரு முடிவுக்கு வரும் ஆற்றலை அவர்கள் பெறுவார்களாம். அப்போது சொர்க்கமும் பூமியும் ஒன்றாக இணைந்துவிடுமாம்.

ரெயில் பிரயாணிகள்

இந்திய ரெயிலில் முதல் வகுப்பிலே கார்டிடம் பிரயாணி முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார்; மூன்றாவது வகுப்பிலே பிரயாணியிடம் கார்டு முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார். இரண்டாவது வகுப்பைப் பொறுத்தமட்டில் பிரயாணிகளே ஒருவருக்கு ஒருவர் முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார்கள்.

—மார்க்ட்வெயின்.

சொல் பொருந்துமா?

இழே வரும் சொற்களைப் பலர் உபயோகப்படுத்துகிறார்கள். பல சமயங் களில் அவை பொருத்தமாக அமைவதில்லை. தனியே கொடுத்துள்ள வார்த்தைகளில் பொருத்தமானவற்றைப் பின்னே கொடுத்துள்ள வாக்கியங்களில் பொருத்திப் பாருங்கள்.

வார்த்தைகள்:

1. கணக்கு

2. அளவு

3. திட்டம்

பொருத்த வேண்டிய வாக்கியங்கள்:

(க) பாயசத்துக்குச் சர்க்கரையை... ஆகப் போடாவிட்டால் ருசி கெட்டுவிடும்.

(ங) அதிகாரிகளிடம் ... ஆகப் பழகாவிட்டால் வீண்தொல்லைக்கு இடமாகும்.

(ச) எதையும்... ஆகச் சொல்லுவதுதான் விஞ்ஞானியின் லட்சணம்.

4. கலை

5. களை

(ஞ) அந்தச் சிறு குழந்தையின் முகம் வெகு... ஆக இருக்கிறது.

(ட) வானத்தில் சந்திரன் பூரண...யோடு பிரகாசிக்கிறான்.

6. ஈந்தான்

7. தந்தான்

8. கொடுத்தான்

(ண) என் நண்பன் எனக்கு ஒரு புஸ்தகம்...

(த) அரசன் புலவனுக்குப் பரிசு...

(ந) குருசீடனுக்குக் காஷாயம்...

9. சீறினான்

10. சினந்தான்

(ப) கணக்கைத் தவறாகப் போட்ட மகனைத் தந்தை...

(ம) வேலையைக் கெடுத்து வைத்த சேவகனை எஜமானன்...

11. முழக்குதல்

12. அடித்தல்

(ய) தெருக் கூத்தில் பறைக்காரர் விறுவிறுப்பாகப் பறை...

(ர) மார்கழி மாதம் விடியற் காலையில் தாதர் தம் சங்கை உரக்க...

13. பெறுதல்

14. வாங்குதல்

(ல) கல்யாணத்துக்குப் பணம் போதவில்லை என்று மார்வாடியிடம் நகையை வைத்துக் கடன்...

(வ) நாலு வருஷத்துக்குப் பிறகு நண்பன் திருப்பிக்கொடுத்த கடனை நாணு நன்றியோடு...

[விடை 6-ஆம் பக்கம் பார்க்க]

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

கடைசி வாழ்த்து

இந்தியாவின் சென்ற கால சரித்திரம் மகத்தானது; அதன் வருங் கால சரித்திரமும் மகத்தானதாகவே இருக்கப் போகிறது. இந்தியாவுக்குப் பல பிரச்னைகள் இருக்கின்றன; கடுமையான பிரச்னைகள். திடீரென்று சுதந்தரம் அடையும் எந்த நாட்டுக்கும் இத்தகைய பிரச்னைகள் தோன்றித்தான் தீரும். உலகமெங்குமே இதற்கு முன் என்றுமில்லாதபடி கஷ்டங்கள் தோன்றியுள்ள காலத்தில் இந்தியா சுதந்தரம் அடைந்திருக்கிறது. அன்றியும் மனித சமூகத்தில் ஆறில் ஒரு பங்கு இருக்கிறார்கள் இந்திய மக்கள். அதனால் இந்தியாவின் பிரச்னைகள் மேலும் கடுமையாக இருக்கின்றன. என்றாலும், இந்தியா தன் பிரச்னைகளைச் சமாளித்துக் கொள்ளும், கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ளும் என்று நான் அறிவேன். உலகத்திலே உன்னதமான ஸ்தானத்தை இந்தியா அடையப்போகிறது; உலக விவகாரங்களிலே உன்னதமான சேவையை அது புரியப் போகிறது. இது நிச்சயம்.

உலகத்திலேயே பெரும் செல்வம் புதைந்து கிடக்கும் நாடு இந்தியா. இங்கே பூமிக்குள்ளே நிலக்கரி, இரும்பு, மாங்கனிஸ், மற்றும் பல மதிப்பரிய கனிப் பொருள்களெல்லாம் பரவிக் கிடக்கின்றன; நீர்மின்சாரம், பாசனம் முதலியவற்றைப் பிரமாதமாய்ப் பெருக்கிச் செழிப்புண்டாக்க வசதிகள் இருக்கின்றன. இவையெல்லாம் போக, சகல செல்வங்களுக்கும் மூலாதாரமான பல கோடி மக்களின் பலம் இருக்கிறது. இந்திய மக்கள பல்லாண்டு பல்லாண்டாகக் கைத்தொழில் புரிவதில் தேர்ச்சி பெற்று வந்திருக்கிறார்கள். புதிய யந்திர யுகத்தின் தொழில் நுட்பங்களைப்பற்றிய ஞானமும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் மேதை இந்திய மக்களிடம் புதைந்து கிடக்கிறது. அதை அவர்கள் வெளிப்படுத்தி, தங்களுக்கும் உலகத்துக்குமே செல்வச்செழிப்பளிக்கப் பயன்படுத்த முடியும். இந்தச் சிருஷ்டி சக்திகள் முழுவதும் வெளிப்பட வேண்டுமானால், மக்கள் அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டும்; சமூகச் சீர்திருத்தம் பரவ வேண்டும்; சமுதாய வாழ்க்கை உணர்ச்சி வலுக்க வேண்டும். இவையெல்லாம் நிச்சயம் நடைபெறும்.

இந்த மூலதனங்களுக்கெல்லாம் பெரிய மூலதனம், இந்திய மக்களின் குணந்தான். என் வாழ்க்கையிலேயே என்றும் கண்டிராத பிரம்மாண்டமான ஜனக்கூட்டங்களை இந்தியாவில் நான் கண்டேன் — இந்திய சுதந்தரத்திலும், காந்திஜியின் தகனக் கிரியையிலும், அலாஹாபாது கும்பமேளாவிலும், சரித்திரப் பிரசித்தமான மற்றும் பல சம்பவங்களிலும் கண்டேன். இந்த ஏராளமான மக்களின் நல்ல சுபாவமும் நட்பும் என்னால் ஒரு நாளும் மறக்க முடியாதவை. அப்போதெல்லாம் நான், 'இதோ இந்தியாவின் வருங்கால மாட்சிக்குரிய மூலதனத்தைக் காண்கிறேன்' என்று எண்ணினேன்.

உங்கள் அரசியல் திட்டத்தின் நகல், உலகத்தின் மகத்தான மானிட உரிமைச் சுதந்தர சாசனங்களுக்குள் ஒன்றாக விளங்குகிறது. நீங்கள் அதற்குத் தகுதி உள்ளவர்களாயிருங்கள்.

—லார்டு மவுண்ட்பாட்டன் (அகில இந்திய ரேடியோவில், ஜூன் 20-ஆம் தேதி விடைபெறும்போது பேசிய பேச்சு.)

Regd. No. M. 4975

கவர்னர் ஜெனரல் பதவி 1
சொல்லியா தெரியும்? . . . . பகினி 7
கனிகான் கடிதம் . . . . இந்தியா 9
உடம்பின் கவசம் . . . . பீப்பிள்ஸ் ஹெல்த் 15
மகாகவி பாரதி . . . . சிந்தனை 18
தர்மன் தீர்மானம் . . . . மகாகவி பாரதி 19
பெண்களின் முன்னணி . . . . ஸ்த்ரீ 22
படிப்புக்காக உத்தியோகம். . . . . மாத்ருபூமி 25
தமிழ்நாட்டுப் பொதுஜனம். 28
பாதுஷாவின் விகடகவி. . . . . ஆனந்தவாணி 31
சிக்கலுக்கு வைத்தியம் . . . . பிரஜாமதம் 33
பழங்காலத்து நகைகள் . . . . பிக்சர் போஸ்ட் 36
பணத்தை அறியாத நாடு . . . . நவயுக் 41
உப்பு - உயிரின் அமுதம். 46
காஷாயம் தரித்த வெள்ளைக்காரர். . . . . . ஆந்திர பத்திரிகா 49
முகலாயர் காதல். 51
ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி . . . . லீடர் 54
பால் கொடுக்கும் தாய் . . . . . . பேரெண்ட்ஸ் மகஸீன் 57
புது மாப்பிள்ளையும் பெண்ணும் . . . . காரவான் 62
கையெழுத்து ஜோஸ்யம் . . . . கர்மவீர 65
ரஜாக்கர்கள் . . . . அமிர்த பஜார் 69
நமது தேசீய கீதம். . . . . நியூ டெமொக்ராட் 78
இந்தியாவின் தற்காப்பு. . . . . மாடர்ன் ரெவ்யூ 81

விசேஷப் பகுதிகள்

பாபுராவ் பதில் சொல்லுகிறார் 13
காந்தி: வாழ்வும் வாக்கும் 44
நகைச் சித்திரம் 60
எது சரி? 68
திரட்டு 75
குழந்தைகள் குதூகலம் 76
சிறுகதை: தேவ கன்னிகை - ராவி . . . . ஸரஸ்வதி 84
சொல் பொருந்துமா? 88